KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# வரலாறு
# SEJARAH

ஆண்டு 4 TAHUN 4

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி

SEKOLAH JENIS KEBANGSAAN (TAMIL)




**Penulis**
Dr. Sivarajan a/l Ponniah
Ahmad Hishanuddin bin Ramli
Noor Syazana binti Taib

**Editor**
Tamil Arasi Sinnasamy

**Pengurus Projek**
Mohd Muhaimi
bin Abdul Rahman

**Penterjemah**
Kadiravan a/l Perinan

**Pereka Bentuk**
Zainal Abidin bin Hasan
Mazlan bin Mohamed
Mogan Kumar Raju

**Ilustrator**
Rozlin Azrar bin Abd Azib
Mohd. Sazali bin Ibrahim

DBP
DEWAN BAHASA DAN PUSTAKA
KUALA LUMPUR
2019

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No. Siri Buku: 0037

KK 959-221-0106041-49-2651-20101
ISBN 978-983-49-2651-9

Cetakan Pertama 2019
© Kementerian Pendidikan Malaysia 2019

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

Diterbitkan untuk Kementerian Pendidikan Malaysia oleh:
Dewan Bahasa dan Pustaka,
Jalan Dewan Bahasa,
50460 Kuala Lumpur.
No. Telefon: 03-21479000 (8 talian)
No. Faksimile: 03-21479643
Laman Web: http://www.dbp.gov.my

Reka Letak dan Atur Huruf:
Percetakan Haji Jantan Sdn. Bhd.

Muka Taip Teks: Anjal InaiMathi
Saiz Muka Taip Teks: 14 poin

Dicetak oleh:
Mudah Urus Enterprise Sdn. Bhd.,
No. 143, Jalan KIP 8,
Taman Perindustrian KIP,
Bandar Sri Damansara,
52200 Kuala Lumpur.

## PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang berikut:

- Pakar Rujuk Kurikulum Sejarah dan Buku Teks Sejarah, Kementerian Pendidikan Malaysia
  - Prof. Dr. Ishak bin Saat (Pengerusi)
  - Prof. Dr. Ooi Keat Gin
  - Prof. Datin Dr. Mahani binti Musa
  - Prof. Dr. Ismail bin Ali
  - Prof. Madya Dr. Sivachandralingam a/l Sundara Raja
  - Prof. Madya Dr. Neilson Ilan anak Mersat
  - Prof. Madya Dr. Zuliskandar bin Ramli
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia
- Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia
- Jawatankuasa Peningkatan Mutu, Dewan Bahasa dan Pustaka
- Jawatankuasa Pembaca Luar, Dewan Bahasa dan Pustaka
- Profesor Dato' Dr. Mokhtar bin Saidin
- Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia
- Jabatan Warisan Negara
- Arkib Negara Malaysia
- Jabatan Muzium Malaysia
- Lembaga Penggalakan Pelancongan Malaysia (Tourism Malaysia)
- Galeri Arkeologi Lembah Lenggong, Perak
- Muzium Arkeologi Lembah Bujang, Sungai Petani, Kedah
- Sekolah Kebangsaan Permatang Tok Mahat, Nibong Tebal, Pulau Pinang
- SJK(C) Chung Hua, Simunjan, Sarawak
- SJK(T) Taman Tun Aminah, Skudai, Johor
- Semua pihak yang terlibat secara langsung atau tidak langsung dalam usaha menjayakan penerbitan buku ini.








# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| **முன்னுரை** | | *iv* |
| அலகு 1 | வரலாறு அறிவோம் | 2 |
| அலகு 2 | நானும் குடும்பமும் | 16 |
| அலகு 3 | பள்ளி வரலாறு | 30 |
| அலகு 4 | என் வசிப்பிட வரலாறு | 44 |
| அலகு 5 | உறைபனி யுகம் | 58 |
| அலகு 6 | வரலாற்றுக்கு முந்தைய காலம் | 72 |
| அலகு 7 | பண்டைய மலாய் அரசு | 86 |
| அலகு 8 | மலாக்கா மலாய் மன்னராட்சியில் இணையற்ற தலைவர்கள் | 104 |
| அலகு 9 | மலாக்கா மலாய் மன்னராட்சியின் தோற்றுநர் | 120 |
| அலகு 10 | இணையற்ற பெண்டாஹாரா, துன் பேராக் | 138 |
| அலகு 11 | இணையற்ற லக்சமணா, ஹங் துவா | 154 |
| துணைநூல் பட்டியல் | | 169 |










# முன்னுரை

தமிழ்ப்பள்ளிகளுக்கான நான்காம் ஆண்டு வரலாற்றுப் பாடநூல், மலேசியக் கல்வி அமைச்சின் தொடக்கப்பள்ளிகளுக்கான சீராய்வு செய்யப்பட்ட தர அடிப்படையிலான ஆவணத்தின் (2017) அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இப்பாட நூலானது பண்புநெறி, நாட்டுப்பற்று, குடியியல், குடியுரிமை ஆகிய கூறுகளை வழியுறுத்துகின்றது. இக்கூறுகள் தன்னாளுமையையும் போட்டியிடும் ஆற்றலையும் நாட்டுப்பற்றையும் கொண்ட குடிமக்களை உருவாக்கும் எனக்கூறின் அது மிகையாது.

இப்பாட நூலின் உள்ளடக்கமானது கண்டறிமுறை, எதிர்காலவியல், சூழமைவு, நிகழாய்வு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன் போன்ற பல்வகை கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளையும் 21ஆம் நூற்றாண்டு திறன்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நூலில் ஆய்வுச் சிந்தனை, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை கொண்ட மாணவர்களை உருவாக்கும் நோக்கில், உயர்நிலைச் சிந்தனைத் திறனும் மனமகிழ் நடவடிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு, மாணவர்கள் தகவல்களைப் பெற ஆய்வு மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் மாணவர்களிடத்தில் திறனையும் பட்டறிவையும் மேலோங்கச் செய்யும் என்பது திண்ணம். மாணவர்கள் பச்சாதாப உணர்வு கொண்டு வரலாற்றை உய்த்துணர்வர் எனவும் நம்பப்படுகிறது. இதன் வாயிலாக, வெளிப்படையான சிந்தனையையும் தன்னாளுமையையும் பெற்ற மாணவரை உருவாக்க இயலும்.

இவ்வரலாற்றுப் பாடநூலில், நாட்டின் தொடக்கக்கால வரலாறு ஐந்து முக்கிய தலைப்புகளில் எழுத்தப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

**தலைப்பு 1 : வரலாறு கற்போம் வாரீர்.**

இத்தலைப்பில் வரலாறு என்பதன் பொருள், காலக்கருத்துரு, வரலாற்று மூலம், ஆய்வுநெறிகள், காரணமும் விளைவும், வரலாற்றின் முக்கியத்துவம், வரலாற்று அறிவுக் கூறுகள் ஆகியவை குறித்து அறிமுகம் செய்யப்படுகின்றது. இதைத் தவிர்த்து, தன் வரலாறு, குடும்ப வரலாறு, பள்ளி வரலாறு, வசிப்பிட வரலாறு ஆகியவை பற்றிய ஆய்வுகளின் வாயிலாக வரலாறு தொடர்பான புரிதலும் வலுப்படுத்தப்படுகின்றது.

**தலைப்பு 2 : உறைபனி யுகம்**

இத்தலைப்பு உறைபனி யுகத்தின் காலவரைக்கோட்டிற்கேற்ப தென்கிழக்காசியாவின் நிலப்பரப்பில், குறிப்பாக மலேசியாவில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிக்கின்றது. மாணவர்கள் அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்களைக் கொண்டு சான்றுகளை ஆராய்ந்து புவியியல் அறிவையும் வரலாற்று அறிவையும் தொடர்புபடுத்துவர். இதன்வழி அவர்களின் மனத்தில் இறைவனின் அருட்கொடையான இயற்கையின் இயைபைப் பாதுகாக்கும் பண்பையும் விதைக்க முடியும்.

**தலைப்பு 3 : வரலாற்றுக்கு முந்தைய காலம்**

இத்தலைப்பில் வரலாறு என்பதன் பொருள், வரலாற்றுக்கு முந்தைய கால அமைவிடங்கள், அக்கால மனிதர்கள் பயன்படுத்திய கருவிகள், அவர்களின் சமூகப் பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விவரிக்கப்படுகின்றது. வரலாற்றுக்கு முந்தைய கால வாழ்க்கைக்கும் தற்கால வாழ்க்கைக்கும் இடையே ஏற்பட்ட மாறுதல்களையும் தொடர்ச்சியையும் மாணவர்கள் அறிந்து கொள்வதற்குக் கண்டறியும் திறனும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்வழி மாணவர்கள் நாட்டின் பாரம்பரியத்தை விலைமதிப்பிலா செல்வக் களஞ்சியமாக எண்ணி போற்றும் மனப்பான்மையைப் பெறுவர்.

## தலைப்பு 4 : பண்டைய மலாய் அரசு

இத்தலைப்பு மலாக்கா மலாய் மன்னராட்சிக்குமுன் தோன்றிய பண்டைய மலாய் அரசுகளைக் குறித்து விவரிக்கின்றது. இதில் பண்டைய மலாய் அரசுகளின் பெயர், அமைவிடம், பொருளாதார நடவடிக்கைகள், அரசதந்திர உறவு ஆகியவை குறித்து விவரிக்கப்படுகின்றது. இத்தலைப்பின்வழி மாணவர்கள் கடந்த காலத்தைத் தற்கால வாழ்க்கையுடன் பொருந்தும் வகையில் ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றலைப் பெறுவதோடு நாட்டின் பூர்வீகத்தைப் போற்றும் பண்பையும் பெறுவர்.

## தலைப்பு 5 : மலாக்கா மலாய் மன்னராட்சியின் இணையற்ற தலைவர்கள்


இத்தலைப்பு மலாக்கா மலாய் மன்னராட்சியின் இணையற்ற தலைவர்கள் குறித்து விவரிக்கின்றது. மேலும், இத்தலைப்பில் மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தின் சமூகக் கட்டமைப்பு, இணையற்ற தலைவர் என்பதன் பொருள், சுல்தான், பெண்டஹாரா, லக்சமணா ஆகியோரின் பொறுப்புகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இணையற்ற தலைவர்களின் வரிசையில் பரமேஸ்வரா, பெண்டாஹாரா துன் பேராக், லக்சமணா ஹங் துவா ஆகியோர் அடங்குவர்.

தமிழ்ப்பள்ளிகளுக்கான நான்காம் ஆண்டு வரலாற்றுப் பாட நூலில் இடம்பெற்றுள்ள இந்த 5 தலைப்புகளும் 11 அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அலகும் நான்காம் ஆண்டுக்கான தர அடிப்படையிலான ஆவணத்திலுள்ள கற்றல் தரங்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் கூடுதல் தகவல்களைப் பெறுவதற்குத் துணைசெய்யும் வகையில் இப்பாடநூலின் இறுதியில் துணைநூல் பட்டியலும் வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களும் மாணவர்களும் இப்பாடநூலை எளிதாகப் பயன்படுத்துவதற்குத் துணைசெய்யும் வகையில் பின்வருமாறு சில படவுருக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.



**சாரம்**
ஓர் அலகு தொடர்பான பொதுவான கண்ணோட்டத்தை வழங்குகின்றது.





**அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்**
இத்திறனைக் கைவரப்பெறுவதன்வழி மாணவர்கள் வரலாற்று நிகழ்வுகளைப் பகுத்தாய்வு செய்ய முடிகிறது. வரலாற்று அடிப்படைக் கூறுகள், காலக் கருத்துரு, காலநிரல், கால மாற்றம், சான்றுகளை உறுதிசெய்தல், கற்பனை செய்தல், பச்சாதாபம் கொள்ளுதல், கடந்த காலச் சிக்கல், கடந்த கால ஒப்பீடு, மூலத்தைக் கண்டறிதல் ஆகியவை அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்களாகும்.



**நீங்கள் கற்கப் போவது என்ன?**
பனுவல்கள், கேள்விகள், நடவடிக்கைகள் போன்றவற்றின் வாயிலாக மாணவர்கள் கற்கவிருக்கும் கூறுகள் தெரிநிலையாகவும் புதைநிலையாகவும் வெளிப்படுத்தப்படுவதைக் குறிக்கின்றது.



**குடியியல் நெறி**
மாணவர்களிடத்தில் வளர்க்கப்பட வேண்டிய பண்பு நெறிகளைக் குறிக்கின்றது.



**அருஞ்சொல்**
கடினமான சொற்களின் பொருள்கள் விளக்கப்படுவதைக் குறிக்கின்றது.



**உயர்நிலைச் சிந்தனைத் திறன்**
வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான சிந்தனையைத் தூண்டுவதற்கு உயர்நிலைச் சிந்தனைத் திறன் கேள்விகள் வழங்கப்படுவதைக் குறிக்கின்றது.

**நடவடிக்கை**
உருவாக்குவோம் வாரீர், நிகழாய்வு, தகவல் தொடர்புத் தொழில்நுட்ப நடவடிக்கைகள், எதிர்காலவியல், 21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை போன்ற சுயக்கற்றல் நடவடிக்கைகளும் வகுப்பறைக்கு வெளியே நடத்தப்படும் கற்றல் நடவடிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளதைக் குறிக்கின்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**
ஒன்றைக் குறித்து விரிவாகவும் ஆழமாகவும் தெரிந்துகொள்ள வழங்கப்பட்ட கூடுதல் விவரங்களைக் குறிக்கின்றது.

**அறிவுக்கு வேலை**
வரலாற்று நிகழ்வுகளைக் குறித்த புரிதலை அறிய மாணவர்களிடம் கேட்கப்படும் சுலபமான கேள்விகளைக் குறிக்கின்றது.

**கற்றல் தரமும் குடியியல் கூறுகளும்**
விளக்கம், கேள்வி, நடவடிக்கைகளில் ஒவ்வொரு தலைப்பிலும் மாணவர்களின் கற்றல் அடைவைத் தெரிநிலையாகவும் புதைநிலையாகவும் வெளிப்படுத்தப்படுவதைக் குறிக்கின்றது.

**ஆசிரியர் குறிப்பு**
ஒவ்வொரு அலகிலும் கற்றல் கற்பித்தலைச் சிறந்த முறையில் நடத்துவதற்குத் துணைபுரிவதைக் குறிக்கின்றது.

**QR நோக்குக் குறியீடு**
காணொளி அல்லது பிற ஆவணங்களிலிருந்து கூடுதல் தகவல் பெறப்படுவதைக் குறிக்கின்றது.


**மீட்டுணர்வோம்**
ஒவ்வொரு அலகின் இறுதியிலும் மாணவர்கள் கற்ற தலைப்பை மீட்டுணர கொடுக்கப்பட்டுள்ள சுருக்கத்தைக் குறிக்கின்றது.

**சிந்தித்துப் பதிலளி**
கற்ற தலைப்பு குறித்த புரிதலை அறிய கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பயிற்சிகளைக் குறிக்கின்றது.

**நாட்டை நேசிப்போம்**
மாணவர்கள் ஒவ்வொரு அலகிலும் கற்றவற்றை மதிப்பீடு செய்து தனிநபர் செயல், சமுதாயத்தினரின் செயல், நாட்டிற்கான செயல் ஆகியவற்றைத் தொடர்படுத்த இயலும். இதன்வழி மலேசிய இனம் என்ற அடையாளத்தை எண்ணி பெருமிதம் கொள்வதையும் இப்படவுரு குறிக்கின்றது.

தமிழ்ப்பள்ளிக்கான இப்பாடநூல் கற்றல் கற்பித்தலின்வழி மாணவர்களின் வரலாற்று அறிவை மேம்படச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நூல் மாணவர்கள் அறிவையும் திறனையும் வளர்த்துக் கொள்வதோடு உயர்நெறிப் பண்புகளையும் அமல்படுத்த வழிவகை செய்யும். மேலும், நாட்டை நேசிக்கும் குடிமகனாக மாணவர்கள் தன்னாளுமையை வலுப்படுத்திக் கொள்வர் என்பதுவும் திண்ணம்.

# நாட்டின் தொடக்ககால வரலாறு





# அலகு 1

# வரலாறு அறிவோம்



31 ஆகஸ்ட்டு 1957இல் கூட்டரசு மலாயாவின் சுதந்திரப் பிரகடனம்
(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)

## சாரம்

வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகள் தொடர்பான அறிவாகும். வரலாற்று அறிஞர்கள் பல்வேறு மூலங்களையும் ஆய்வு நெறிகளையும் பயன்படுத்தி வரலாற்றை எழுதுகின்றனர். இந்த அலகு வரலாற்றின் பொருள், மூலம், ஆய்வுநெறி, கால இடவெளிக் கருத்துரு, வரலாற்று நிகழ்வுகளின் காரண விளைவுகள் ஆகியவற்றை விவரிக்கின்றது.



## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. வரலாற்றின் பொருளைக் கூறுதல்.
2. வரலாற்று மூலங்களை அடையாளங்காணுதல்.
3. வரலாற்று ஆய்வுநெறிகளை விளக்குதல்.
4. வரலாற்றில் கால இடவெளிக் கருத்துருவை வேறுபடுத்துதல்.
5. வரலாற்று நிகழ்வுகளின் காரண விளைவுகளை விவரித்தல்.

## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. வரலாற்று மூலங்களை அடையாளங்காணுதல்.
2. வரலாற்று நிகழ்வின் காரணத்தையும் விளைவையும் காணல்.
3. நிகழ்வையும் மாற்றத்தையும் காலநிரலுக்கேற்ப விளக்குதல்.


## குடியியல் நெறி

- அன்புடைமை



# வரலாறு என்பதன் பொருள்

வரலாறு என்பது கடந்த காலத்தில் உண்மையாக நடந்த நிகழ்வுகளாகும். வரலாற்று நிகழ்வுகளை எளிதில் விளங்கிக்கொள்ள வரலாற்றின் பொருளை அறிந்திருப்பது அவசியம் ஆகும். வரலாற்று அறிஞர்கள் வரலாற்றின் பொருளைக் குறித்துத் தத்தம் கருத்துகளைக் கூறியுள்ளனர்.



வரலாறு என்பது மனிதர்களின் செயல்பாடுகளையும் அவர்கள் அவ்வாறு செயல்பட்டதற்கான காரணங்களையும் விளக்கும் கதைகளாகும்.

ஹெரோடொட்டூஸ்
(மூலம்: www.history.com)



மலாயாவில் ஜப்பானிய ஆதிக்கம் (1942-1945)
(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)


**அருஞ்சொல்**

**நாகரிகம்**: ஓர் இனத்தின் சமூகப் பண்பாட்டு வளர்ச்சி



வரலாறு மனிதனின் நாகரிகத்தையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும் விவாதிக்கின்றது.

இப்னு கல்டுன்
(மூலம்: www.worldbulletin.net)




வரலாறு என்பது தற்காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் இடையிலான தொடர்புச் செயற்பாங்காகும்.

இ.எச்.கார்
(மூலம்: Spartacus-educational.com)


**அன்றும் இன்றும் கோலாலம்பூர்**

1900




பசார் பெசார் கோலாலம்பூர்
(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)


2019




இன்று பாசார் செனி என அழைக்கப்படுகிறது.

வரலாற்று அறிஞர்கள் விவரங்கள்.

வரலாறு நடந்த அல்லது முடிந்த நிகழ்வைக் குறிக்கிறது.



நிறைநிலைப் பேராசிரியர் (Profesor Emeritus) டான் ஸ்ரீ டாக்டர் கூ கேய் கிம்



மலாக்கா பண்டா ஹிலிரில் கூட்டரசு மலாயாவின் சுதந்திரத் தேதி அறிவிப்பு
(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)




ஜொகூர், சிகாமாட், பெல்டா ரெடோங் தேசியப்பள்ளியின் விருதளிப்பு விழா (2018)
(மூலம்: Muhamad Syafiq bin Hussin)



வரலாறு என்பது கடந்த கால நிகழ்வு ஒன்றின் குறிப்பு அல்லது பதிவு ஆகும்.

முனைவர் முகமது யூசோப் பின் இப்ராஹிம்
(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)




'வரலாற்றில் இன்று' புத்தகத்தின் குறிப்பு.
(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)

கடந்த காலத்தில் நிகழ்ந்த மனிதனின் செயல், மாற்றம், குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதே வரலாறு. வரலாறு மனித வாழ்விற்குப் படிப்பினையையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறது.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **Round Table**

1. நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் தகவல்களைக் குழுமுறையில் திரட்டுதல்.
2. கிடைக்கப்பெற்ற தகவல்களை வெண்தாளில் குறித்தல்.
3. பிற குழு மாணவர்கள் சுழல் முறையில் அதே வெண்தாளில் கருத்துகளைப் பதிவு செய்தல்.

1.1.1
K 1.1.6

**ஆசிரியர் குறிப்பு**
- வரலாற்று அறிஞர் கருத்துகளின் அடிப்படையில் வரலாற்றின் பொருளை விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.
- வரலாற்று நிகழ்வின் அடிப்படையில் வரலாற்றின் பொருளை விளக்குதல்.



# வரலாற்று மூலம்

நடந்த நிகழ்வு ஒன்றினைக் குறித்துத் துல்லியமான தகவல்களை வழங்கக் கூடியதே வரலாற்று மூலம். இது முதன்மை மூலம், இரண்டாம் மூலம் என இரு வகைப்படும்.

## முதன்மை மூலம்

முதன்மை மூலம், முதலாம் மூலம் எனவும் அழைக்கப்படுகிறது. இது மாற்றியமைக்கப்படாமல் அசல் வடிவத்தில் இருக்கும். புதைபடிவம், கையெழுத்துப் படிவம், அதிகாரப்பூர்வ ஆவணம், தொல்பொருள் ஆகியன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.




புதைபடிவம் எனப்படுவது தாவரங்கள் அல்லது விலங்குகளின் சுவடுகளாகும்.

(மூலம்: Muzium Geologi Jabatan Mineral dan Geosains Malaysia)



ஹிக்காயாட் ஹங்துவா, சுலாலாத்தூஸ் சாலாத்தின் போன்றவை கையெழுத்துப் படிவங்களாகும்.


(மூலம் : *The Legacy of Malay Manuscripts*, 2012. Kuala Lumpur: Perpustakaan Negara Malaysia)



தொல்பொருள் என்பது மனிதன் உருவாக்கிய கற்கருவி, மட்பாண்டம், ஆயுதம், சில்லரைக் காசு போன்றவையாகும்.

(மூலம்: Muzium Sejarah dan Ethnografi Melaka)

மாதிரிக் கையெழுத்துப் படிவங்கள்




வரலாற்று நிகழ்வுகளை உள்ளடக்கியது அதிகாரப்பூர்வ ஆவணம் ஆகும்.

(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)


## இரண்டாம் மூலம்

இரண்டாம் மூலம் என்பது அசல் மூலத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட எழுத்துப்படிவமாகும். நூல், சஞ்சிகை, கையேடு, நாளிதழ் ஆகியன இரண்டாம் மூலங்கள் ஆகும்.





நாளிதழ்

(மூலம்: பெரித்தா ஹரியான், சின் சியூ நாளிதழ், தமிழ் நேசன்)




நூல்

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)




சஞ்சிகை

(மூலம்: கெடா, கோலகெட்டில் தஞ்சோங் புத்ரி இடைநிலைப்பள்ளி)




கையேடு

(மூலம்: மலேசிய அருங்காட்சியக இலாகா)

நடந்த ஒரு நிகழ்வினை விளங்கிக் கொள்வதற்கு வரலாற்று மூலம் முக்கியச் சான்றாக அமைகிறது.

**அறிவுக்கு வேலை**

முதலாம், இரண்டாம் மூலங்களின் பொருளைக் குறிப்பிடுக.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **Mix-n-Match**

1. வரலாற்று மூலங்கள், அவற்றைப் பயன்படுத்துவதன் அவசியம் ஆகியவை தொடர்பான தகவல்களை ஆசிரியர் தயார்ப்படுத்துதல்.
2. ஒவ்வொரு மாணவரும் ஒரு தகவலைப் பெறுதல்.
3. கிடைக்கப்பெற்ற தகவல்களை வரலாற்று மூலம், முதன்மை மூலம், இரண்டாம் மூலம், வரலாற்று மூலங்களைப் பயன்படுத்துவதன் அவசியம் ஆகிய தலைப்புகளுக்கேற்ப இணைத்தல்.

1.1.2
K 1.1.9

**ஆசிரியர் குறிப்பு**

- முதன்மை மூலம், இரண்டாம் மூலம் ஆகியவற்றின் வேறுபாட்டை விளக்குதல்.



# வரலாற்று ஆய்வுநெறி

நடந்த வரலாற்று நிகழ்வுகளை நிரூபிக்க வரலாற்று ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. வரலாற்றுத் தகவல்களைத் அறிந்து கொள்ள அகழ்வாராய்ச்சி, வாய்மொழி, எழுத்து ஆகிய மூன்று ஆய்வுநெறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

## அகழ்வாராய்ச்சி முறை

வரலாற்றுச் சுவடுகளில் இருந்து தகவல்களைத் திரட்டுதல் அகழ்வாராய்ச்சி முறை எனப்படுகிறது. இம்முறை தோண்டித் தேடுதல்வழி (Ekskavasi) மேற்கொள்ளப்படுகிறது. புதைபடிவம், மட்பாண்டம், உலோகப் பொருள்கள், கிளிஞ்சல்கள் ஆகியன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.



கெடா, சுங்கை பத்து அகழ்வாராய்ச்சித் தளத்தில் தோண்டித் தேடும் நடவடிக்கை

(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)



*'பேராக் மேன்'* எலும்புக் கூடு, (லெங்கோங், பேராக்)

(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)

இதைத் தவிர்த்து, கடலடி அல்லது நீரடி அகழ்வாராய்ச்சித் துறையும் உள்ளது. இது கடல், ஆறு அல்லது ஏரிகளுக்கு அடியில் கிடைக்கப் பெறும் வரலாற்றுச் சுவடுகளின்வழி தகவல்கள் திரட்டும் முறையாகும். மூழ்கிய கப்பலின் பாகங்கள், புராதனக் கட்டுமானங்கள், தொல்பொருள்கள் ஆகியவற்றை இதற்கு உதாரணங்களாகக் காட்டலாம்.



(மூலம்: Jabatan Warisan Negara)

## வாய்மொழி முறை

நேர்காணல்வழி தகவல் திரட்டுவது வாய்மொழி முறையாகும். நேர்காணல் செய்யப்படும் நபரை மூலநபர் (Orang Sumber) என்பர். இவர் வரலாற்று நிகழ்வில் நேரிடையாகச் சம்பந்தப்பட்டவராகவோ பார்த்தவராகவோ அல்லது பிறர் மூலம் தகவல்களைக் கேள்வியுற்றவராகவோ இருப்பார்.

வாய்மொழிப் படிமுறைகள்:

**படி 1 :** மூலநபரை அடையாளங்கண்டு ஆய்வுத் தலைப்புக்கேற்பக் கேள்விகளைத் தயார் செய்தல்.
**படி 2 :** நேர்காணல் செய்து உரையாடலை ஒலிப்பதிவு செய்தல்.
**படி 3 :** ஒலிப்பதிவைச் செவிமடுத்துக் குறிப்பெடுத்தல், தகவல்களைச் சேமித்தல், எழுத்துப்படிவத்தை உருவாக்குதல்.

## எழுத்து முறை

எழுத்து, படங்கள் ஆகியவற்றின்வழி தகவல்களைப் பெறுவது எழுத்து முறையாகும். இம்முறையில் குகைச்சுவர், மரக்கட்டை, பாறை, அச்சுப் படிவங்கள் ஆகியவற்றிலிருந்து தகவல்கள் பெறப்படுகின்றன.



பேராக், தம்பூன் குகைச் சித்திரம்.
(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)

எழுத்துமுறையின் படிமுறைகள்:

**படி 1 :** தொல்லியமான வரலாற்று மூலத்தை அடையாளங்காணுதல்.
**படி 2 :** வரலாற்று மூலங்களைத் திரட்டுதல்.
**படி 3 :** வரலாற்று மூலத்திலிருந்து தகவலைப் பொருள் பெயர்த்தல்.
**படி 4 :** எழுத்துப் படிவத்தை உருவாக்குதல்.

ஆய்வாளர்கள் வரலாற்று நிகழ்வுகளை ஆய்வு செய்யப் பொருத்தமான ஆய்வுநெறிகளைத் தெரிவு செய்யலாம். இந்த ஆய்வுநெறிகள் வரலாற்று ஆய்வுகளின் தரமான படைப்பை உருவாக்க வழிவகுக்கின்றன.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **Rally Robin**

1. உன் வகுப்பில் ஒரு நண்பரைத் தெரிவு செய்க.
2. உன் சுயவரலாற்றைச் சுழல் முறையில் இணையராகப் படைத்திடுக.


I.I.3

**ஆசிரியர் குறிப்பு**
- வரலாற்று ஆய்வுநெறி மூன்றையும் விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.



# இடவெளியும் காலமும்

வரலாற்று அறிஞர்கள் காலவரிசைப்படி நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளை ஆய்வு செய்கின்றனர். இது காலநிரல் எனப்படுகிறது. இந்தக் காலக் கருத்துருவானது பத்தாண்டு, நூறாண்டு, ஆயிரமாண்டு எனப் பிரிக்கப்படுகிறது. இக்கருத்துரு கால அடிப்படையில் கிறிஸ்துவுக்குமுன் (கி.மு), கிறிஸ்துவுக்குப்பின் (கி.பி) எனவும் குறிக்கப்படுகிறது.




**காலவரைக்கோடு**

**என் பள்ளி நிகழ்ச்சிகளின் காலநிரல்**




(மூலம்: Ahmad Hishanuddin bin Ramli) (மூலம்: Muhamad Syafiq bin Hussin)

வரலாற்று அறிஞர்கள் அரசியல், பொருளாதாரம், சமூகவியல் ஆகிய துறைகளில் ஆய்வுசெய்ய பரந்த வரலாற்று இடவெளி வழிவகுக்கிறது.

### உங்களுக்குத் தெரியுமா?

- கிறிஸ்துவுக்குமுன் (கி.மு) என்பது இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு முந்தைய காலம் ஆகும்.
- கிறிஸ்துவுக்குப்பின் (கி.பி) என்பது இயேசு கிறிஸ்து பிறப்பிற்குப் பிந்தைய காலம் ஆகும்.

வரலாற்று நிகழ்வுகளை நாம் எளிதில் விளங்கிக் கொள்ள இடவெளியும் காலமும் உதவுகின்றன. இதன்வழி நாம் வரலாற்று நிகழ்வுகளை முழுமையாகவும் முறையாகவும் எழுத முடிகிறது.

### அருஞ்சொல்

**காலநிரல் :** காலவரிசைப்படி தொடர்ச்சியாக நிகழ்ந்த நிகழ்வுகள்
**பத்தாண்டு :** பத்து ஆண்டு காலம்
**நூறாண்டு :** நூறு ஆண்டு காலம்
**ஆயிரமாண்டு :** ஆயிரம் ஆண்டு காலம்

### அறிவுக்கு வேலை

வரலாற்று நிகழ்வை ஆய்வுசெய்வதில் காலநிரலின் பயனைக் குறிப்பிடுக.

**ஆசிரியர் குறிப்பு**

- இடவெளி, காலம் ஆகிய கருத்துருக்களை விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.
- வரலாற்று நிகழ்வில் இடவெளி, காலம் ஆகிய கருத்துருக்களை விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.

1.1.4



# வரலாற்று நிகழ்வில் காரணமும் விளைவும்

ஒவ்வொரு வரலாற்று நிகழ்வுக்கும் காரணமும் விளைவும் உண்டு. வரலாற்று நிகழ்வை எளிதில் விளங்கிக் கொள்ளக் காரணமும் விளைவும் தொடர்பான ஆய்வுகள் உதவுகின்றன.

பள்ளி விருதளிப்பு விழாவை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்வோம். கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்களைக் கௌரவிப்பதற்காகவே விருதளிப்பு விழா நடத்தப்படுகிறது. இவ்விழா மாணவர்கள் மேலும் ஊக்கமுடன் கல்வி பயில ஆர்வத்தைத் தூண்டுகிறது.

**பள்ளி விருதளிப்பு விழா**

**காரணம்**

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களைக் கௌரவித்தல்

**விளைவு**

மாணவர்கள் ஊக்கமுடன் கல்வி பயில்வர்




பள்ளி விருதளிப்பு விழா

[மூலம்: Sekolah Jenis Kebangsaan (Cina) Foon Yew 4, Johor Bahru]

மாணவர்கள் ஆர்வத்துடன் பாடத்தை மீள்பார்வை செய்யாவிட்டால் ஏற்படும் விளைவு யாது?

நம் நாட்டை விடுதலை பெறச் செய்யும் முயற்சியில் காரணத்தையும் விளைவையும் காணமுடியும். நம் நாட்டை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தனர். அவர்களிடமிருந்து விடுதலை கிடைக்கும்வரை மக்கள் போராடினர்.

**1957 இல் கூட்டரசு மலாயாவின் சுதந்திரம்**

**காரணம்**

மலாயாவை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தனர்.

**விளைவு**

ஆட்சியாளர்களிடமிருந்து மலாயாவை விடுதலை பெறச் செய்ய மக்கள் போராடினர்.




மலாயன் யூனியனுக்கு எதிரான போராட்டம்

(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)



31 ஆகஸ்ட்டு 1957 இல் கூட்டரசு மலாயாவின் சுதந்திரப் பிரகடனம்

(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)

காரணமும் விளைவுமானது ஒரு வரலாற்று நிகழ்வு ஏன், எவ்வாறு நடந்திருக்கும், அதன் விளைவு யாது என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டும். இந்தப் புரிதலின்வழி வரலாற்று நிகழ்விலிருந்து படிப்பினையைப் பெறலாம்.

நாட்டின் வரலாற்று நிகழ்வினால் நீ அடையும் பயன் என்ன?

**நடவடிக்கை**

உன் குடும்பத்தில் நடந்த நிகழ்வு ஒன்றின் காரணத்தையும் விளைவையும் வரைபடத்தில் நிறைவு செய்க.

நிகழ்வு | காரணம் → விளைவு

**ஆசிரியர் குறிப்பு**

- வரலாற்று நிகழ்வின் அடிப்படையில் காரணத்தையும் விளைவையும் விளங்கிக்கொள்ளத் துணைபுரிதல்.

I.1.5
K I.1.7
K I.1.8

## மீட்டுணர்வோம்



**வரலாறு என்பதன் பொருள்**
வரலாறு என்பது கடந்த காலத்தில் உண்மையாக நடந்த நிகழ்வாகும்.







**வரலாற்று மூலம்**
வரலாற்று மூலம் முதன்மை மூலம், இரண்டாம் மூலம் என இரு வகையாகப் பிரிக்கப்படுகிறது.



**வரலாற்று ஆய்வுநெறி**
அகழ்வாராய்ச்சி முறை, வாய்மொழி முறை, எழுத்து முறை என மூன்று வகைப்படும்.




**காலவரைக்கோடு**

**இடவெளியும் காலமும்**
வரலாற்றில் இடவெளியும் காலமும் கிறிஸ்துவுக்கு முந்தைய காலம் (கி.மு), கிறிஸ்துவுக்குப் பிந்தைய காலம் (கி.பி) என இரு வகைப்படும்.






**வரலாற்று நிகழ்வில் காரணமும் விளைவும்**
காரணத்தையும் விளைவையும் ஆராய்வதன்வழி ஒரு வரலாற்று நிகழ்வை எளிதில் விளங்கிக் கொள்ள முடிகிறது.

இந்த அலகு வரலாறு என்பதன் பொருள், வரலாற்று அறிவுத் திறன்கள் ஆகியவை குறித்து விளக்குகின்றது. இஃது அடுத்த அலகில் நாம் தன்வரலாற்றையும் குடும்ப வளர்ச்சியையும் கற்பதில் வெகுவாக உதவும்.



## சிந்தித்துப் பதிலளி

**அ. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. வரலாறு நடந்த அல்லது முடிந்த நிகழ்வைக் குறிப்பிடுகின்றது.

   மேற்கண்ட கருத்தைக் கூறிய வரலாற்று அறிஞர் யார்?
   அ. நிறைநிலைப் பேராசிரியர் டாக்டர் கூ கேய் கிம்
   ஆ. ஹெரோடொட்டூஸ் இ. இ.எச்.கார்

2. முதன்மை மூலத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது ________.
   அ. முதல் மூலம் ஆ. இரண்டாம் மூலம் இ. மூன்றாம் மூலம்

3. வாய்மொழி முறை என்பது ________ தகவல்களைப் பெறுவதாகும்.
   அ. வரலாற்றுச் சுவடுகளின்வழி
   ஆ. முதன்மை மூலத்தின்வழி
   இ. நேர்காணலின்வழி

4. நூற்றாண்டு என்பது ________ காலம் ஆகும்.
   அ. பத்து ஆண்டு ஆ. நூறு ஆண்டு இ. ஆயிரம் ஆண்டு

5. காலவரிசை ________ எனவும் அழைக்கப்படுகிறது.
   அ. கிறிஸ்துவுக்குமுன் ஆ. காலநிரல் இ. தோண்டித் தேடுதல்

6. காரணமும் விளைவும் தொடர்பான ஆய்வு நமக்கு ________ வழிவகுக்கிறது.
   அ. துல்லியமான வரலாற்று மூலத்தைத் தேட
   ஆ. வரலாற்று நிகழ்வைத் துல்லியமாக எழுத
   இ. படிப்பினையைப் பெறவும் வரலாற்று நிகழ்வைக் கொண்டாடவும்

**ஆ. காலி இடத்தை நிறைவு செய்க.**

**வரலாறு என்னும் சொல்லின் பொருள்**
________________
________________

**இரு வகை வரலாற்று மூலங்கள்**
i. ________________
ii. ________________

**மூன்று வகை வரலாற்று ஆய்வுநெறிகள்**
i. ________________
ii. ________________
iii. ________________

**காலக்கருத்துரு எத்தனை வகையாகப் பிரிக்கப்படுகின்றது?**
i. ________________
ii. ________________
iii. ________________




**வாய்மொழி முறையில் மூன்று படிகள்**
i. ________________
ii. ________________
iii. ________________



**ஆசிரியர் குறிப்பு**
இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

# நாட்டை நேசிப்போம்

வரலாறு என்பதன் பொருளைத் தெரிந்து கொள்வதன்வழி வரலாற்று நிகழ்வைத் தெளிவாகவும் எளிதாகவும் விளங்கிக் கொள்ளலாம்.






வரலாற்று நிகழ்வுகளை எளிதில் விளங்கிக்கொள்ள வரலாற்றுப்பூர்வக் கட்டடங்களைப் பேண வேண்டும்.
(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)



# அலகு 2

# நானும் குடும்பமும்

## சாரம்

தனிநபர், சமூகம், நாடு ஆகியவற்றின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் குடும்பம் முக்கியப் பங்காற்றுகிறது. இந்த அலகு தன் விவரம், அடிப்படைக் குடும்பம், கூட்டுக் குடும்பம், குடும்ப உறுப்பினர்களின் பங்கு, தன் வளர்ச்சி ஆகியவற்றைக் காலவரைக்கோட்டிற்கு ஏற்ப விவரிக்கின்றது.

**குடும்ப உறுப்பினர்களோடு பண்டிகைகளைக் கொண்டாடுதல்**





## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. தன் விவரத்தைக் குறிப்பிடுதல்.
2. அடிப்படைக் குடும்பம், கூட்டுக் குடும்பம் பற்றி விளக்குதல்.
3. குடும்ப உறுப்பினர்களின் பங்கை ஒப்பீடு செய்தல்.
4. காலவரைக்கோட்டிற்கேற்பத் தன் வளர்ச்சியை விவரித்தல்.

## குடியியல் நெறி

- அன்புடைமை
- மதித்தல்

## அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத் திறன்

1. தன் விவரத்தைக் கூறுதல்.
2. குடும்ப உறுப்பினர்களின் பங்கை விவரித்தல்.
3. தன் வளர்ச்சியைக் காலவரைக்கோட்டிற்கேற்ப விளக்குதல்.











(மூலம்: *Utusan Borneo, The Star* (Malaysia), Traverse Tours, Tourism Malaysia, CompuRex Corporation)



# தன் விவரம்



தன் விவரம் என்பது பெயர், பால், பெற்றோர் பெயர், பிறந்த தேதி, பிறந்த இடம் ஆகிய விவரங்களைக் குறிக்கும். இத்தகவல்கள் பிறப்புச் சான்றிதழ், மைகிட்(MyKid), பள்ளி அடையாள அட்டை ஆகியவற்றில் காணப்படும்.



BORANG XII

CONTOH

KERAJAAN MALAYSIA

**CABUTAN DARI DAFTAR KELAHIRAN**

Ordinan Pendaftaran Kelahiran dan Kematian, 1951, Sarawak (Bab 10)
(Seksyen 26; Kaedah 13)

| | | | |
|---|---|---|---|
| Kawasan Pendaftaran: SARAWAK | | Pusat Pendaftaran: JPN BINTULU | |
| **KANAK-KANAK** | | | |
| Nama: ANGELLICA THYMAH | | | |
| Tarikh dan Waktu Kelahiran: 08 MEI 2008 11:11 PM | | Jantina: PEREMPUAN | |
| Tempat Kelahiran: HOSPITAL BINTULU | | WARGANEGARA | |
| **BAPA** | | | |
| Nama: ANIS ANAK ABAI | | | |
| No. Kad Pengenalan: | Umur: 34 TAHUN | Jenis dan No. Dokumen Lain: -Tidak Berkenaan- | |
| Taraf Penduduk: WARGANEGARA | | Keturunan: IBAN ATAU SEA DAYAK | Agama: KRISTIAN |
| **IBU** | | | |
| Nama: GRORIA ANAK UJAK | | | |
| No. Kad Pengenalan: | Umur: 43 TAHUN | Jenis dan No. Dokumen Lain: -Tidak Berkenaan- | |
| Taraf Penduduk: WARGANEGARA | | Keturunan: IBAN ATAU SEA DAYAK | Agama: KRISTIAN |
| Tempat Tinggal: RUMAH BAIE SUNGAI MAMUT 98150 BEKENU SARAWAK | | | |
| No. Daftar: | | Disahkan bahawa maklumat di atas adalah seperti yang dicatat dalam Daftar Kelahiran | |
| Tarikh Pendaftaran: 15 MEI 2008 | | PENDAFTAR WILAYAH KELAHIRAN & KEMATIAN, SARAWAK | |

ஏஞ்சலிகா தைமா அனாக் அனிஸ்,
ரூமா பாராட் தேசியப்பள்ளி, மிரி,
சரவாக்.

(மூலம்: Anis anak Abai)






சில தகவல்கள் மைகிட்டிலும் காணப்படுகின்றன.

சுகேஷ் த/பெ மோகன்
சுங்கை சாலாக் தமிழ்ப்பள்ளி,
போர்ட்டிக்சன்,
நெகிரி செம்பிலான்.

(மூலம்: Mohan a/l Sinappan)

## அறிவுக்கு வேலை

தன் விவரம் என்றால் என்ன?



பள்ளி அடையாள அட்டையைத் தன் அடையாள ஆவணமாகவும் பயன்படுத்தலாம்.




நியோ ஜியா ஜியாவின் பள்ளி அடையாள அட்டை.

(மூலம்: Neo Vee Wee)

என் பெயர் அமாட் ஹாபி பின் அமாட் ஹிஷானுடின். நான் 24 செப்டம்பர் 2010இல் கோலாலம்பூர், மலேசிய தேசியப் பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் பிறந்தேன். என் அப்பாவின் பெயர் அமாட் ஹிஷானுடின் பின் ரம்லி ஆகும். என் அம்மாவின் பெயர் நொராய்னி பிந்தி அவாங்@ஷாரி ஆகும்.




(மூலம்: Ahmad Hishanuddin bin Ramli)

பிறப்புச் சான்றிதழையும் மைகிட்டையும் அதிகாரப்பூர்வ அலுவல்களில் அடையாள ஆவணமாகப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, பிறப்புச் சான்றிதழைப் பள்ளிப் பதிவு, வங்கிக் கணக்குத் திறப்பு ஆகிய அலுவல்களுக்குப் பயன்படுத்தலாம்.

## நடவடிக்கை (குமிழ்வரை)

பிறப்புச் சான்றிதழ் தகவல்களைக் கொண்டு தன் விவரத்தைக் குமிழ் வரைபடத்தில் நிறைவு செய்க.




1.2.1

**ஆசிரியர் குறிப்பு**

குமிழ் வரைபடத்தை நிறைவு செய்யத் துணைபுரிதல்.

# என் குடும்பம்

என் குடும்பம் தனிக் குடும்பத்தையும் கூட்டுக் குடும்பத்தையும் உள்ளடக்கியுள்ளது. நாங்கள் ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறிக் கொள்வோம்.

## தனிக் குடும்பம்

தனிக் குடும்பம் அப்பா, அம்மா, குழந்தைகள் ஆகியோரை உள்ளடக்கியது. என் தனிக் குடும்பமானது என்னோடு அப்பா, அம்மா, அண்ணன், அக்காள், தம்பி ஆகியோரைக் கொண்டுள்ளது. நாங்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்போம்: உதவியும் புரிவோம்.



**நடவடிக்கை**


'என் குடும்பம்' எனும் கருப்பொருளில் ஓவியம் ஒன்றை வரைக.

## கூட்டுக் குடும்பம்

கூட்டுக் குடும்பம் என்பது ஒரு தனிக் குடும்பத்துடன் தாத்தாவையும் பாட்டியையும் உள்ளடக்கியதாகும்.

சீனர், இந்தியர் கூட்டுக் குடும்ப விவரங்கள்




கூட்டுக் குடும்ப வழித்தோன்றல்

தனிக் குடும்பத்திலும் கூட்டுக் குடும்பத்திலும் காணப்படும் நல்லிணக்கம் ஒரு மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்கும். எனவே, நாம் குடும்ப உறுப்பினர்களைப் போற்ற வேண்டும்.


1.2.2
K 1.2.5

**ஆசிரியர் குறிப்பு**

தனிக் குடும்பம், கூட்டுக் குடும்பம் ஆகியவற்றின் பொருளை விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.



# என் குடும்ப உறுப்பினர்களின் பங்கு



குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் குடும்பத்தில் ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. அவர்கள் தத்தம் கடமைகளை உணர்ந்து பொறுப்புடன் பங்காற்றும்போது குடும்ப நல்லுறவு மேலும் வலுப்பெறுகின்றது.

## பெற்றோர் பங்கு



- குடும்பத்தைப் பராமரித்தல்
- அன்பு காட்டுதல்
- பாதுகாப்பைப் பேணுதல்
- எல்லா அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்தல்
- நல்ல முன்னுதாரணமாகத் திகழ்தல்
- முழுமையான கல்வியை வழங்குதல்

**அறிவுக்கு வேலை**

பெற்றோரின் இதர பங்கைக் கூறுக.



## குழந்தைகளின் பங்கு



- குடும்ப நற்பெயரைக் காத்தல்
- குடும்பத்தினருக்கு உதவுதல்
- ஒருவரை ஒருவர் மதித்தல்
- ஆலோசனையை ஏற்றல்
- முழுமுச்சுடன் கல்வி கற்றல்

ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சியும் சுபிட்சமும் அதன் உறுப்பினர்களின் பங்கைப் பொறுத்தே அமைகிறது. அதுவே நல்லிணக்கம் மிகுந்த குடும்பம் உருவாகிட வழிவகுக்கும்.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **Think-Pair-Share**

1. குடும்பத்தில் உனது பங்கையும் குடும்ப உறுப்பினர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தையும் இணையராக உரைத்திடுக.
2. குடும்பத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கப் பண்புகள் மூன்றினை எழுதுக.


1.2.3
K 1.2.6

**ஆசிரியர் குறிப்பு**

குடும்ப உறுப்பினர்களின் பங்கைப் புரிந்து கொள்ள வழிகாட்டுதல்.

# என் வளர்ச்சி

ஒரு மாலைப் பொழுதில் தாத்தா, ஹரிப்புடன் வீட்டின் முன்புறத்தில் பேசிக் கொண்டிருந்தார்.



ஹரிப் : நம் குடும்பக் கதையைப் பற்றிக் கூறுங்களேன் தாத்தா.

தாத்தா : ஆகட்டும், சொல்கிறேன் ஹரிப். 2008ஆம் ஆண்டில் உன் அண்ணன் பிறந்தான். நீயோ இரண்டு ஆண்டுகள் கழித்துப் பிறந்தாய். பேரப்பிள்ளைகள் இருவரையும் பெற்றதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஹரிப் : அதனால்தான் தாத்தா நான் அனைவரின் செல்லப் பிள்ளையாக இருக்கிறேன்.


தாத்தா : நிச்சயமாக ஹரிப். அதன் பின்னர் 2014ஆம் ஆண்டு உன் அப்பா குடும்பத்தோடு கோலாலம்பூருக்கு மாற்றலாகிச் சென்றார். நீங்கள் நெடுங்காலமாக அங்குதான் வசிக்கிறீர்கள்.

தன் வளர்ச்சியைக் காலவரைக்கோட்டின் வாயிலாக விவரிக்க முடியும்.



2010

நான் பிறந்தேன்.



2014

கோலாலம்பூருக்கு மாற்றலாகிச் சென்றோம்.

**நடவடிக்கை**

உனது வளர்ச்சியைக் காட்டும் திரட்டேடு ஒன்றைத் தயாரித்திடுக.

குடும்ப நல்லிணக்கத்தை உருவாக்குவதில் நற்பண்பின் அவசியத்தைக் கலந்துரையாடுக.



ஹரிப் : ஆமாம் தாத்தா. உங்களின் பிரிவால் நாங்கள் வாடினோம். இருப்பினும், அவ்வப்போது அப்பா எங்களைக் கிராமத்திற்கு அழைத்து வருவது மகிழ்ச்சியாக உள்ளது. சரி தாத்தா, அதற்குப் பிறகு என்ன ஆயிற்று?

தாத்தா : 2016ஆம் ஆண்டில் நானும் பாட்டியும் மெக்காவிற்குப் புனித ஹஜ் யாத்திரையை மேற்கொண்டோம்.

ஹரிப் : ஓ... அப்படியா தாத்தா. அதற்கு அடுத்த ஆண்டில்தான் நான் பள்ளிக்குச் சென்றேன். இப்போது நான் நான்காம் ஆண்டில் பயில்கிறேன். என்னைப் பள்ளி மாணவர்த் தலைவராகவும் நியமித்துள்ளார்கள்.

தாத்தா : உன்னை எண்ணி எனக்குப் பெருமையாக உள்ளது.

**2016**

தாத்தாவும் பாட்டியும் புனித ஹஜ் யாத்திரை மேற்கொண்டனர்.



**2017**

நான் முதலாம் ஆண்டில் சேர்ந்தேன்.

**2020**

நான் நான்காம் ஆண்டில் பயில்கிறேன்.

தன் வரலாற்றையும் வளர்ச்சியையும் அறிந்து கொள்ள அவற்றைக் காலவரைக்கோட்டில் குறித்திட வேண்டும். அக்குறிப்பை நினைவாக வைத்துக் கொள்ளலாம்.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **Role-Play**

மேற்கண்ட உரையாடலை நடித்துக் காட்டுக.

1.2.4
K 1.2.7

**ஆசிரியர் குறிப்பு**

காலவரைக்கோட்டை உருவாக்கிடவும் பாகமேற்று நடித்திடவும் துணைபுரிதல்.

# உருவாக்கிடுவோம் வாரீர்

## குடும்ப வழித்தோன்றல் தொங்காடி

**கருவிகளும் பொருளும்**

கத்தரிகோல், பேனா, மணிலா அட்டை, கயிறு, உடை மாட்டி, துளையிடும் கருவி, பசை, பசை நாடா.



**செய்முறை:**



1. மணிலா அட்டையில் குடும்பத்தினர் படத்தை ஒட்டுக.




2. பெயரையும் விளிப்பு முறையையும் மணிலா அட்டையில் எழுதுக.




3. மணிலா அட்டையில் துளையிடுக.



4. மணிலா அட்டையில் கயிற்றை ஒட்டுக.




5. கயிற்றை உடை மாட்டியிலும் மணிலா அட்டையிலும் கட்டுக.




6. தொங்காடி தயார்.

**ஆசிரியர் குறிப்பு**

குடும்ப உறுப்பினர் படத்தைத் தயார் செய்ய வழிகாட்டுதல்.

# மீட்டுணர்வோம்



**தன் விவரம்**

- பெயர், பால், பிறந்த இடம், பிறந்த தேதி, பெற்றோர் பெயர் ஆகிய தகவல்களைக் கொண்டிருக்கும்.



**குடும்பம்**

- அடிப்படைக் குடும்பத்தையும் கூட்டுக் குடும்பத்தையும் உள்ளடக்கும்.



**குடும்ப உறுப்பினர் பங்கு**

- நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பத்தை உருவாக்க குடும்ப உறுப்பினர்கள் பங்காற்ற வேண்டும்.



**தன் வளர்ச்சி**

- தன் வளர்ச்சியைக் காலவரைக்கோட்டின்வழி படம் பிடித்துக் காட்டலாம்.

இந்த அலகு தன் விவரத்தையும் குடும்பத்தையும் குறித்து விளக்குகின்றது. இனிவரும் அடுத்த அலகு பள்ளி வரலாற்றை விவரிக்கும்.

# சிந்தித்துப் பதிலளி



1. உன் குடும்பத்தில் நிகழ்ந்த மூன்று முக்கிய நிகழ்வுகளை எழுதுக.
   i. ____________________________________________.
   ii. ____________________________________________.
   iii. ____________________________________________.

2. மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடி.

| | | | |
|---|---|---|---|
| அன்புடமை | தன் விவரம் | குடும்பம் | நல்லிணக்கம் |
| காலவரைக்கோடு | அண்ணன் | முன்மாதிரி | தாத்தா |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | கா | நி | ஏ | க | ஹ | சூ | லை | பு | மு | ற் | பி | தீ | ஜ | நி |
| லு | ல | தே | தீ | சூ | அ | லீ | மை | ஜ | க | சூ | ஹ | ங் | க | லீ |
| ல | வ | பி | மை | டு | ண் | கீ | மு | தா | த் | தா | ப | ம் | பு | மை |
| மு | ரை | ங் | நி | கே | ண | ஏ | ய் | ற | நி | தீ | லை | ரெ | ஏ | டு |
| தா | க் | ஹ | பி | ஏ | ன் | சோ | மு | ஜ | அ | அ | தே | மு | த | சோ |
| ணி | கோ | பு | மு | ற் | கோ | சோ | ன் | கீ | சூ | ன் | பி | ஜ | ன் | சூ |
| ட் | டு | நி | பு | கீ | த் | சூ | மா | இ | பை | பு | ந் | சோ | வி | கு |
| ஜ | ம் | லீ | தீ | ஏ | லை | ஹ | தி | கே | தே | ட | ஹ | ங் | வ | ஜ |
| கு | டு | ம் | ப | ம் | மு | மோ | ரி | பி | ஈ | மை | ஏ | பு | ர | உ |
| ர் | சி | ங் | சூ | மா | லீ | பி | க | ஜ | ற் | டு | ஜ | ஊ | ம் | மை |
| க | க | சோ | மு | நி | க | ஏ | ப் | மை | ண் | ண | சோ | மு | லை | கீ |
| ப் | ஏ | பு | சா | ஹ | நி | ற் | தீ | க | பி | தீ | எ | ஜி | நி | க |
| கி | ப | ஏ | மு | மை | தே | ந | ல் | லி | ண | க் | க | ம் | ற | ம் |
| பி | தி | ரெ | தீ | மா | சூ | க | லை | கீ | பி | ஏ | ற் | க | சோ | கே |
| ச | ச | ரி | டு | அ | ங் | ரெ | லை | அ | கெ | கே | ஜ | போ | லீ | கூ |




**ஆசிரியர் குறிப்பு**

இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.



## நாட்டை நேசிப்போம்

மகிழ்ச்சியான குடும்பமே நல்லிணக்கமிகு சமூக உருவாக்கத்திற்கு அடிப்படையாகும்.






சிறுவயதிலிருந்து செலுத்தப்படும் அன்பு மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்கும்.

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)



# அலகு 3

# பள்ளி வரலாறு




## சாரம்

பள்ளிப் பின்னணியை அறிய, பள்ளி வரலாற்றைக் கற்பது அவசியம். இதன்வழி பள்ளியைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்ளலாம். இந்த அலகு பள்ளியின் பெயர், முகவரி வரலாறு, பின்னணி, அமைவிடம் ஆகியவற்றோடு பள்ளி குறித்த முழுமையான தகவல்களையும் விவரிக்கின்றது.

பெர்மாத்தாங் தோக் மஹாட் தேசியப்பள்ளி.
(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)

## குடியியல் நெறி

- அன்புடைமை
- மதித்தல்
- மகிழ்ச்சி

சரவாக், சீமுஞ்சான் சுங் ஹுவா சீனப்பள்ளியின் வரலாறு

ஜொகூர், ஸ்கூடாய், தாமான் துன் அமினா தமிழ்ப்பள்ளியின் வரலாறு

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. பள்ளியின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுதல்.
2. பள்ளி அமைவிடத்தை அடையாளங்காணல்.
3. பள்ளி வரலாற்றை விளக்குதல்.
4. பள்ளித் தகவல்களை முழுமையாக விவரித்தல்.




## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

1. பள்ளியின் பெயர், அமைவிடம் தொடர்பான சான்றுகளைக் கண்டறிதல்.
2. பள்ளி உருவாக்கம் தொடர்பான அடிப்படை வரலாற்றுக் கூறுகளை விளங்கிக் கொள்ளுதல்.
3. காலமாற்றத்திற்கு ஏற்ப பள்ளியின் தொடர் வளர்ச்சியையும் அதன் மாற்றங்களையும் விளங்கிக் கொள்ளுதல்.



# நான் அறிவு பெறும் இடம்

பள்ளி நாம் அறிவு பெறும் இடமாகும். விளையாட்டுப் போட்டி, கதை கூறுதல், புதிர்ப்போட்டி, சொற்போர் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் பள்ளியில் நடத்தப்படுகின்றன.





## அறிவுக்கு வேலை

வரலாற்றுப் புதிர்ப்போட்டி நடத்தும் பள்ளியின் பெயரைக் குறிப்பிடுக.

## நடவடிக்கை

நீ பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியில் நடத்தப்படும் வரலாற்றுப் புதிர்ப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறாய். கீழ்க்காணும் பங்கேற்புப் பாரத்தை நிறைவு செய்க.




நான் வரலாற்றுப் புதிர்ப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புகிறேன்.

முழுப்பெயர்:

______________________________________________

பள்ளியின் பெயரும் முகவரியும் :

______________________________________________

______________________________________________

**ஆசிரியர் குறிப்பு**

பயிற்சிப் புத்தகத்தில் பாரத்தை நிறைவு செய்ய வழிகாட்டுதல்.

ஒவ்வொரு பள்ளியும் அதற்குரிய பெயரைக் கொண்டுள்ளது. அதுவே அப்பள்ளியின் அடையாளமாகும். பொதுவாக இடம், சாலை அல்லது பெருமைக்குரிய தலைவர் பெயர்களிலிருந்து பள்ளிக்குப் பெயர் சூட்டப்படுகிறது. பள்ளி முகவரி இடம், சாலையின் பெயர், அஞ்சல் குறியீட்டு எண், மாநிலத்தின் பெயர் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். ஓர் அமைவிடத்தைத் தேட முகவரி உதவுகிறது. முழுமுகவரி இல்லாமல் வேறு இடத்தின் முகவரியைப் பயன்படுத்தும் பள்ளிகளும்கூட உள்ளன.

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளி,
ஜாலான் செம்பாடான்,
14300 நிபோங் தெபால்,
செபராங் பிறை செலாத்தான்,
பினாங்கு.




சலாரோம் தேசியப்பள்ளி,
ஜாலான் செப்புலுட் காலாபக்கான்,
அஞ்சல் பெட்டி எண் 62,
89957 நபாவான்,
சபா.




உலு மெலிபிஸ் தேசியப்பள்ளி,
d/a சோங் மாவட்டக் கல்வி அலுவலகம்,
96850 சோங்,
சரவாக்.



சுங் ஹுவா சீமுஞ்சான் தேசிய வகைச் சீனப்பள்ளி,
பெக்கான் சீமுஞ்சான்,
94800 சீமுஞ்சான்,
சரவாக்.



தாமான் துன் அமினா தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி,
ஜாலான் பெர்காசா 1,
தாமான் துன் அமினா,
81300 ஸ்கூடாய், ஜொகூர் டாருல் தக்சிம்.



**உங்களுக்குத் தெரியுமா?**

நம் நாட்டில் பல்வகை பள்ளிகள் உள்ளன.


- தேசியப்பள்ளிகள் மலாய் மொழியைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்துகின்றன.
- தேசிய வகைப் பள்ளிகள் சீனம் அல்லது தமிழ்மொழியைப் பயிற்றுமொழியாகப் பயன்படுத்துகின்றன.


1.3.1
K 1.3.7

**ஆசிரியர் குறிப்பு**

பள்ளியின் பெயரையும் முகவரியும் சரியாகச் சொல்ல ஆசிரியர் வழிகாட்டுதல்.

# என் பள்ளியின் அமைவிடம்








பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியின் அமைவிடத்தைத் தற்போதைய செயலிகளின்வழி எளிதாகத் தேடலாம்.

**அறிவுக்கு வேலை**

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளி எங்கு அமைந்துள்ளது?



என் பள்ளி பொருத்தமான இடத்தில் அமைந்துள்ளது. இங்குச் சாலைவழியாக எளிதில் சென்று வரலாம். பெர்மாத்தாங் தோக் மாஹாட் பள்ளிவாசலும் பாரிட் புந்தார் மருத்துவமனையும் பாரிட் புந்தார் இரயில் நிலையமும் என் பள்ளியின் முக்கிய அமைவிட அடையாளங்களாக அமைகின்றன.




பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியின் அமைவிட வரைபடம்

ஒரு பள்ளியை எளிதில் அடையாளங்காண அமைவிட அடையாளங்கள் துணைபுரிகின்றன. இன்றைய நவீனத் தொழில்நுட்பமும் வழிகாட்டிப் பலகைகளும் அமைவிடங்களைக் கண்டறியத் துணைபுரிகின்றன.

**அருஞ்சொல்**

**அமைவிட அடையாளம்:**
ஓர் இடத்தை எளிதில் அடையாளங்காண கட்டடங்கள், மரங்கள், கட்டுமானங்கள் ஆகியன வழிகாட்டிகளாக விளங்குகின்றன.

**அறிவுக்கு வேலை**

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியைச் சுற்றியுள்ள அமைவிட அடையாளங்கள் யாவை?

**நடவடிக்கை**

உன் பள்ளி அமைவிட வரைபடத்தை அருகிலுள்ள அமைவிட அடையாளங்களோடு வரைந்திடுக.

I.3.2

**ஆசிரியர் குறிப்பு**
அமைவிட அடையாளங்களின் துணையுடன் பள்ளியை அடையாளங்காண வழிகாட்டுதல்.



# பள்ளி வரலாறு

நாம் பள்ளியைப் போற்றுவதற்கு அதன் வரலாற்றைக் கற்பது அவசியம். பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளி தனக்கே உரிய சிறப்புமிகு வரலாற்றைக் கொண்டுள்ளது. மேலும், இப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து பல்வேறு மாற்றங்களையும் வெற்றிகளையும் கண்டுள்ளது.

## 1890


1890ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இப்பள்ளிக்குப் பெர்மாத்தாங் தோக் மாஹாட் கிராமத்தின் நினைவாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. உள்ளூர் மக்கள் மத்தியில் 'செக்கோலா ஈத்தேக்' எனவும் இப்பள்ளி அறியப்படுகிறது.



இக்கட்டடத்தில் மூன்று வகுப்பறைகள் மட்டுமே இருந்தன.

## 1956


மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்ததால் இப்பள்ளி பெரிய இடத்திற்கு மாற்றப்பட்டது.



இக்கட்டடத்தில் ஏழு வகுப்பறைகள் இருந்தன.

## 2001

மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பை ஈடுசெய்வதற்கு இணைக்கட்டடம் ஒன்றும் கட்டப்பட்டது.



பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியின் இணைக்கட்டடம்.

### உங்களுக்குத் தெரியுமா?

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியின் முதல் கட்டடம் வாத்துக் கொட்டகையைப் போல மிகத் தாழ்வாகக் கட்டப்பட்டதால் இப்பள்ளி "செக்கோலா ஈத்தேக்" என்றும் அழைக்கப்படுகிறது.

### அறிவுக்கு வேலை

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளி உலகளவில் படைத்த சாதனை யாது?

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப் பள்ளிக் காணொலி

**ஆசிரியர் குறிப்பு**

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியின் காலவரைக்கோட்டினைச் சரியாக விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.

பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளி உலகளவில் பெயர் பதித்தது.

## 2005

தேசிய அளவில் 'நாட்டின் நம்பிக்கைப் பள்ளி' என்னும் விருதைப் பெற்று இப்பள்ளி வரலாறு படைத்தது.




புறநகர் பிரிவுக்கான 'நாட்டின் நம்பிக்கை பள்ளி' நினைவுத்தூண்

## 2014

இது நனிசிறந்த குழுவகப் பள்ளியாக (Sekolah Kluster Kecemerlangan) அங்கீகரிக்கப்பட்டு மீண்டும் வரலாறு படைத்தது.




நற்சான்றிதழ்

## 2017

பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னர், இப்பள்ளி 2017ஆம் ஆண்டு உலகப் புத்தாக்கப் போட்டியில் இரட்டைத் தங்க விருதையும் சிறந்த புனைவாளர் (Best Inventor) விருதையும் பெற்றது.




விருதுச் சான்றிதழ்

வழிகாட்டியாக அமையும் பள்ளி வரலாற்றினை நாம் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். ஒவ்வொருவரும் பயின்ற பள்ளியை எண்ணி பெருமிதம் கொள்ள வேண்டும்.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **பட ஆய்வு**

1. படத்தைப் பார்த்து பள்ளி எவ்வாறு மாணவர்களிடத்தில் தன்னாளுமையை உருவாக்குகின்றது என்பதைக் கூறுக.
2. தனிநபருக்கும் சமுதாயத்திற்கும் பள்ளி ஆற்றும் பங்கையும் சேவையையும் ஏன் அங்கீகரிக்க வேண்டும் என்பதைக் குழுவில் கலந்துரையாடிப் படைத்திடுக.



I.3.3
K I.3.6

# பள்ளியின் அடையாளம்

பள்ளிச்சின்னம், பாடல், கொடி ஆகியவற்றை பெர்மாத்தாங் தோக் மஹாட் தேசியப்பள்ளி தனது அடையாளங்களாகக் கொண்டுள்ளது. பள்ளிச் சமூகத்தினர் இந்த அடையாளங்களை அவசியம் மதித்துப் பெருமைக்குரியதாகவும் போற்ற வேண்டும்.

## முன்னேற விரும்பு (SUKA MAJU)


பள்ளிச் சமூகத்தினர் ஈடுபடும் எல்லாத் துறைகளிலும் முன்னேற விரும்ப வேண்டும் என்பதே இப்பள்ளியின் முழக்கவரி ஆகும்.


## பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளி




**தீப்பந்தம்**
அடைய விரும்பும் வெற்றியைக் காட்டுகிறது.

**மீன், கப்பல், கடல்**
பரந்த கடலில் தேட வேண்டிய அறிவைக் குறிக்கிறது.






கொடி ஒரு பள்ளியின் பெருமையைக் காட்டுகிறது.

- நீல நிறம் பள்ளி மாணவர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான நல்லுறவை உணர்த்துகிறது.
- வெள்ளை நிறம் கல்வியின் தூய்மையையும் புனிதத்தையும் காட்டுகிறது.
- ஆரஞ்சு நிறம் குறிக்கோள், இலக்கு 'சுக்கா மாஜு' என்னும் முழக்கவரிக்கேற்பத் தன்னை மேம்படுத்திக் கொள்ள உத்வேகத்தை அளிக்கும் பள்ளியின் கருப்பொருள் ஆகும்.

(மூலம்: Sekolah Kebangsaan Permatang Tok Mahat))

**பள்ளிப் பாடல்**

Sukamaju cogan kata kita
Paduan semangat waja
Disiplin diri, budi pekerti
Amalan hidup, setiap hari

Menimba ilmu, menabur bakti
Untuk mencapai hasrat murni
SKPTM … SKPTM … gelaran diberi
SKPTM … SKPTM … kebanggaan kami.

பள்ளிச்சின்னத்தில் காணும் குறியீடு, கொடி, பாடல் வரி ஆகியவை தொடர்பான புரிதல் பள்ளியை நேசிக்கும் உத்வேகத்தை அளிக்கிறது. மாணவர்கள் ஒவ்வொருவரும் பள்ளியின் நற்பெயரைக் காக்க வேண்டும்.

**அறிவுக்கு வேலை**

பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியின் அடையாளங்கள் யாவை?

பள்ளியின் நற்பெயரைக் காக்க வேண்டிய அவசியத்தைக் கூறுக.

**நடவடிக்கை**

1. உன் பள்ளிப் பாடல் வரிகளை எழுதுக.
2. அப்பாடலை உத்வேகத்தோடு பாடுக.

I.3.4
K I.3.5

**ஆசிரியர் குறிப்பு**

பள்ளிப் பாடலை எழுதிப் பாடத் துணைபுரிதல்.



# பள்ளி நிர்வாக அமைப்புமுறை

பள்ளியைச் சிறந்த முறையில் நிர்வகிக்கப் பள்ளி நிர்வாக அமைப்பு முறை துணைபுரிகிறது. நல்ல நிர்வாகம் பள்ளிக்குச் சிறந்த அடைவையும் வெற்றியையும் தேடித் தரும். பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளியைத் தலைமையாசிரியரே வழிநடத்துகிறார். அவருக்கு நிர்வாகத் துணைத்தலைமையாசிரியர், மாணவர் நலத் துணைத்தலைமையாசிரியர், புறப்பாடத் துணைத்தலைமையாசிரியர் ஆகியோர் துணைபுரிகின்றனர்.

**பெர்மாத்தாங் தோக் மாஹாட் தேசியப்பள்ளி நிர்வாக அமைப்புமுறை 2019**

**தலைமையாசிரியர்**



அப்துல் ஹலிம் பின் அரிஸ்

**நிர்வாகத் துணைத்தலைமையாசிரியர்**



ஜனிஷா பிந்தி முகமட் டார்

**மாணவர் நலத் துணைத்தலைமையாசிரியர்**



அலியாஸ் பின் டின்

**புறப்பாடத் துணைத்தலைமையாசிரியர்**



மரிசா பிந்தி அர்ஷாட்

பள்ளியின் சீரான நிலையை அதன் திறமையான நிர்வாகம் உறுதி செய்யும். மாணவர்களாகிய நாம் பள்ளியின் அனைத்து விதிமுறைகளையும் கட்டளைகளையும் மதித்து நடக்க வேண்டும்.

## நடவடிக்கை

உன் பள்ளியைப் பற்றிய திரட்டேட்டை இணையராகத் தயாரித்திடுக. அத்திரட்டேடு கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. பள்ளியின் பெயரும் முகவரியும்
2. பள்ளிச்சின்னம்
3. பள்ளியின் நிர்வாக அமைப்புமுறை
4. பள்ளியின் வெற்றி
5. உள்ளூர் மக்களுடன் பள்ளியின் ஈடுபாடு

**ஆசிரியர் குறிப்பு**

பள்ளி நிர்வாக அமைப்புமுறையை விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.

I.3.4
K I.3.7

## மீட்டுணர்வோம்


**எனது அறிவுக் களஞ்சியம்**

பொதுவாக இடம், சாலை அல்லது பெருமைக்குரிய தலைவர் பெயர்களிலிருந்து பள்ளிக்குப் பெயர் சூட்டப்படுகிறது. பள்ளி முகவரி இடம், சாலையின் பெயர், அஞ்சல் குறியீட்டு எண், மாநிலத்தின் பெயர் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.




**என் பள்ளி அமைவிடம்**

பள்ளியின் அமைவிடத்தை அருகிலுள்ள அமைவிட அடையாளங்கள்வழி கண்டறியலாம்.





**பள்ளி வரலாறு**

பள்ளி வரலாறு என்பது பள்ளியின் தோற்றத்தையும் அதன் முக்கிய நிகழ்வுகளையும் குறிக்கும்.



**பள்ளி அடையாளங்கள்**

பள்ளிச்சின்னம், பாடல், கொடி ஆகிய தகவல்களைக் கொண்டிருக்கும்.




**பள்ளி நிர்வாக அமைப்புமுறை**

பள்ளி சீராக நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கே பள்ளி நிர்வாக அமைப்புமுறை உருவாக்கப்படுகிறது.




இந்த அலகு பள்ளியின் பெயர், வரலாறு, அடையாளம், நிர்வாக அமைப்புமுறை ஆகியவற்றை விவரிக்கின்றது. பள்ளிச் சமூகத்தினர் பள்ளியை எண்ணி பெருமிதம் கொள்ள வேண்டும். அடுத்த அலகில் நாம் பயிலவிருக்கும் வசிப்பிட வரலாறு இப்பெருமித உணர்வை மேலோங்கச் செய்யும்.



## சிந்தித்துப் பதிலளி

**அ. காலி இடத்தை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| பங்களிப்பையும் | வழிகாட்டியாகத் | அடையாளமாகப் |
| தலைவர் | அமைவிட அடையாளத்தை | |

1. பள்ளியின் பெயர் பொதுவாக இடம், ____________, சாலையின் பெயர்களின் நினைவாகச் சூட்டப்படுகின்றது.
2. __________ வைத்துப் பள்ளியின் அமைவிடத்தை எளிதில் அடையாளங்காணலாம்.
3. பள்ளியின் இலக்கை அடையவும் மேம்பாடு காணவும் ___________ திகழும் பள்ளி வரலாற்றை அவசியம் கற்க வேண்டும்.
4. நம்மைச் சிறந்த மனிதனாக்கிய பள்ளியின் சேவையையும் _________ அங்கீகரிக்க வேண்டும்.
5. பள்ளிச் சமூகத்தினர் அனைவரும் பெருமிதம் கொள்ளும் _________ பள்ளிச்சின்னம் விளங்குகிறது.








(மூலம்: Sekolah Kebangsaan (1) Jalan Batu Tiga, Klang, Selangor)

**ஆ. மேற்கண்ட படத்தைக் கவனிக்கவும். பள்ளிக்கு நற்பெயரைப் பெற்றுத்தரும் வழிமுறைகளில் மூன்றினை எழுதுக.**



i. ______________________________________

ii. ______________________________________

iii. ______________________________________


**ஆசிரியர் குறிப்பு**

- பதிலளிக்கத் துணைபுரிதல்.
- இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.



# நாட்டை நேசிப்போம்

தன்னையும் சமுதாயத்தையும் நாட்டையும் மேம்படுத்த அறிவு பெறும் இடமாகப் பள்ளித் திகழ்கிறது.






பள்ளியில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வதன்வழி ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையையும் நாட்டுப்பற்றையும் உருவாக்கலாம்.
(மூலம்: Wan Marzuqi bin Wan Mustafa, Sekolah Kebangsaan Pos Brooke, Gua Musang, Kelantan)




# அலகு 4

# என் வசிப்பிட வரலாறு

## சாரம்

வசிப்பிடம் மனிதரின் அடிப்படைத் தேவையாகும். இந்த அலகு வசிப்பிட நிலப்பரப்பு, வரலாறு, உள்ளூர்த் தலைவர் ஆகிய தகவல்களை முழுமையாக விவரிக்கின்றது.





(மூலம்: Mohd Zafarudin bin Buyong)

## குடியியல் நெறி

- அன்புடைமை
- கடமையுணர்வு

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. வசிப்பிடம் தொடர்பான முழுமையான தகவல்களைக் குறிப்பிடுதல்.
2. வசிப்பிட நிலப்பரப்பை விளக்குதல்.
3. வசிப்பிட வரலாற்றை விளக்குதல்.
4. உள்ளூர்த் தலைவர்களை விவரித்தல்.





(மூலம்: Rosmawati binti Ramli)

## அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

AKPS

1. வசிப்பிட வரலாற்றை விளங்கிக் கொள்ளல்.
2. வசிப்பிடத் தகவல்களைத் திரட்டுதல்.
3. உள்ளூர்த் தலைவர்களின் தகவல்களைத் திரட்டுதல்.



# இதுவே என் வசிப்பிடம்

ஒவ்வொரு வசிப்பிடத்திற்கும் முகவரி இருக்கும். முகவரி வீட்டு எண், சாலையின் பெயர், அஞ்சல் குறியீட்டு எண், நகரின் பெயர், மாநிலப் பெயர் ஆகிய தகவல்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வசிப்பிடமும் தனக்கே உரிய சிறப்புகளையும் வசதிகளையும் கொண்டிருக்கும்.



**புளோரன்ஸ் ஜேசி, மிரி**

நான் எண் 45, ரூமா பாஞ்சாங் சுங்கை மாமுட், 98150 மிரி, சரவாக் என்னும் முகவரியில் வசிக்கிறேன். என் வசிப்பிடம் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் பிரசித்திப் பெற்ற நியா குகையின் அருகில் உள்ளது. இப்பகுதியில் பள்ளிக்கூடமும் மருத்துவசாலையும் உள்ளன.



(மூலம்: Noor Syazana binti Taib))

**லுக்மான் ஹாக்கிம், ஜொகூர் பாரு**

என் வீட்டு முகவரி எண் 14, ஜாலான் தீராம் 17/பி, தாமான் சவ்ஜானா, 81800 ஜொகூர் பாரு, ஜொகூர் என்பதாகும். என் வசிப்பிடம் தெலுக் டங்காவிற்கும் புக்கிட் சீரின் அரண்மனைக்கும் அருகில் அமைந்துள்ளது. என் வசிப்பிடத்தில் பள்ளிக்கூடம், மருத்துவமனை, மனமகிழ் பூங்கா ஆகியவை உள்ளன.




(மூலம்: Nurul Syahida binti Muhamad Noor)



**அறிவுக்கு வேலை**

சுங்கை மாமுட் நீண்ட வீட்டுப் பகுதியில் காணப்படும் வசதிகளைக் கூறுக.




**பீட்டர் ஜாக்சன், ரானாவ்**

என் வீடு எண் 17, ஜாலான் ரண்டகோங் ஹிம்பாஹான், கம்போங் கேசிசிங்கோன், குண்டாசாங், 89300 ரானாவ், சபா எனும் முகவரியில் உள்ளது. என் வசிப்பிடம் தென் கிழக்கு ஆசியாவிலேயே மிக உயரமான கினாபாலு மலையின் அருகில் உள்ளது. இங்குப் பள்ளிக்கூடமும் சந்தையும் உள்ளன.



(மூலம்: Junaydie bin Sihan)

சிறப்புகளையும் தனித்துவத்தையும் கொண்டிருக்கும் வசிப்பிடப்பகுதியை நாம் போற்ற வேண்டும்.

**நடவடிக்கை** **சுவரொட்டி வரைதல்**

'உன் வசிப்பிடப் பொதுநல வசதிகளைப் பேணுவதன் அவசியம்' என்னும் கருப்பொருளில் சுவரொட்டி ஒன்றை வரைக.

1.4.1
K 1.4.5

**ஆசிரியர் குறிப்பு**

முகவரி, அமைவிட அடையாளம், பொதுநல வசதிகள் ஆகியவற்றின் பொருளைத் தெளிவுறுத்த வழிகாட்டுதல்.

# என் வசிப்பிடப் பகுதி

ஒவ்வொரு வசிப்பிடப் பகுதியும் உயர்நிலப் பகுதி, சமநிலப் பகுதி, கடற்கரை, ஆற்றோரப் பகுதி என வெவ்வேறு நிலப்பரப்புகளைக் கொண்டுள்ளது. இவை மக்களின் வாழ்வியல் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு தனித்துவத்தையும் கொண்டவையாகத் திகழுகின்றன.

New Message

To: lukmanhakim@xymail.com, peterjackson@xymail.com

Cc:

Subject: என் வசிப்பிடப் பகுதி

அன்பு நண்பர்கள் லுக்மான் ஹாக்கிமிற்கும் பீட்டருக்கும்,
நலமாக இருக்கிறீர்களா? நண்பர்களே, நான் என் வசிப்பிடத்தைப் பற்றி உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

நான் சரவாக், மிரியின் உட்பகுதியில் வசிக்கிறேன். என் வசிப்பிடப் பகுதியின் நிலப்பரப்பு மலைகளையும் சமவெளிப் பகுதிகளையும் கொண்டது. மலைகள் நிறைந்த நிலப்பரப்பு வர்த்தக ரீதியிலான செம்பனைப் பயிர்த்தொழிலுக்குத் துணைபுரிகின்றது. இதைத் தவிர்த்து, துசான் கடற்கரையிலுள்ள கடற்குதிரை போன்ற கற்பாறையும் தாமான் நெகாரா மூலுவிலுள்ள தனித்துவமிகு சுண்ணாம்புக் கற்குகையும் என் வசிப்பிடத்தின் தனிச்சிறப்புகளாகும். இக்கடிதத்துடன் என் வசிப்பிடத்திலுள்ள எழில்மிகு இடங்களின் படங்களையும் இணைத்துள்ளேன்.

நீங்களும் உங்கள் வசிப்பிடத்தைப் பற்றி எனக்கும் கூறுவீர்கள் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

இக்கண்,
புளோரன்ஸ் ஜேசி



தாமான் நெகாரா மூலு



துசான் கடற்கரை, பெக்கெனு
(மூலம்: Monica Chai Sze Ching)

New Message

To: florencejessy@gmail.com, peterjackson@xymail.com

Cc:


Subject: Re: என் வசிப்பிடப் பகுதி

உன் மின்னஞ்சலுக்கு நன்றி புளோரன்ஸ்.


நான் ஜொகூர் பாருவில் வசிக்கிறேன். ஜொகூர் பாருவின் நிலப்பரப்பு கடற்கரையும் சமவெளிப் பகுதிகளையும் கொண்டதாகும்.

ஜொகூர் பாரு, சிங்கப்பூர், தஞ்சோங் பெலெப்பாஸ் பன்னாட்டுத் துறைமுகம் ஆகிய இடங்களை இணைக்கும் தம்பாக் ஜொகூர் இப்பகுதியின் தனிச்சிறப்பாகும். மேலும், இது தொழிற்பேட்டையாகவும் தொழிற்துறைப் பகுதியாகவும் மேம்பாடு கண்டுள்ளது.

இவ்வண்ணம்,
லுக்மான் ஹாக்கிம்



தம்பாக் ஜொகூர்



தஞ்சோங் பெலெப்பாஸ் துறைமுகம்

To: florencejessy@xymail.com, lukmanhakim@xymail.com

Cc:

Subject: Re: என் வசிப்பிடப் பகுதி

புளோரன்ஸ், லுக்மான் உங்களின் மின்னஞ்சலுக்கு மிக்க நன்றி. நானும் என் வசிப்பிடத்தைப் பற்றிக் கூற விழைகின்றேன்.

என் வசிப்பிடம் சபா, ரானாவில் அமைந்துள்ளது. இதன் நிலப்பரப்பு ஆறுகளையும் உயர்நிலப் பகுதிகளையும் கொண்டதாகும். உயர்நிலப் பகுதிகள் சுற்றுப் பயணிகளைக் கவரும் இடங்களாகவும் விவசாயப் பகுதிகளாகவும் விளங்குகின்றது.

போரிங் சுடுநீர்க் குளமும் குண்டாசாங், மெசிலாவிலுள்ள மாட்டுப் பண்ணையும் ரானாவின் சிறப்புகளாகத் திகழ்கின்றன.

இக்கண்,
பீட்டர் ஜாக்சன்



போரிங் சுடுநீர்க் குளம்



மாட்டுப் பண்ணை, மெசிலாவ், குண்டாசாங்

ஒவ்வொரு வசிப்பிடப் பகுதியும் வெவ்வேறு நிலப்பரப்புகளைக் கொண்டிருந்தாலும் தனக்கே உரிய சிறப்புகளைக் கொண்டுள்ளது. வசிப்பிடங்களைச் சுற்றுலா மையங்களாகவும் பொருளாதார மூலங்களாகவும் வேலை வாய்ப்பு நிறைந்த இடங்களாகவும் உருவாக்கலாம்.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **வல்லுநர் இருக்கை**

1. வைக்கப்பட்டுள்ள நாற்காலியில் ஒரு மாணவர் அமர்தல்.
2. அம்மாணவர், நிபுணராகக் கேள்விகளுக்குப் பதிலளித்தல்.
   (அ) உங்கள் வசிப்பிடத் தூய்மையைப் பேணும் வழிமுறைகளைப் பரிந்துரை செய்க.
   (ஆ) உங்கள் வசிப்பிடத் தூய்மையையும் எழிலையும் பேணுவதன் முக்கியத்துவத்தை விளக்குக.

1.4.2
K 1.4.6

**ஆசிரியர் குறிப்பு**

வசிப்பிடத்தை ஆராய வழிகாட்டுதல்.

# வசிப்பிட வரலாறு

ஒவ்வொரு வசிப்பிடப் பகுதியும் அதற்குரிய வரலாற்றைக் கொண்டிருக்கும். அந்த வரலாறானது அதன் பெயர் பூர்வீகத்தையும் நடந்த முக்கிய நிகழ்வுகளையும் விவரிக்கும்.



வரலாற்றுக் குழு

**ஹாபி**
வணக்கம். என் பள்ளியில் நிகழாய்வு ஒன்றினை மேற்கொள்ள மிரி, ஜொகூர் பாரு, ரானாவ் ஆகியவற்றின் வரலாற்றுத் தகவல்கள் எனக்குக் கிடைக்குமா?
15:38

**புளோரன்ஸ்**
தாராளமாகச் சொல்கிறேன் ஹாபி. மிரி ஒரு காலத்தில் புருணை சுல்தான்களாலும் புருக் குடும்பத்தினராலும் ஆட்சி செய்யப்பட்டது. 1910ஆம் ஆண்டு தொடங்கி பெட்ரோலியத் தொழிற்துறையின் வாயிலாக மேம்படத் தொடங்கியது. இது 2005ஆம் ஆண்டில் மாநகராக அங்கீகரிக்கப்பட்டது. மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகத்திலிருந்து 1950ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட மிரி நகரின் நிழற்படத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன்.
15:40



1950ஆம் ஆண்டுகளில் மிரி நகரம். 15:42

செய்தி

(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)

**லுக்மான் ஹாக்கிம்**
ஜொகூர் பாருவின் இயற்பெயர் தஞ்சோங் புத்ரி ஆகும். தஞ்சோங் புத்ரி 1855ஆம் ஆண்டு தெமங்கோங் டயிங் இப்ராஹிம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் 1866ஆம் ஆண்டில் சுல்தான் அபு பாக்கார், தஞ்சோங் புத்ரி என்னும் பெயரை ஜொகூர் பாரு என மாற்றினார்.

15:50



சுல்தான் அபு பாக்கார் 15:52



ஜொகூர் பாரு மாநகரம் 15:54

செய்தி

(மூலம்: மலேசியப் பழஞ்சுவடிக் காப்பகம்)



**பீட்டர் ஜாக்சன்**
நெல் வயல் எனப் பொருள்படும் 'ரனாஹோன்' என்னும் சொல்லிலிருந்து ரானாவ் என்ற பெயர் உருவானது. மாட் சாலே பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிய காலத்தில் அவரின் முக்கியத் தற்காப்பு அரணாக ரானாவ் விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. 2000ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (UNESCO) இங்குள்ள கினபாலு தேசியப் பூங்காவை உலகப் பாரம்பரியத் தளமாகப் பிரகடனப்படுத்தியது. (Tapak Warisan Dunia).

15:56



மாட் சாலே நினைவுத்தூண்

செய்தி



வசிப்பிட வரலாற்றைப் புரிந்து கொண்டால் அதன்மீது பெருமிதமும் போற்றும் உணர்வும் ஏற்படும்.



நீங்கள் ஏன் வசிப்பிடப் பகுதியைப் போற்ற வேண்டும்?

I.4.3
K I.4.7

**ஆசிரியர் குறிப்பு**
வசிப்பிட வரலாற்றைத் தெரிந்து கொள்ள வழிகாட்டுதல்.

# உள்ளூர்த் தலைவர்

சமுதாயத்தின்மீது பற்று கொண்டு சேவை செய்பவரே உள்ளூர்த் தலைவர் எனப்படுகிறார். இவர் உள்ளூர் மக்களால் அறியப்பட்டவராகவும் சமுதாயத்தில் முக்கியப் பதவியை வகிப்பவராகவும் இருப்பார்.





(மூலம்: Junaydie bin Sihan)

**ஜுனைடி பின் சிஹான்**

- 10 ஜூலை 1977இல் பிறந்தார். இவர் கினபாலு மலைக்கு வரும் மலையேறிகளுக்கு வழிகாட்டித் தலைவராகப் (Ketua Malim Gunung) பொறுப்பு வகித்தார்.
- கினபாலு மலையேறிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதும் கினபாலு தேசியப் பூங்காவின் சுற்றுச்சூழலைப் பேணுவதும் இவரது பணிகளாகும்.
- மலையேறி வழிகாட்டிகளுக்குப் பணி விளக்கம் அளிப்பதும் இயற்கைசார் சுற்றுலாத் தளங்களை விளம்பரப்படுத்தத் துணைபுரிவதும் இவரது பொறுப்புகளாகும்.

**அருஞ்சொல்**

**மலையேறி வழிகாட்டி:** மலையேறிகளுக்கு வழிகாட்டியாகப் பணிபுரிபவர்.
**ஆர்வலர்:** குறிப்பிட்ட நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுபவர்.

**அறிவுக்கு வேலை**

உள்ளூர்த் தலைவர் என்பவர் யார்?

**ஆசிரியர் குறிப்பு**

வசிப்பிடத்தில் உள்ளூர்த் தலைவரை அறிய வழிகாட்டுதல்.





(மூலம்: Muhammad Azali Kalki bin Abdullah)

## முகமது அஸாலி கல்கி பின் அப்துல்லா

- 1 ஆகஸ்ட்டு 1964இல் பிறந்தார். இவர் ஜொகூர் பாரு, நுசாந்தாரா தேசியப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- முன்னாள் போதைப் பித்தர்களுக்கு உதவும் நோக்கில் சமூகத்திற்கான போதைப்பொருள் தடுப்புப் பயிற்றியை அறிமுகப்படுத்தினார்.
- போதைப் பித்தர்கள் மீண்டும் சமூகத்தில் இணைவதற்குப் போதைப்பொருள் தடுப்புச் சொற்பொழிவாளராகவும் சமூக ஆர்வலராகவும் பங்காற்றினார்.

## சித்தி ஜஹாரா பிந்தி மாத்தாசான்

- 16 மார்ச்சு 1951இல் பிறந்தார். இவர் மிரியில் 'அடுக்கு கேக்' தயாரிக்கும் தொழில் முனைவர்.
- தொடக்கத்தில் சிறிய அளவில் கிராமங்களில் விற்பனை செய்தார். பின்னர் இவரது வாணிபம் வெளிநாடுவரை விரிவடைந்தது.
- சமையல் வகுப்பு நடத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், உள்நாட்டுப் பொருள்களை வெளிநாடுகளில் விளம்பரப்படுத்துதல் ஆகியவை இவரது சேவைகளாகும்.





(மூலம்: Mohammad Hafidz bin Rohani)

நாட்டின் சுபிட்சத்திற்கும் மேம்பாட்டிற்கும் உள்ளூர்த் தலைவரின் சேவையைப் போற்றுவதோடு அவற்றை முன்மாதிரியாகவும் கொள்ள வேண்டும்.

1.4.4

## நிகழாய்வு

### உள்ளூர்த் தலைவர் தொடர்பான நிகழாய்வு

| | |
|---|---|
| ஆய்வுச் சிக்கல் | உள்ளூர்த் தலைவர் வசிப்பிட மேம்பாட்டிற்குத் துணைபுரிகிறார். ஆராய்க. |
| ஆய்வு நோக்கம் | • உள்ளூர்த் தலைவரைக் குறிப்பிடுதல்.<br>• உள்ளூர்த் தலைவரின் பங்களிப்பை விவரித்தல்.<br>• முன்மாதிரியாக விளங்கும் தலைவரின் தலைமைத்துவப் பண்புகளை விளக்குதல். |
| மேற்கோள் | • நூல்/ஆய்விதழ்/சஞ்சிகை<br>• மூலநபர்<br>• ஆவணம்/அறிக்கை/நாட்குறிப்பு<br>• நாளிதழ்<br>• அதிகாரப்பூர்வ அகப்பக்கங்கள்<br>• அருங்காட்சியகம்/பழஞ்சுவடிக் காப்பகம்/தொடர்புடைய நிறுவனங்கள் |
| ஆய்வறிக்கை | • ஆய்வுச் சிக்கல்<br>• ஆய்வு நோக்கம்<br>• ஆய்வுநெறி<br>• தரவுப் பகுப்பாய்வு<br>• ஆய்வு முடிவு<br>• மேற்கோள்<br>• இணைப்பு |

**அருஞ்சொல்**

**நிகழாய்வு:** விடய ஆய்வு என்றும் கூறப்படுகிறது.

**ஆசிரியர் குறிப்பு**

- இந்நடவடிக்கையைத் தனிநபராகவும் குழுமுறையிலும் நடத்தலாம்.
- ஆய்வு அறிக்கை ஒன்றிலிருந்து ஐந்து பக்கங்களில் இருக்க வேண்டும்.
- நிகழாய்வை நிர்ணயிக்கப்பட்ட வடிவத்தில் செய்திட வழிகாட்டுதல்.

# மீட்டுணர்வோம்



### என் வசிப்பிடம்

- வீட்டு எண், சாலையின் பெயர், அஞ்சல் குறியீட்டு எண், நகரத்தின் பெயர், மாநிலப் பெயர் ஆகியவையே வசிப்பிடத் தகவல்கள் எனப்படும்.

### என் வசிப்பிடப் பகுதி

- என் வசிப்பிடப் பகுதிகள் நிலப்பரப்புகளுக்கேற்ப வேறுபட்டுள்ளன.





### வசிப்பிட வரலாறு

- ஒவ்வொரு வசிப்பிடமும் அதற்கே உரிய வரலாற்றைக் கொண்டிருக்கும்.

### உள்ளூர்த் தலைவர்

- உள்ளூர்த் தலைவர் என்பவர் தம் வசிப்பிடப் பகுதியின் மேம்பாட்டுக்குப் பல சேவைகளைப் புரிந்த தனிநபர் ஆவார்.



இந்த அலகில் வசிப்பிடப் பகுதி குறித்த தகவல்கள் விளக்கப்பட்டன. வசிப்பிட வரலாறு பற்றிய அறிவு, நிலப்பரப்பு உருவான வரலாற்றை அறிந்து கொள்ளத் துணைபுரியும். இனி அடுத்த அலகில் உலக நிலப்பரப்பு வரலாற்றை 'உறைபனி யுகம்' எனும் தலைப்பில் பயில்வோம்.

# சிந்தித்துப் பதிலளி

அ. பின்வரும் கூற்றுகளை இணைத்திடுக.

1. தென்கிழக்காசியாவின் மிக உயரமான மலை என் வசிப்பிடத்தில் உள்ளது.
2. நான் சுங்கை மாமுட் நீண்ட வீட்டில் வசிக்கிறேன்.
3. என் வசிப்பிடத்தில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கப்பட்டது.
4. என் வசிப்பிடத்தின் இயற்பெயர் தஞ்சோங் புத்ரி.
5. என் வசிப்பிடம் உள்ளூர்ப் போராளி ஒருவரின் தற்காப்பு அரணாக இருந்தது.
6. என் வசிப்பிடம் தெமெங்கோங் டயிங் இப்ராஹிம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

- ரானாவ்
- மிரி
- ஜொகூர் பாரு



ஆ. கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.

1. உன் வசிப்பிடத்தில் காணப்படும் மூன்று வசதிகளைப் பட்டியலிடுக.
   i. ______________________________.
   ii. ______________________________.
   iii. ______________________________.

2. உன் வசிப்பிட இயற்கை அழகைப் பேணும் இரு வழிமுறைகளைக் குறிப்பிடுக.
   i. ______________________________.
   ii. ______________________________.

3. நாம் உள்ளூர்த் தலைவரை அறிந்திருக்க வேண்டியதன் அவசியம் யாது?


______________________________

**ஆசிரியர் குறிப்பு**

இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

# நாட்டை நேசிப்போம்

நமக்கு வசிப்பிடம் இருப்பதற்காக இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். நாம் நம் வசிப்பிடப் பகுதியை எதிர்காலச் சந்ததியினருக்காகப் பாதுகாக்க வேண்டும்.






வசிப்பிடப் பகுதியைப் பேணுவதில் நாம் ஒத்துழைக்க வேண்டும்.
(மூலம்: BERNAMA)



# அலகு 5
# உறைபனி யுகம்



## சாரம்

பூமியின் வெப்பநிலை அதிகரிப்பால் உறைபனி உருகத் தொடங்கிற்று. அதனால், பூமியின் நிலப்பரப்பும் மனிதனின் வாழ்வும் மாற்றம் கண்டன. இந்த அலகு, உறைபனி யுகத்தின் காலவரைக்கோட்டையும் அதன் பொருளையும் விளக்குகின்றது. அத்தோடு, தென்கிழக்காசியாவில் கடை உறைபனி யுகத்தின்போது ஏற்பட்ட மாற்றங்களையும் விளைவுகளையும் விவரிக்கின்றது.

## குடியியல் நெறி

- கடமையுணர்வு
- அன்புடைமை

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. உறைபனி யுகத்தின் பொருளைக் கூறுதல்.
2. கடை உறைபனி யுகத்தின் காலவரைக்கோட்டைப் பட்டியலிடுதல்.
3. கடை உறைபனி யுக மாற்றங்களை விளக்குதல்.
4. தென்கிழக்காசியாவில் கடை உறைபனி யுகத்தின் விளைவுகளால் ஏற்பட்ட மாற்றங்களை விவரித்தல்.



## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

1. உறைபனி யுகத்தின் மாற்றத்தையும் நிகழ்வையும் காலநிரலுக்கேற்ப விளக்குதல்.
2. உறைபனி யுகம் விட்டுச் சென்ற திடமான சான்றுகளை விளங்கிக் கொள்ளுதல்.
3. தென்கிழக்காசியாவில் கடை உறைபனி யுகத்தின் விளைவுகளால் ஏற்பட்ட மாற்றங்களை விவரித்தல்.



# உறைபனி யுகத்தை அறிதல்

உறைபனி யுகம் என்பது வெப்பநிலை மிகுதியாகக் குறைந்து பூமியை அடர்ந்த பனிக்கட்டிகள் சூழ்ந்திருந்த காலமாகும். இந்த யுகம் நீண்ட காலம் நீடித்திருந்தது.

கடை உறைபனி யுகத்தில் பூமியின் வெப்பநிலை அதிகரித்தது. இதனால் பனிக்கட்டி நகர்ச்சி (Glasier) அல்லது பனிக்கட்டி உருகுதல் ஏற்பட்டது. பனிக்கட்டி உருகியதால் கடலின் நீர்மட்டம் உயர்ந்தது.



கடை உறைபனி யுகத்தில் பனிக்கட்டி நகர்ச்சி

## அருஞ்சொல்

**பனிக்கட்டி நகர்ச்சி :** பெரிய பனிப்பாறைகள் மெல்ல மெல்ல நகர்ந்து பூமியின் மேற்பரப்பில் உருகுவது.

**காலா :** காலம், நேரம்

**குவார்டனர் காலம் :** 2.5 மில்லியன் ஆண்டுகளுக்குமுன் தொடங்கிய காலம்.

**எப்போக் (Epok) :** 70 மில்லியன் ஆண்டுகளுக்குமுன் தொடங்கி தற்போது வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி.

உலக வரலாற்றில் உறைபனி யுகம் ஐந்து முறை ஏற்பட்டுள்ளது. கடை உறைபனி யுகம் குவார்டனர் காலத்தில் நிகழ்ந்தது. இதனைப் பிளேஸ்தோசேன், ஹோலோசன் என இரு காலங்களாகப் பிரிக்கலாம்.

## கடை உறைபனி யுகத்தின் இரு காலங்கள்

**1 பிளேஸ்தோசேன் காலம் (Epok Pleistosen)**

- பூமியில் வெப்பநிலை குறைந்து பெரும்பாலான பகுதிகள் பனிக்கட்டிகளால் சூழப்பட்டிருந்தன.
- மனிதர்கள் தீ மூட்டும் முறையை அறிந்து கொள்ளத் தொடங்கினர்.
- சமவெளிப்பகுதி மேலும் விரிவடைந்தது.

**2 ஹோலோசேன் காலம் (Epok Holosen)**

- பூமியின் வெப்பநிலை அதிகரிக்கத் தொடங்கியது.
- பனிக்கட்டி உருகத் தொடங்கியது.
- கடல் நீர்மட்டம் உயர்ந்தது.

**உயிரினங்களைப் பாதிக்கும் பூமியின் வெப்பநிலை குறித்து விழிப்புணர்வும் அக்கறையும் கொள்ள வேண்டும்.**

**அறிவுக்கு வேலை**

கடை உறைபனி யுகத்தில் இரு காலங்களைக் கூறுக.

2.1.1

**ஆசிரியர் குறிப்பு**


- உறைபனி யுகத்தை விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.
- கடை உறைபனி யுகத்தின் இரு காலங்களை விளங்கிக்கொள்ளத் துணைபுரிதல்.

# கடை உறைபனி யுகத்தின் காலவரைக்கோடு


கடை உறைபனி யுகத்தின் காலவரைக்கோடு பிளேஸ்தோசன், ஹோலோசன் ஆகிய இரு காலங்களை உள்ளடக்கிய குவார்டனர் காலத்தில் நடைபெற்றது.

| குவார்டனர் காலக்கட்டம் | |
|---|---|
| 2.5 மில்லியன் முதல் 11 700 ஆண்டுகளுக்குமுன் **பிளேஸ்தோசேன் காலம்** | 11 700 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து இன்றுவரை **ஹோலோசன் காலம்** |

கடை உறைபனி யுகத்தின் காலவரைக்கோடு



வளைந்த கோரைப்பல் கொண்ட புலி



கம்பளி யானை (Mamot)



சுலோத் (Sloth)

பிளேஸ்தோசேன் கால விலங்குகள்

கடை உறைபனி யுகத்தின் காலவரைக்கோட்டின்வழி, நாம் பூமிக்கும் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய முடிகிறது.

**அறிவுக்கு வேலை**

கடை உறைபனி யுகத்தில் காணப்பட்ட விலங்குகள் யாவை?

கால மாற்றத்திலிருந்து நம் வாழ்விற்கான படிப்பினையைப் பெறவேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிடுக.



2.1.2
K 2.1.5

# உருவாக்குவோம் வாரீர்

## உருகும் பனிக்கட்டி உருமாதிரி

**கருவிகளும் பொருள்களும்**

பனிக்கட்டி, காகிதக் கோப்பை, வண்ணப் பேனா, நெகிழித் தட்டு, சொட்டு நீலம்





1. சொட்டு நீலம் கலக்கப்பட்ட பனிக்கட்டியைத் தயார் செய்க.



2. பனிக்கட்டியைக் காகிதக் கோப்பையின்மேல் வைத்திடுக.



3. 15 நிமிடங்களுக்குத் திறந்த வெளியில் வைத்திடுக.



4. நெகிழித் தட்டில் நிறைந்துள்ள நீர்மட்டத்தைக் குறித்திடுக.

**ஆசிரியர் குறிப்பு**

- சிறந்த ஆய்வு முடிவைப் பெற வண்ணப் பனிக்கட்டியைப் பயன்படுத்துதல்.
- பொருத்தமான வேறு கலன்களையும் பயன்படுத்தலாம்.




# கடை உறைபனி யுக மாற்றங்கள்

கடை உறைபனி யுகத்தில் வெப்பநிலை மாற்றம் கண்டது. உலக வெப்பநிலை அதிகரித்துப் பனிக்கட்டிகள் உருகத் தொடங்கின. இந்த மாற்றம் பூமியின் இயற்பியலுக்கும் உயிரினங்களுக்கும் பெரும் விளைவைக் கொண்டு வந்தது.

## மாற்றம்

வெப்பநிலை அதிகரிப்பு பூமியின் நிலப்பரப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியது.



**பூமியின் நிலப்பரப்பில் மாற்றம்**

- பூமியின் வெப்பநிலை அதிகரித்தது.
- பனிக்கட்டி உருகத் தொடங்கியது.
- நீர் தாழ்வான பகுதிக்கு வழிந்தோடி ஏரியும் கடலும் உருவாகின.

**தட்பவெப்பம்**


- தட்டவெப்பம் கடுங்குளிர் நிலையிலிருந்து மிதமான குளிருக்கு மாறியது.
- இந்தத் தட்பவெப்ப நிலை மாற்றம் சூரிய ஒளியினாலும் பூமி வெப்பமடைந்ததாலும் ஏற்பட்டது.

**பூமியின் இயற்பியல் தோற்றத்தில் மாற்றம்**

- பூமியின் இயற்பியல் மாற்றம் கண்டது.
- கடலின் நீர்மட்டம் 100 மீட்டர்வரை அதிகரித்தது.

## விளைவு

வெப்பநிலை அதிகரிப்பு பூமியின் நிலப்பரப்பிலும் மனித, விலங்கின வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.



### பூமியின் புதிய இயற்பியல் தோற்றம்

- நன்னீர் ஏரிகள் உருவாகின.
- ஆற்றின் நீரோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது.

### விலங்கின முற்றழிவு

- வெப்பநிலை மாற்றத்தினால் முற்றழிவு ஏற்பட்டது.
- வளைந்த கோரைப்பல் கொண்ட புலி, கம்பளி யானை போன்ற விலங்குகள் முற்றாக அழிந்தன.

### மனிதக் குடியிருப்பு

- மனிதர்கள் வெப்பம் மிகுந்த பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.
- மனிதர்கள் புதிய குடியிருப்புகளை அமைக்க இடம் தேடலாயினர்.

**அறிவுக்கு வேலை**

ஏன் விலங்கின முற்றழிவு ஏற்பட்டது?

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **Gallery Walk**

1. சுற்றுச்சூழலின் இயல்பு நிலையைத் தற்காப்பதன் அவசியத்தை விவாதித்து ஒரு வெண்தாளில் குறிப்பெடுத்தல்.
2. ஒவ்வொரு குழுவினரும் பிற குழுவிற்குச் சென்று அவர்களின் படைப்பை மதிப்பிடுதல்.
3. ஒவ்வொரு குழுவினரும் வெவ்வேறு வண்ணப் பேனாவைக் கொண்டு தங்கள் கருத்தைப் பதிவு செய்தல்.

2.1.3
K 2.1.7

**ஆசிரியர் குறிப்பு**

பூமியின் நிலப்பரப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் மனித, விலங்கின வாழ்வியலிலும் நிலப்பரப்பிலும் கொண்டு வந்த மாற்றங்களை அறிந்து கொள்ள வழிகாட்டுதல்.



# தென்கிழக்காசியாவில் கடை உறைபனி யுக மாற்றத்தின் விளைவு

கடை உறைபனி யுகத்தில் ஏற்பட்ட பனிக்கட்டி நகர்ச்சி, தட்பவெப்ப நிலை மாற்றம், நிலப்பரப்பு மாற்றம் போன்றவை தென்கிழக்காசியாவிலும் விளைவைக் கொண்டு வந்தன. அவற்றில் கண்டத் தட்டில் கடல் நீர்மட்ட உயர்வு, மனித விலங்கின இடப்பெயர்ச்சி ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**


மலேசியா, சிங்கப்பூர், புருணை, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, மியன்மார், தீமோர் லெஸ்தே, வியட்னாம் ஆகியன தென்கிழக்காசிய நாடுகளாகும்.

**தென்கிழக்காசியாவிற்கு ஏற்பட்ட விளைவுகள்**


- கண்டத் தட்டில் கடல் நீர்மட்டம் அதிகரிப்பு
- மனித, விலங்கின இடப்பெயர்ச்சி

கண்டத் தட்டு எனப்படுவது தென்கிழக்காசியாவில் நிலத்தையும் தீவுகளையும் இணைக்கும் மிகப் பெரிய நிலப்பகுதி. இக்கண்டத் தட்டின் நிலை தென்கிழக்காசிய நிலப்பரப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

கடல் நீர்மட்ட அதிகரிப்பு கண்டத் தட்டு நிலப்பரப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியது.




பிளேஸ்தோசேன் காலத்தில் கண்டத் தட்டின் நிலை




கடை உறைபனி யுகத்திற்குப் பின்னர் கண்டத் தட்டின் நிலை (ஹோலோசேன் காலம்)

(மூலம்: Koleksi Prof. Dato' Dr. Mokhtar bin Saidin)

பனிக்கட்டி உருகியதால் கடல் நீர்மட்டம் அதிகரித்ததோடு தென்கிழக்காசியாவில் ஆறு, ஏரி போன்றவை உருவாக்கின. ஆற்றின் நீரோட்டம் கடற்கரை நெடுகிலும் உள்ள தாழ்வான நிலப்பகுதிகளை மூழ்கச் செய்தது.

பனிக்கட்டி உருகியதன் விளைவாக தென்கிழக்காசியாவில் புதிய குடியிருப்புகள் உருவாகின.

மனிதர்கள் உயர்நிலப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்; நாடோடிகளாக வாழ்ந்து இறுதியில் ஒரே இடத்தில் தங்கினர்.

தென்கிழக்காசியப் பகுதி விலங்குகளின் வாழ்விடமாகவும் அமைந்தது.




தென்கிழக்காசியாவில் ஏற்பட்ட கடை உறைபனி யுக மாற்றமும் அதன் விளைவும், பூமியைப் பேணுவதன் அவசியத்தையும் சுற்றுச்சூழலை நேசிப்பதன் அவசியத்தையும் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தியது.

**அறிவுக்கு வேலை**

கண்டத் தட்டில் பனிக்கட்டி உருகியதால் ஏற்பட்ட விளைவு யாது?

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் புணரமைக்கவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?


2.1.4
K 2.1.6

**ஆசிரியர் குறிப்பு**

- கடை உறைபனி யுகத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவுகளை விளங்கிக் கொள்ள வழிகாட்டுதல்.
- உலகக் கரைவரைபடத்தில் தென்கிழக்காசியாவை அடையாளங்காணச் செய்தல்.

# தேடுவோம் வாரீர்

உறைபனி யுகத்தில் வாழ்ந்த விலங்குகளைக் கண்டுபிடித்து வட்டமிடுக.




**ஆசிரியர் குறிப்பு**


இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

# மீட்டுணர்வோம்


**உறைபனி யுகத்தை அறிவோம்**

உறைபனி யுகம் என்பது வெப்பநிலை மிகுதியாகக் குறைந்து பூமியை அடர்ந்த பனிக்கட்டிகள் சூழ்ந்திருந்த காலமாகும். இந்த யுகம் நீண்ட காலம் நீடித்திருந்தது.





கடை உறைபனி யுகத்தின் காலவரைக்கோடு



பிளேஸ்தோசேன் கால விலங்குகள்


**கடை உறைபனி யுகக் காலவரைக்கோடு**

கடை உறைபனி யுகக் காலவரைக்கோடு குவார்டனர் காலத்தில் நிகழ்ந்தது.

**கடை உறைபனி யுகத்தின் மாற்றம்**

கடை உறைபனி யுகத்தின் மாற்றம் பூமியின் நிலப்பரப்பு, தட்பவெப்ப நிலை, விலங்குகள், மனிதக் குடியிருப்பு ஆகியவற்றிற்குப் பெரும் விளைவை ஏற்படுத்தியது.




**தென்கிழக்காசியாவில் கடை உறைபனி யுகத்தினால் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு**

கண்டத் தட்டின் தாழ்வான நிலப்பகுதிகள் மூழ்கி தென்கிழக்காசியாவின் நிலப்பரப்பில் மாற்றத்தை ஏற்படுத்தின.

இந்த அலகு கடை உறைபனி யுகத்தின் பொருள், காலவரைக்கோடு ஆகியவற்றை விளக்கியது. கடை உறைபனி யுக மாற்றங்கள் நிலப்பரப்பிலும் விலங்கின வாழ்விலும் விளைவை ஏற்படுத்தின. இனி அடுத்த அலகு வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மனித வாழ்க்கையில் ஏற்பட்ட வளர்ச்சியையும் மாற்றங்களையும் விவரிக்கும்.

## சிந்தித்துப் பதிலளி

**அ. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. உறைபனி யுகத்தின்போது பூமியின் வெப்பநிலை ________________ அதன் மேற்பரப்பில் பனிக்கட்டி படர்ந்திருந்தது.
   அ. குறைந்ததால் ஆ. உயர்ந்ததால் இ. உருகியதால்

2. கடை உறைபனி யுகம் ________________ மனிதனின் அன்றாட வாழ்விலும் மாறுதல்களை ஏற்படுத்தியது.
   அ. வெப்பநிலையிலும் ஆ. நிலப்பரப்பிலும் இ. கடலிலும்

3. பூமியின் வெப்பநிலை அதிகரித்ததால் கடை உறைபனி யுகத்தின்போது பனிக்கட்டி ________________ ஏற்பட்டது.
   அ. உறைதல் ஆ. நகர்ச்சி இ. உருகுதல்

4. கடை உறைபனி யுகத்தின் மாற்றங்கள் ________________ முற்றழியக் காரணமாகின.
   அ. மனிதர்கள் ஆ. விலங்குகள் இ. தாவரங்கள்

5. கடை உறைபனி யுகத்தில் வெப்பநிலை அதிகரிப்பால் ________________ கடல் நீர்மட்டம் அதிகரித்தது.
   அ. கண்டத் தட்டில் ஆ. ஜாவா கடலில் இ. மலாக்கா நீரிணையில்

**ஆ. கடை உறைபனி யுகத்தின்போது வெப்பநிலை உயர்வால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?**

(i)


(ii)

(iii)

**ஆசிரியர் குறிப்பு**
- கேள்விகளுக்குப் பதிலளிக்க வழிகாட்டுதல்.
- இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

## நாட்டை நேசிப்போம்

ஒவ்வொருவரும் சுற்றுச்சூழல் குறித்த அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு, சுற்றுச்சூழலைப் பேணும் விழிப்புணர்வையும் கொண்டிருக்க வேண்டும்.






சதுப்புநிலக் காடுகளில் மறுநடவு செய்வதன்மூலம் நம் நாட்டின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பாதுகாக்கலாம்.
(மூலம்: BERNAMA)




# அலகு 6

# வரலாற்றுக்கு முந்தைய காலம்

## சாரம்

மனித வாழ்வின் தொடக்கத்தை அறிந்து கொள்ள வரலாற்றுக்கு முந்தைய காலத்தைக் குறித்துக் கற்பது அவசியமாகும். மனிதனின் வாழ்க்கைப் பல்வேறு படிநிலைகளைக் கடந்து மேலும் விரிவடைந்துள்ளது. இந்த அலகு வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பதன் பொருள், அதன் அமைவிடங்கள் ஆகியவற்றோடு அக்கால மனிதர்களின் கருவிகள், சமூகப் பொருளாதார நடவடிக்கைகள் குறித்தும் விவரிக்கின்றது.



**குடியியல் நெறி**

- அன்புடைமை
- கடமையுணர்வு

நியா குகை, சரவாக்
(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பதன் பொருளைக் கூறுதல்.
2. நம் நாட்டின் வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்களின் எடுத்துக்காட்டுகளை வழங்குதல்.
3. வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்களின் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளை விவரித்தல்.
4. வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் தொழில்நுட்பப் பங்களிப்பை விவரித்தல்.




## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் நிரலையும் கால மாற்றத்தையும் விளங்கிக் கொள்ளுதல்.
2. கடந்த காலச் சிக்கல்களைப் புரிந்து கொள்வதன்வழி சுற்றுப்புற மாற்றத்தை எதிர்கொள்ளும் விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்தல்.
3. நம் நாட்டின் வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்களை அடையாளங்காணுதல்.

# வரலாற்றுக்கு முந்தைய காலத்தை அறிவோம்

வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது மனிதர்கள் எழுத்தை அறிந்திராத காலமாகும். வரலாற்றுக்கு முந்தைய காலம் மனிதனின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ள உதவுகிறது. இக்காலத்தைப் பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதிய கற்காலம், உலோகக் காலம் என நான்கு படிநிலைகளாகப் பிரிக்கலாம்.



வரலாற்றுக்கு முந்தைய கால மனிதனின் வாழ்க்கை முறையைக் காட்டும் படம்

## வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் காலவரைக்கோடு




இடைக் கற்காலக் கற்கோடரி

(மூலம்: Makmal Arkeologi dan Arkeometri, Institut Alam dan Tamadun Melayu, Universiti Kebangsaan Malaysia)



உலோகக் காலத்து தூலாங் மாவாஸும் (Tulang Mawas), இணைப்புக் கோடரியும் (Kapak bersoket)


(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)






புதிய கற்கால மட்பாண்டம்

(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)



பழைய கற்காலக் கைக்கற்கோடரி

(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)

மனிதர்களின் வாழ்க்கை முறையை அறிந்துகொள்ள வரலாற்றுக்கு முந்தைய காலம் துணைபுரிகிறது. மேலும், மனிதனின் வாழ்க்கை தொடர்ந்து மாற்றம் கண்டு வருவதையும் இஃது உணர்த்துகின்றது.


3.1.1

**ஆசிரியர் குறிப்பு**

வரலாற்றுக்கு முந்தைய காலவரைக்கோட்டை விளங்கிடத் துணைபுரிதல்.

# நம் நாட்டின் வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்கள்

நம் நாட்டில் வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்கள் பல உள்ளன. அங்கு வாழ்ந்த மனிதர்கள் விட்டுச்சென்ற புதைபொருள்களும் புதைபடிவங்களும் இதனை நிரூபிக்கின்றன.






சிலாங்கூர், பந்திங், கம்போங் சுங்கை லாங் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட வெண்கல முரசு


நம் நாட்டின் வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்கள்

மூலம்: 1. Nik Hassan Shuhaimi Nik Abdul Rahman (ed), 1998. *Encyclopedia of Malaysia: Early History.* Singapura: Editions Didier Millet.

2. Nik Hassan Shuhaimi Nik Abdul Rahman dan Zuliskandar Ramli, 2018. *Prasejarah dan Protosejarah Tanah Melayu.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

**அறிவுக்கு வேலை**

நம் நாட்டில் புதிய கற்காலத்து அமைவிடங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.




இந்த அமைவிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டது நம் நாட்டில் வரலாற்றுக்கு முந்தைய காலம் இருந்துள்ளதை உறுதிசெய்கின்றது.

வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்கள் அங்குக் கிடைக்கப்பெற்ற புதைபொருள்களின்வழி உறுதி செய்யப் படுகின்றன. அப்புதைபொருள்களைப் பாதுகாக்கவும் புணரமைக்கவும் வேண்டிய அவசியம் யாது?

3.1.2
K 3.1.5

**ஆசிரியர் குறிப்பு**


நம் நாட்டில் வரலாற்றுக்கு முந்தைய கால அமைவிடங்களை அடையாளங்காண வழிகாட்டுதல்.



# வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களின் வாழ்க்கை


வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களின் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சியானது அவர்களது வாழ்க்கையை மேம்பாடு அடையச் செய்தது. இதன்வழி அவர்கள் சுற்றுபுற மாறுதல்களை எளிதில் எதிர்கொண்டனர்.

**வரலாற்றுக்கு முந்தைய காலத்துச் சமூக நடவடிக்கைகள்**



### 1 பழைய கற்காலம்

- சிறு குழுக்களில் நாடோடிகளாக வாழ்ந்தனர்.
- குகைகளில் வாழ்ந்தனர்.
- கொடிய விலங்குகளை விரட்ட நெருப்பைத் திறம்படப் பயன்படுத்தினர்.



### 2 இடைக் கற்காலம்

- சிறு குழுக்களில் நாடோடிகளாக வாழ்ந்தனர்.
- குகைகளிலும் கடற்கரையோரங்களிலும் ஆற்று முகத்துவாரங்களிலும் வாழ்ந்தனர்.

### 3 புதிய கற்காலம்

- பெரிய குழுக்களில் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி வாழ்ந்தனர்.
- ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் கடற்கரையோரங்களிலும் குடியிருப்புகளை அமைத்தனர்.



### 4 உலோகக் காலம்


- மிகப்பெரிய குழுக்களில் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி வாழ்ந்தனர்.
- அவர்களை வழிநடத்த தலைவர் ஒருவரைக் கொண்டிருந்தனர்.
- சடங்குகளையும் மரபுகளையும் முறையாக அமல்படுத்தினர்.



**அருஞ்சொல்**

**நாடோடி:** ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அடிக்கடி மாறிச் செல்லும் மக்கள்.

சுற்றுச்சூழல் மாறுதல்களை எதிர்கொள்ள நம்மிடம் இருக்க வேண்டிய மூன்று பண்புகளைக் கூறுக.



## 1 பழைய கற்காலம்

- கற்களிலான கருவிகளைப் பயன்படுத்தினர்.
- காட்டு வளத்தைச் சேகரித்தனர்; விலங்குகளை வேட்டையாடினர்.
- உணவைப் பகிர்ந்து கொண்டனர்.



## 2 இடைக் கற்காலம்

- நன்கு சீரமைக்கப்பட்ட கற்கருவிகளைப் பயன்படுத்தினர்.
- காட்டு வளத்தைச் சேகரித்தனர்; விலங்குகளை வேட்டையாடினர்; மீன் பிடித்தனர்.
- உணவைப் பகிர்ந்து கொள்ளும் வழக்கம் தொடர்ந்தது.

# வரலாற்றுக்கு முந்தைய காலத்துப் பொருளாதார நடவடிக்கை


## 3 புதிய கற்காலம்

- பல்வேறு பயன்களைக் கொண்ட சீரமைக்கப்பட்ட வழவழப்பான கற்கருவிகளைப் பயன்படுத்தினர்.
- விவசாயம் செய்தனர்; மீன் பிடித்தனர்; பிராணிகளை வளர்த்தனர்; மட்பாண்டங்களைச் செய்தனர்.
- பண்டமாற்று வாணிப நடவடிக்கையையும் வேலைப் பகிர்வையும் மேற்கொண்டனர்.



## 4 உலோகக் காலம்

- உலோகக் கருவிகளைப் பயன்படுத்தினர்.
- கடற்பயணமும் வாணிபமும் முக்கிய நடவடிக்கைகளாக அமைந்தன.
- பண்டமாற்று வாணிப நடவடிக்கை மேலும் வளர்ச்சி கண்டது.
- அயல் அரசுகளுடன் தொடர்பு வைத்திருந்தனர்.



வரலாற்றுக்கு முந்தைய காலத்து மாற்றங்களும் அவற்றின் தொடர்ச்சியும் மனிதர்களின் வாழ்க்கையில் பெரும் விளைவை ஏற்படுத்தின. அக்கால மனிதர்கள் இயற்கை மூலங்களை ஆக்கத்திறனுடன் பயன்படுத்தி வாழ்ந்தனர்.

3.1.3
K 3.1.6

**ஆசிரியர் குறிப்பு**

வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்களின் வாழ்வியல் கூறுகளை விளங்கிக் கொள்ளத் துணைபுரிதல்.



# தொழில்நுட்பப் பங்களிப்பு

வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்கள் அக்காலத் தேவைக்கேற்பப் பொருத்தமான கருவிகளை உருவாக்கினர். தொழில்நுட்ப வளர்ச்சி மனித வாழ்க்கையை மேம்பாடு அடையச் செய்தது.

## மனித வாழ்க்கையில் தொழில்நுட்ப வளர்ச்சி

### விவசாயத்துறையில் மாற்றம்





கல்லாலும் மரத்தாலுமான அடிப்படைக் கருவிகளைப் பயன்படுத்தினர்.




விவசாய உற்பத்தியைப் பெருக்க இயந்திரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

### தொடர்புத்துறையில் மாற்றம்




ஓவியம், புகை, ஒலி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.




அலுவல்களை எளிதாகவும் விரைவாகவும் மேற்கொள்ள நவீனத் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.



தொழில்நுட்ப மாற்றம் எவ்வாறு மனித வாழ்க்கைக்கு உதவுகிறது?

**ஆசிரியர் குறிப்பு**

- வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனித வாழ்க்கையில் தொழில்நுட்பத்தின் பங்களிப்பை விளங்கிக் கொள்ள வழிகாட்டுதல்.
- வரலாற்றுக்கு முந்தைய காலம் நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பைப் பட்டியலிடத் துணைபுரிதல்.

### போக்குவரத்துத் துறையில் மாற்றம்




மரக்கட்டைகளால் செய்யப்பட்ட படகைப் பயன்படுத்தினர்.




பாதுகாப்பாகவும் விரைவாகவும் பயணிக்கக் கூடிய கப்பலைப் பயன்படுத்துகின்றனர்.

### வீட்டுத் தேவைகளில் மாற்றம்




விறகுகளைப் பயன்படுத்திச் சமைத்தனர்.




எளிதாகவும் பாதுகாப்பாகவும் உள்ள மின் அடுப்பைப் பயன்படுத்துகின்றனர்.

தொழில்நுட்பப் பங்களிப்பு மனித வாழ்க்கையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. இன்றைய வசதிகளுக்கு வளர்ந்துவரும் தொழில்நுட்பப் புத்தாக்கமே காரணமாகிறது.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **Think-Pair-Share**

வரலாற்றுக்கு முந்தைய காலத்து வளர்ச்சி மனிதனின் அன்றாட வாழ்க்கையை நிர்வகிப்பதில் பெரிதும் உதவுகிறது.

1. இந்நடவடிக்கையை இணையராக மேற்கொள்க.
2. 10 நிமிடம் வழங்கப்படும்.
3. வரலாற்றுக்கு முந்தைய காலம் நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பின் அவசியத்தை விரிவாகக் கூறுக.
4. உங்கள் விடைகளைப் படைத்திடுக.

3.1.4
K 3.1.7

## உருவாக்குவோம் வாரீர்

### இயற்கைக்குப் பாதுகாப்பான வாகன உருமாதிரி


**கருவிகளும் பொருளும்**


நெகிழிப் புட்டி, புட்டி மூடி, ஊதற்பந்து, நீர் உறிஞ்சி, குச்சி, கத்தரிக்கோல், பசை நாடா.



1


புட்டி மூடியில் துளை இடுக.

2

சக்கர இருசைச் தயாரிக்கக் குச்சியை வெட்டுக.

3

சக்கர இருசைச் செருக நீர் உறிஞ்சியை வெட்டுக.

4

சக்கர இணைகளைப் புட்டியில் ஒட்டுக.

5

ஊதற்பந்தினை மற்றொரு நீர் உறிஞ்சியில் ஒட்டுக.

6

ஊதற்பந்து பொருத்திய நீர் உறிஞ்சியைப் புட்டியின்மேல் ஒட்டுக.

7

ஊதற்பந்தை ஊதுக.

8

உன் வாகனத்தைப் பரிசோதித்துக் காட்சிக்கு வைத்திடுக.

**ஆசிரியர் குறிப்பு**

- இயற்கைக்குப் பாதுகாப்பான வாகன உருமாதிரியை உருவாக்க உதவுதல்.
- கூர்மையான பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும்.

# மீட்டுணர்வோம்




**வரலாற்றுக்கு முந்தைய காலத்தை அறிவோம்**

வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது மனிதர்கள் எழுத்தை அறிந்திராத காலமாகும்.



**நம் நாட்டில் வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்கள்**

அக்கால மனிதர்கள் விட்டுச் சென்ற புதைபொருள்களைக் கண்டெடுத்ததன்வழி வரலாற்றுக்கு முந்தைய காலத்து அமைவிடங்கள் அடையாளம் காணப்படுகின்றன.



**வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்களின் வாழ்க்கை**

வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்களின் வாழ்க்கையை அவர்களின் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளின்வழி காண முடிகிறது.



**தொழில்நுட்பப் பங்களிப்பு**

விவசாயம், தகவல் தொடர்பு, போக்குவரத்து, கருவிகள் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் மனிதர்களின் வாழ்க்கையை மேலும் எளிதாக்கின.



இந்த அலகு வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனிதர்களின் பங்களிப்பையும் வாழ்வியல் மாற்றங்களையும் விளக்குகின்றது. இந்த அறிவானது அடுத்த அலகில் கற்கவிருக்கும் பண்டைய மலாய் அரசுகளின் தோற்றம் குறித்து விளங்கிக் கொள்ளத் துணைசெய்யும்.

## சிந்தித்துப் பதிலளி

**அ. வரலாற்றுச் சுவடுகளைப் போற்றும் சரியான கூற்றுக்கு (✓) எனவும் பிழையான கூற்றுக்கு (X) எனவும் குறியிடுக.**

| | | |
|---|---|---|
| 1. | வரலாற்றுச் சுவடுகளை இன்றைய சமூகத்தின் வழிகாட்டியாகவும் படிப்பினையாகவும் கொள்ளலாம். | |
| 2. | வரலாற்றுச் சுவடுகளைப் புணரமைக்கும் நாடு பின்தங்கிய நாடாகக் கருதப்படுகிறது. | |
| 3. | வரலாற்றுச் சுவடுகளைக் கொண்ட பகுதிகளைச் சுற்றுலாத் தளங்களாக உருவாக்கலாம். | |
| 4. | வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் சமூகத்தில் சுயநலமிக்கவர்களாக இருந்தனர். | |
| 5. | ஒத்துழைப்பும் மேம்பாடும் கொண்ட சமூகத்தை உருவாக்கிட வரலாற்றுக்கு முந்தைய காலத்தை வழிகாட்டியாகக் கொள்ளலாம். | |

**ஆ. பின்வரும் கருவிகளின் பெயர்களை நிறைவு செய்க.**



க__ __ __ ரி



__ __ ங் மா __ __



ம__பா__




கை __ க__ __ ட __

**ஆசிரியர் குறிப்பு**

இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

# நாட்டை நேசிப்போம்

வரலாற்றுக்கு முந்தைய காலத்தைக் குறித்த அறிவு சவால்களை முயற்சியுடனும் துணிவுடனும் எதிர்கொள்ள வழிகாட்டுகிறது.






கடந்த கால வாழ்க்கையின் வளர்ச்சியே இன்றைய மேம்பாடு
(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)



# அலகு 7

# பண்டைய மலாய் அரசு

## சாரம்

மலாய் உலகின் வரலாறு பண்டைய மலாய் அரசுகளின் தோற்றத்தை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்த அரசுகள் முதலாம் நூற்றாண்டிலேயே தோன்றியவை. இந்த அலகு பண்டைய மலாய் அரசுகளின் பெயர், அமைவிடம், அரசதந்திர உறவு, பொருளாதார நடவடிக்கை ஆகியவற்றை விவரிக்கின்றது.




## குடியியல் நெறி

- கடமையுணர்வு
- மதித்தல்

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. மலாய் உலகின் பண்டைய அரசுகளைப் பெயரிடுதல்.
2. மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அமைவிடங்களைக் குறிப்பிடுதல்.
3. மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அரசதந்திர உறவு குறித்து விளக்குதல்.
4. மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் பொருளாதார நடவடிக்கைகளை விவரித்தல்.



கெடாவின் பூஜாங் பள்ளத்தாக்கில், கெடா துவா அரசின் சுவடுகள்.

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)

பசிபிக் பெருங்கடல்

## அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

1. பண்டைய மலாய் அரசுகளின் காலநிரலையும் மாறுதல்களையும் விளங்கிக் கொள்ளுதல்.
2. மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகள் குறித்த சான்றுகளை ஆராய்தல்.



# மலாய் உலகின் பண்டைய மலாய் அரசுகள்

மலாய் உலகில் சில பண்டைய மலாய் அரசுகள் தோன்றியுள்ளன. இந்து பௌத்த சமயங்களின் தாக்கத்தைக் கொண்டிருக்கும் வரலாற்றுக் கட்டுமானம் போன்ற சுவடுகள் இவற்றிற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இந்த மலாய் அரசுகள் கால மாற்றத்திற்கேற்பத் தோன்றியவையாகும்.



(மூலம்: John Guy, Lost Kingdoms, Hindu-Buddhist Sculpture of Early Southeast Asia)

ஒக்யோ (Oc-Eo) நகரப் பகுதி

| மலாய் உலகப் பண்டைய மலாய் அரசுகளின் காலவரைக்கோடு | முதலாம் நூற்றாண்டு | இரண்டாம் நூற்றாண்டு | ஐந்தாம் நூற்றாண்டு | ஆறாம் நூற்றாண்டு |
|---|---|---|---|---|
| | பூனான் அரசு | சம்பா அரசு | கெடா துவா அரசு | • சிது அரசு<br>• கங்கா நெகாரா அரசு |



சண்டி போ நகர் (Candi Po Nagar)

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)



பூஜாங் பள்ளத்தாக்கில் சண்டி புக்கிட் பத்து பஹாட்

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)



சண்டி முவாரா ஜம்பி (Candi Muara Jambi)

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)

மலாய் உலகின் பண்டைய மலாய் அரசு



சண்டி பிரம்பனன் (Candi Prambanan)

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)

| ஏழாம் நூற்றாண்டு | ஒன்பதாம் நூற்றாண்டு | பத்தாம் நூற்றாண்டு | பதின்மூன்றாம் நூற்றாண்டு | பதினைந்தாம் நூற்றாண்டு |
|---|---|---|---|---|
| **ஸ்ரீ விஜயா அரசு** | **மத்தாராம் அரசு** | **சன்துபோங் அரசு** | **மஜாபாஹிட் அரசு** | **புருவாஸ் அரசு** |



கபுரா பாஜாங் ரத்து (Gapura Bajang Ratu)

(மூலம்: Koleksி Dewan Bahasa dan Pustaka)

**அருஞ்சொல்**

**மலாய் உலகு :** ஆசிய கண்டத்தின் தென்கிழக்குப்பகுதியில் உள்ள தீவுக்கூட்டங்களையும் பெருநிலப்பகுதியையும் உள்ளடக்கியது.

**நினைவுக் கட்டடம் :** முக்கிய நிகழ்வுகளை நினைவு கூர்வதற்காக எழுப்பப்படும் கட்டடம்.

**கபுரா :** அரண்மனை அல்லது கோவிலின் வாயில்.

முதலாம் நூற்றாண்டிலேயே மலாய் உலகின் பண்டைய மலாய் அரசுகள் இருந்துள்ளன. இவை பெருமிதம் கொள்ளும் மதிக்கத்தக்க பாரம்பரியத்தை விட்டுச் சென்றுள்ளன.

4.1.1

**ஆசிரியர் குறிப்பு**

மலாய் உலகப் பண்டைய மலாய் அரசுகளின் காலவரைக்கோட்டை விளங்கிக்கொள்ளத் துணைபுரிதல்.



# மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அமைவிடம்

மலாய்த்தீவுக் கூட்டத்திலிருந்த சிறு குடியிருப்புகள் பிற்காலத்தில் துறைமுகங்களாக மேம்பாடு அடைந்தன. அத்துறைமுகங்கள் வளர்ச்சியடைந்து அரசுகளாக உருப்பெற்றன.




மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அமைவிடங்கள்

**கெடா துவா அரசு**

இந்த அரசு கெடாவின் பூஜாங் பள்ளத்தாக்கிலுள்ள சுங்கை மாஸ், பெங்காலான் பூஜாங் ஆகிய பகுதியில் அமைந்துள்ளது.

**கங்கா நெகாரா அரசு**

இந்த அரசு மலாயாவின் மேற்குக் கரை மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது. இது பேராக் மாநிலத்தில் உள்ளது.

**புருவாஸ் அரசு**

இந்த அரசு மலாயாவின் மேற்குக் கரை மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது. இது பேராக் மாநிலத்தில் உள்ளது.

**சிது அரசு**

இந்த அரசு கிளந்தான் மாநிலத்தின் தானா மேராவில் அமைந்துள்ளது.

**சன்துபோங் அரசு**

இந்த அரசு சரவாக் மாநிலத்தின் சுங்கை சரவாக் பகுதியில் அமைந்துள்ளது.

**ஸ்ரீ விஜயா அரசு**

இந்த அரசு சுமத்திராவின் மூசி ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

**மத்தாராம் அரசு**

இந்த அரசு மத்திய ஜாவாவில் அமைந்துள்ளது.

**மஜாபாஹிட் அரசு**

இந்த அரசு கிழக்கு ஜாவாவின் துரோவுலான், மொஜோகெர்தோ பகுதியை மையமாகக் கொண்டுள்ளது.

பண்டைய மலாய் அரசுகள் எளிதில் தொடர்புகொள்ளக்கூடிய கடற்கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ளன. இந்த அமைவிடமே அவை மேம்பாடும் வளப்பமும் காணத் துணைபுரிந்தது.

**அறிவுக்கு வேலை**

கெடா துவா, சன்துபோங் ஆகிய அரசுகளின் அமைவிடங்களைக் குறிப்பிடுக.


4.1.2

**ஆசிரியர் குறிப்பு**

மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அமைவிடங்களை அடையாளங்காண வழிகாட்டுதல்.


# மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அரசதந்திர உறவு

அரசதந்திர உறவு என்பது இரு அரசுகளுக்கிடையே ஏற்படும் தொடர்பாகும். பண்டைய மலாய் அரசுகள் அக்காலத்தில் வல்லரசுகளாகத் திகழ்ந்த சீனாவுடனும் இந்தியாவுடனும் அரசதந்திர உறவைக் கொண்டிருந்தன.




**அரசியல்**

பண்டைய மலாய் அரசுகள் அங்கீகாரம் பெறவும் பாதுகாப்பை உறுதிசெய்து தம் நிலையைத் தற்காத்துக் கொள்ளவும் அரசதந்திர உறவை ஏற்படுத்திக் கொண்டன.



மக்கள் அரசரை எதிர்கொள்ளும் காட்சியை விவரிக்கும் சண்டி போரோபுடோர் சுவர் சிலை வேலைப்பாடுகள்

(மூலம்: Mardiana Nordin, 2019)

## பொருளாதாரம்

அரசதந்திர உறவின்மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். பண்டைய மலாய் அரசுகள் மசாலைப் பொருள்கள், ஈயம், தங்கம் ஆகியவற்றைச் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் விற்பனை செய்தன. பண்டைய மலாய் அரசுகள் அந்நாடுகளிலிருந்து மட்பாண்டங்கள், பட்டு, அலங்காரப் பொருள்கள் ஆகியவற்றைப் பெற்றன. இந்த உறவு பண்டைய மலாய் அரசுகளை மேலும் வளம் பெறச் செய்தது.



மசாலைப் பொருள்கள்

(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)



மட்பாண்டங்கள்

(மூலம்: Chiam Yan Tuan, Centre for Malaysian Chinese Studies)



அலங்கார மணிகள்

(மூலம்: Muzium Arkeologi Lembah Bujang)

பண்டைய மலாய்த்தீவுக் கூட்டத்தில் வாணிபம் செய்யப்பட்ட பொருள்கள்

### அறிவுக்கு வேலை

மலாய்த்தீவுக் கூட்டத்தில் வாணிபம் செய்யப்பட்ட பொருள்களைக் கூறுக.

**சமூகவியல்**

அரசதந்திர உறவால் ஏற்பட்ட திருமணங்கள் குடும்ப உறவையும் நட்புறவையும் வலுப்படுத்தின. இது மலாய்த்தீவுக் கூட்டத்தில் அமைதியை நிலைபெறச் செய்தது.



வெளிநாட்டுத் தூதர்களின் வருகையைச் சித்தரிக்கும் சண்டி போரோபுடோர் சுவர் சிலை வேலைப்பாடுகள் (மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)

பண்டைய மலாய் அரசுகள் சீனாவுடனும் இந்தியாவுடனும் கொண்டிருந்த உறவு மலாய் உலகில் அவற்றின் அரசியல், பொருளாதாரம், சமூகவியல் நிலையை வலுப்பெறச் செய்தது.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **Fan-n-Pick Formation**

1. நால்வர் கொண்ட குழுவை உருவாக்குக. பண்டைய மலாய் அரசுகள் அரசதந்திர உறவை ஏற்படுத்தியதன் அவசியத்தைக் குறித்த நான்கு கேள்விகளைக் கலந்துரையாடுக.
2. அக்கேள்விகளை வழங்கப்பட்ட தனித்தனி அட்டைகளில் எழுதுக.
3. குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் சுழல்முறையில் தத்தம் பங்கை ஆற்றுவர்.
   - i. முதலாம் மாணவர் : அட்டைகளை விசிறி வடிவில் அடுக்குதல்.
   - ii. இரண்டாம் மாணவர் : அட்டையைத் தெரிவு செய்து கேள்வியை வாசித்தல்.
   - iii. மூன்றாம் மாணவர் : கேள்விகளுக்கு விடையளித்தல்.
   - iv. நான்காம் மாணவர் : வழங்கப்படும் பதில்களை ஒட்டி கருத்துகளைத் தெரிவித்தல்; பாராட்டுதல்.
4. அந்த அட்டையை வரலாற்று மூலையில் ஒட்டுக.

**ஆசிரியர் குறிப்பு**

- மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அரசதந்திர உறவை விளங்கிக்கொள்ளத் துணைபுரிதல்.
- அட்டைகளைத் தயார்செய்து ஒவ்வொரு குழுவிற்கும் கேள்விகள் தயாரிக்கத் துணைபுரிதல்.

4.1.3
K 4.1.5

# மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் பொருளாதார நடவடிக்கைகள்

பண்டைய மலாய் அரசுகள் விவசாயம், வாணிபம், காட்டு வளங்களையும் கடல் வளங்களையும் சேகரித்தல், சுரங்கத்தொழில், உற்பத்தித் தொழில் போன்ற பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டன.

**விவசாயம்**

பண்டைய மலாய் அரசுகள் விவசாயத்திற்கு ஏற்ற மண்வளம் நிறைந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் அமைந்திருந்தன. அங்குள்ள மக்கள் நெல், வாழை, ஜாதிக்காய், மரவள்ளிக்கிழங்கு போன்றவற்றைப் பயிர் செய்தனர். மக்களின் தேவையை நிறைவேற்ற இவ்விளைச்சல்கள் விற்பனையும் செய்யப்பட்டன.



நெற்சாகுபடி செய்தல் கெடா துவா, மஜாபாஹிட் ஆகிய அரசுகளைச் சேர்ந்த மக்களின் பொருளாதார நடவடிக்கையாகும்.

**அறிவுக்கு வேலை**

பண்டைய மலாய் அரசுகளின் மக்கள் பயிர்செய்த பயிர்வகைகளைப் பட்டியலிடுக.

### வாணிபத் துறைமுகம்

மலாய்த்தீவுக் கூட்டம் கிழக்கு, மேற்கு வாணிபக் கடல்வழிப் பாதையில் அமைந்திருந்ததால் பண்டைய மலாய் அரசுகள் வெகுவாக வளர்ச்சி கண்டன. மலாய்த்தீவுக் கூட்டத்திற்கு வரும் வணிகர்கள் தங்கி வாணிபம் செய்ய இங்குள்ள துறைமுகங்கள் வழிவகை செய்தன. இங்கு மிளகு, கிராம்பு, ஜாதிக்காய் போன்ற மசாலைப் பொருள்கள் முக்கிய விற்பனைப் பொருள்களாகத் திகழ்ந்தன.



பண்டைய மலாய் அரசுத் துறைமுகங்களில் வாணிப நடவடிக்கைகள்

(மூலம்: Nik Hassan Shuhaimi Nik Abdul Rahman (ed)., 1998, *Encyclopedia of Malaysia: Early History.* Singapura: Editions Didier Millet)

நம் நாட்டிற்குக் கடல்வழி வாணிபம் ஏன் அவசியம் என்பதை விளக்குக.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **சிந்தனைவரை படம்**

1. பண்டைய மலாய் அரசுகளில் வாணிபம் செய்யப்பட்ட பொருள்கள் தொடர்பான தகவல்களைப் பல்வேறு மூலங்களின்வழி பெறுக.
2. பொருத்தமான சிந்தனை வரைபடத்தில் அப்பொருள்களைப் பட்டியலிடுக.
3. உமது படைப்பைப் படைத்திடுக.

4.1.4
K 4.1.6

## காட்டு வளமும் கடல் வளமும்

பண்டைய மலாய் அரசுகள் காட்டு வளத்தையும் கடல் வளத்தையும் கொண்டிருந்தன. அவற்றில் பிரம்பு, குருவிக்கூடு, ஆமை ஓடு, ஒரு வகை கடல்வெள்ளரி (Teripang), முத்து ஆகியன அடங்கும். இப்பொருள்கள் வணிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.



பிரம்பு சேகரித்தல்

### காட்டு வளம்



அகில் கட்டை (Gaharu)



பிரம்பு



கற்பூரம்

### கடல் வளம்

**அருஞ்சொல்**

**அகில்:** மணம் வீசும் ஒரு வகை மரக்கட்டை.



முத்து



கடல் வெள்ளரி

கங்கா நெகாரா, சீது, ஸ்ரீ விஜயா ஆகிய அரசுகளிலிருந்து காட்டு வளங்களும் கடல் வளங்களும் அதிகமாகப் பெறப்பட்டன.

**நடவடிக்கை**

பண்டைய மலாய் அரசுகளைச் சேர்ந்த மக்களின் வாழ்வில் காட்டு வளம், கடல் வளம் ஆகியவற்றின் பயன்பாட்டைக் குழுவில் பட்டியலிட்டுப் படைத்திடுக.

## சுரங்கத் தொழிலும் உற்பத்தித் தொழிலும்

பண்டைய மலாய் அரசுகளில் வாழ்ந்த மக்கள் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு ஈயம், தங்கம், இரும்பு போன்றவற்றைப் பெற்றனர். மேலும், அலங்காரப் பொருள்கள், மட்பாண்டங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றையும் உற்பத்தி செய்தனர்.





கெடா துவா அரசில் இரும்பை உருக்கப் பயன்படுத்தப்பட்ட ஊதுலை (Relau)

(மூலம்: Pusat Penyelidikan Arkeologi Global, Universiti Sains Malaysia)

கெடா துவா, கங்கா நெகாரா, சன்துபோங் ஆகிய அரசுகள் சுரங்கத் தொழிலிலும் உற்பத்தித் தொழிலிலும் ஈடுபட்டன.

பண்டைய மலாய் அரசுகளின் காலம் தொட்டே பல்வேறு இயற்கை வளம் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் துரிதமாக வளர்ச்சி கண்டு வந்தன.

எதிர்காலச் சந்ததியினரும் பயன்பெறும் வகையில் நாம் இயற்கை வளத்தை விவேகமாகப் பயன்படுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தில் பண்டைய மலாய் அரசுகளின் பங்கு யாது?


**ஆசிரியர் குறிப்பு**

மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் பொருளாதார நடவடிக்கைகளை விளங்கிக்கொள்ளத் துணைபுரிதல்.

4.1.4
K 4.1.7

## நடவடிக்கை

பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.




1. பயிற்சிப் புத்தகத்தில் கரைவரைபடத்தை அச்சடித்திடுக.
2. பல்வேறு மூலங்களின்வழி பின்வரும் அரசுகளின் அமைவிடத்தை அடையாளமிட்டுப் பெயரிடுக.
   i. பூனான் அரசு
   ii. சம்பா அரசு
   iii. மத்தாராம் அரசு
   iv. கெடா துவா அரசு

**ஆசிரியர் குறிப்பு**

கரைவரைபடத்தைப் பயிற்சிப் புத்தகத்தில் அச்சடிக்கவும் அமைவிடங்களைப் பெயரிடவும் துணைபுரிதல்.

## மீட்டுணர்வோம்

**பண்டைய மலாய் அரசுகள்**

- பூனான்
- சம்பா
- கெடா துவா
- சிது
- கங்கா நெகாரா
- ஸ்ரீ விஜயா
- மத்தாராம்
- சன்துபோங்
- மஜாபாஹிட்
- புருவாஸ்

**மலாய்த்தீவுக் கூட்டத்தில் பண்டைய மலாய் அரசுகளின் அமைவிடம்**







**பண்டைய மலாய் அரசுகளின் அரசதந்திர உறவு**

- அரசியல்
- பொருளாதாரம்
- சமூகவியல்

**பண்டைய மலாய் அரசுகளின் பொருளாதார நடவடிக்கைகள்**

- விவசாயம்
- வாணிபம்
- காட்டு வளமும் கடல் வளமும்
- சுரங்கத் தொழிலும் உற்பத்தித் தொழிலும்

இந்த அலகு மலாய் உலகின் பண்டைய மலாய் அரசுகளையும் அவற்றின் வளர்ச்சியும் விவரித்தது. இந்த அறிவானது பண்டைய மலாய் அரசுகளின் பங்களிப்பை எண்ணி நம்மைப் பெருமிதம் கொள்ளச் செய்யும். இனி அடுத்த அலகு, மலாக்கா மலாய் மன்னராட்சியில் இணையற்ற தலைவர்களைக் குறித்து விவரிக்கும்.

# சிந்தித்துப் பதிலளி

பண்டைய மலாய் அரசுகளின் பெயர்களைக் குறுக்கெழுத்துக் கட்டங்களில் நிறைவு செய்க.




**இடமிருந்து வலம்**

1. சண்டி போ நகர் இந்த அரசு காலத்தில் கட்டப்பட்டது.
2. கிளந்தான் மாநிலத்தின் தானா மேராவில் அமைந்துள்ளது.
3. மலாயாவின் மேற்குக் கரை மத்தியில் அமைந்துள்ளது.
4. முதல் பண்டைய மலாய் அரசு.
5. சண்டி லெம்பா பூஜாங் இதன் சுவடு.

**மேலிருந்து கீழ்**

6. இந்த அரசு சுங்கை சரவாக் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது.
7. 15ஆம் நூற்றண்டில் தோன்றியது.
8. சண்டி முவாரா ஜம்பி இந்த அரசில் அமைந்தது.
9. இது சண்டி பிரம்பனனுக்குப் புகழ் பெற்றது.
10. கபுரா பாஜாங் ரத்து அமையப் பெற்ற இடம்.

## சிந்தித்துப் பதிலளி

படத்தில் காணும் வரலாற்றுச் சுவடுகளையும் அரசுகளையும் பெயரிடுக.



வரலாற்றுச் சுவடு ____________________

அரசு ____________________



வரலாற்றுச் சுவடு ____________________

அரசு ____________________



வரலாற்றுச் சுவடு ____________________

அரசு ____________________



வரலாற்றுச் சுவடு ____________________

அரசு ____________________



வரலாற்றுச் சுவடு ____________________

அரசு ____________________



வரலாற்றுச் சுவடு ____________________


அரசு ____________________

**ஆசிரியர் குறிப்பு**

வரலாற்றுச் சுவடுகளையும் அரசுப் பெயர்களையும் நிறைவு செய்யத் துணைபுரிதல்.

## நாட்டை நேசிப்போம்

பண்டைய மலாய் அரசுகளின் பொற்காலமும் அவற்றின் பொருளாதார வளர்ச்சியும் நம்மைப் பெருமிதம் கொள்ளச் செய்கின்றன. அது நம்மை ஆக்கத்திறனும் போட்டி மனப்பான்மையுடனும் செயல்படத் தூண்டுகிறது.






நாட்டின் சுபிட்சத்தைப் பேண பல்லின மக்களிடையே ஒத்துழைக்கும் பண்பைச் சிறுவயதுமுதலே விதைக்க வேண்டும்.

(மூலம்: Koleksi Ahmad Hishanuddin bin Ramli, 2019)

அலகு
# 8

# மலாக்கா மலாய் மன்னராட்சியில் இணையற்ற தலைவர்கள்

## சாரம்

மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தில் இணையற்ற தலைவர்கள் பெரும் பங்காற்றினர். அரசின் நிர்வாகத்தில் இவர்களின் ஈடுபாடு மலாக்கா மன்னராட்சியைப் பொற்காலத்திற்கு இட்டுச் சென்றது. இந்த அலகு மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தின் சமூகக் கட்டமைப்பையும் இணையற்ற தலைவர்களையும் குறித்து விவரிக்கின்றது.



அரண்மனையின் பாலாய் ரோங் ஸ்ரீயில் சுல்தானை எதிர்கொள்ளும் சிலை உருவகக் காட்சி

(மூலம்: Muzium Istana Kesultanan Melayu Melaka)



## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தின் சமூகக் கட்டமைப்பைக் கூறுதல்.
2. மலாக்கா மலாய் மன்னராட்சியில் இணையற்ற தலைவர் என்பதன் பொருளை விளக்குதல்.
3. மலாக்கா மலாய் மன்னராட்சியில் சுல்தான், பெண்டாஹாரா, லக்சமணா ஆகியோரின் பங்கை வகைப்படுத்துதல்.

### குடியியல் நெறி


பொறுப்புணர்வு

### AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

1. மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தின் சமூகக் கட்டமைப்பைக் கூறுதல்.
2. மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தில் இணையற்ற தலைவர்களின் பங்கை அடையாளங்காணுதல்.
3. மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தில் இணையற்ற தலைவர்களின் பங்களிப்பிற்கான சான்றுகளை ஆராய்தல்.

# மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தின் சமூகக் கட்டமைப்பு

மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பை ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அந்த இரு பிரிவினரும் தத்தம் பங்கையும் பொறுப்புகளையும் கொண்டிருந்தனர்.




மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பு

### அறிவுக்கு வேலை

மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பில் காணப்பட்ட பிரிவினரைக் குறிப்பிடுக.

### உங்களுக்குத் தெரியுமா?

சுல்தானால் பதவி வழங்கப்பட்டால் குடிமக்களும் பெருந்தலைவர் ஆகலாம்.

### அருஞ்சொல்

**சுல்தான்**: அரசர்

## சுல்தான்



- மலாக்கா நிர்வாகத்தில் உயரிய ஆட்சியாளர்.
- மக்கள் ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழ்பவர்.

## பெருந்தலைவர்கள்

- சுல்தானால் நியமிக்கப்படுபவர்கள்.
- மலாக்காவின் நிர்வாகத்தில் சுல்தானுக்கு உதவுபவர்கள்.



## குடிமக்கள்



- மலாக்காவின் மக்கள்.
- சுல்தானுக்கும் பெருந்தலைவர்களுக்கும் விசுவாசமிக்கவர்கள்.

## அடிமைகள்

- சுல்தானுக்கும் பெருந்தலைவர்களுக்கும் ஏவலர்கள்.
- அடிமைகளின் எண்ணிக்கை உரியவர்களின் செல்வாக்கைப் பிரதிபலிக்கும்.



ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள் என இரு தரப்பினரும் மலாக்கா மலாய் மன்னராட்சியின் நிர்வாகத்திற்கு உரிய பங்களிப்பை வழங்கினர். இதனால், மலாக்கா மலாய் மன்னராட்சி நன்முறையில் நடைபெற்றது. மலாக்கா ஒரு வலிமை பொருந்திய பேரரசாகவும் முக்கிய வாணிப மையமாகவும் திகழ்ந்தது.




**ஆசிரியர் குறிப்பு**

- மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பை விளக்குதல்.
- மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பு குறித்துக் கலந்துரையாடச் செய்தல்.



# இணையற்ற தலைவர்களை அறிவோம்

மலாக்கா மலாய் மன்னராட்சியின் பொற்காலத்திற்கு இணையற்ற தலைவர்கள் பெரும் பங்காற்றினர். அவர்களுள் பரமேஸ்வரா, துன் பேராக், ஹங் துவா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**இணையற்ற தலைவர் என்பதன் பொருள்**

இணையற்ற தலைவர் என்பவர் சமுதாயத்தினரால் மதித்துப் போற்றப்படும் ஒருவராவார்.



**இணையற்ற தலைவர்களின் தன்மைகள்**

**கடின உழைப்பு**

பரமேஸ்வரா மலாக்காவை ஒரு வாணிப மையமாக மேம்படுத்த அயராது உழைத்தார்.

**நாட்டின் நிலையைத் தற்காத்தல்**

துன் பேராக் அந்நிய அச்சுறுத்தலிலிருந்து மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தற்காத்தார்.


**நாட்டிற்காகத் தியாகம் செய்தல்**

ஹங் துவா எதிரிகளின் தாக்குதலிலிருந்து மலாக்கா கடற்பகுதியைத் தற்காத்தார்.

**அறிவுக்கு வேலை**

இணையற்ற தலைவர் என்பதன் பொருள் யாது?

பரமேஸ்வரா, சுல்தான் முசபர் ஷா, சுல்தான் மன்சூர் ஷா, சுல்தான் அலாவுதீன் ரியாயாட் ஷா ஆகியோர் மலாக்கா மலாய் மன்னராட்சியின் இணையற்ற தலைவர்கள் ஆவர். இவர்களோடு பெண்டாஹாரா துன் பேராக்கும் லக்சமணா ஹங் துவாவும் இணையற்ற தலைவர்களாக விளங்கினர்.

| தலைவர் | பங்களிப்பு | |
|---|---|---|
| **பரமேஸ்வரா** | • மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தோற்றுவித்தவர்.<br>• மலாக்காவை வாணிப மையமாக மேம்படுத்தியவர். |  |
| **சுல்தான் முசபர் ஷா** | • மலாக்கா பேரரசை வலுப்படுத்தியவர்.<br>• சீரான சட்டமுறையை அமல்படுத்தியவர். |  |
| **சுல்தான் மன்சூர் ஷா** | • மலாக்கா பேரரசை விரிவுபடுத்தியவர்.<br>• மலாக்காவை இஸ்லாமிய பிரச்சார மையமாகவும் கல்வி மையமாகவும் உருவாக்கியவர். |  |
| **சுல்தான் அலாவுதீன் ரியாயாட் ஷா** | • உள்நாட்டுப் பாதுகாப்பிலும் அமைதியிலும் அக்கறை செலுத்தியவர்.<br>• மக்களின் நலனைப் பேணியவர். |  |
| **பெண்டாஹாரா துன் பேராக்** | • முறையாக நிர்வாகம் செய்தவர்.<br>• ஆட்சியாளர்மீது மிகுந்த விசுவாசம் கொண்டிருந்தவர். |  |
| **லக்சமணா ஹங் துவா** | • மலாக்கா கடற்பகுதியின் பாதுகாப்பை உறுதிபடுத்தியவர்.<br>• மலாக்கா மலாய் மன்னராட்சியின் தூதராக விளங்கியவர். |  |

மலாக்கா மலாய் மன்னராட்சியில் இணையற்ற தலைவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். இவர்களின் அயராத உழைப்பு மலாக்காவை மலாய் உலகில் வலிமையும் புகழும் நிறைந்த ஒரு பேரரசாகத் திகழச் செய்தது.

## நடவடிக்கை

1. கொடுக்கப்பட்ட கேள்விகளை இரு குழுக்களில் கலந்துரையாடிப் படைத்திடுக.
2. **குழு அ:** மலாக்கா மலாய் மன்னராட்சியில் இணையற்ற தலைவர்களின் சிறப்புகளை நீ எவ்வாறு போற்றுவாய்?

   **குழு ஆ:** இணையற்ற தலைவர்களிடையே காணப்படும் நற்பண்புகளைப் பட்டியலிடுக.




**ஆசிரியர் குறிப்பு**

இணையற்ற தலைவர் என்பதன் பொருளையும் அவர்களின் தன்மைகளையும் விளங்கிக் கொள்ள வழிகாட்டுதல்.

# இணையற்ற தலைவரின் பங்கு

அரசின் உயரிய ஆட்சியாளர் சுல்தான் ஆவார். அவருக்குத் துணையாக முக்கியப் பெருந்தலைவர்களான பெண்டாஹாராவும் லக்சமணாவும் இருந்தனர். இத்தலைவர்களே மலாக்கா மலாய் மன்னராட்சியைப் பொற்காலத்திற்கு இட்டுச் சென்றனர்.




## சுல்தான்

நிகழ்ச்சி நெறியாளருக்கு நன்றி.

எனது மதிப்பிற்குரிய பள்ளிச் சமூகத்தினர் அனைவருக்கும் வணக்கம். என் சொற்பொழிவின் தலைப்பு 'மலாக்கா மலாய் மன்னராட்சியில் சுல்தானின் பங்கு' என்பதாகும்.

அவையோர்களே,
சமூகக் கட்டமைப்பில் சுல்தான் மிக உயரிய இடத்தில் இருப்பவர். இவர் ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழ்பவர். நிர்வாகத்தை வழிநடத்த தகுதியான பெருந்தலைவர்களை நியமனம் செய்பவரும் இவரே.

மேலும், இவரே பிற அரசுகளுடனான அரசதந்திர உறவு குறித்த முடிவையும் செய்கிறார்.

அவையோர்களே,
மலாக்காவிற்கு வரும் அந்நிய வணிகர்களின் வரவை ஏற்பதும் சுல்தானின் கடமைகளில் ஒன்றாகும். மலாக்கா புகழ்பெற்ற ஒரு வாணிப மையமாகவும் பிற அரசுகளால் மதிக்கத்தக்க அரசாகவும் விளங்கியதற்கு சுல்தானின் பங்களிப்பே காரணமாகத் திகழ்ந்தது.

நன்றி.




**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **பாகமேற்றல்**

1. பாகமேற்கும் பொறுப்பை மாணவர்களுக்கு வழங்குதல்.
2. மாணவர்கள் தயாராவதற்கு நேரம் வழங்குதல்.
3. சுல்தான், பெண்டாஹாரா, லக்சமணா ஆகிய பொறுப்புகளைப் பாகமேற்று நடிக்கச் செய்தல்.




**அறிவுக்கு வேலை**

மலாக்கா மலாய் மன்னராட்சியில் பெண்டாஹாராவின் பங்கு யாது?


3
உண்மைதான். பெண்டாஹாரா மிகவும் திறமையானவர். அவர் மலாக்காவின் நிர்வாகத்தில் பெருந்தலைவர்களின் தலைவராகவும் விளங்கினார்.
4
பெருந்தலைவர்களின் தலைவராக இருந்தது மட்டுமல்லாது இணையற்ற தலைவரென அழைப்பதற்கும் தகுதி பெற்றவர் பெண்டாஹாரா. அவர் இஸ்லாமியச் சமயத்தைப் பரப்புவதற்கு சுல்தானுக்குத் துணையாக இருந்தார். இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?
5
உண்மைதான். மேலும், இவர் தலைமை அரசதந்திரியாகவும் தலைமை நீதிபதியாகவும் போர் படைக்குத் தலைவராகவும் இருந்தவர்.
6
பெண்டாஹாராவிற்கு மேலும் முக்கியப் பொறுப்பு ஒன்றும் உள்ளது. சுல்தான் நோய்வாய்ப்பட்டிருக்கும்போதும் வெளிநாடு செல்லும்போதும் பெண்டாஹாரா இடைக்கால சுல்தானாகவும் நியமிக்கப்படுவார். இவரின் திறமையைக் கண்டு நான் பெருமிதம் கொள்கிறேன்.




**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **Rally Robin**

நம் நாட்டுத் தலைவர்களின் பங்களிப்பைப் போற்றுவதன் அவசியத்தை இணையராகக் குறிப்பிடுக.




சுல்தான், பெண்டாஹாரா, லக்சமணா ஆகியோர் தத்தம் பங்கை ஆற்றுவதில் பொறுப்புடனும் முழுமுச்சுடனும் செயல்பட்டதால் மலாக்கா புகழ்பெற்ற அரசாக நிலைபெற்றது.

5.1.3
K 5.1.6

## விளையாட்டு நடவடிக்கை

**விளையாடும் முறை:**

1. விடை அட்டையைப் பிடிக்க மாணவர் ஒருவரை நியமித்தல்.
2. வினாக்கள் உள்ள கட்டத்தை அடையும் விளையாட்டாளர் அவ்வினாக்களுக்குப் பதிலளித்தல்.
3. விடை அட்டையை வைத்திருக்கும் மாணவர் அவ்விடையைச் சரிபார்த்தல்.
4. விடை சரி எனின், விளையாட்டாளர் தொடர்ந்து விளையாடுதல்.
5. விடை பிழை எனின், விளையாட்டாளர் கட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைக்கேற்பச் செயல்படுதல் அல்லது அதே கட்டத்தில் நிலைத்தல்.

1 தொடங்குக

2 மலாக்கா மலாய் மன்னராட்சியின் சமூகக் கட்டமைப்பைக் குறிப்பிடுக.

3

4 அரசருக்கும் பெருந்தலைவருக்கும் விசுவாசம் செலுத்தும் முறையை நடித்துக் காட்டுக.

5

6 மலாக்கா மலாய் மன்னராட்சி சமூகக் கட்டமைப்பில் அடிமைகளின் நிலை யாது?
சரி-9ஆவது கட்டத்திற்குச் செல்

7

8 இணையற்ற தலைவர் என்பதன் பொருள் யாது?

9

10 மலாக்கா மலாய் மன்னராட்சியில் இணையற்ற தலைவர்களைப் பெயரிடுக.
தவறு-3ஆவது கட்டத்திற்குச் செல்

11

12 பெண்டாஹாராவின் இரு பொறுப்புகளைக் குறிப்பிடுக.
சரி-15ஆவது கட்டத்திற்குச் செல்

13

14 ஏன் சுல்தான் தகுதியான பெருந்தலைவர்களை நியமிக்கிறார்?
சரி-17ஆவது கட்டத்திற்குச் செல்

15

16 லக்சமணாவின் இரு பொறுப்புகளைக் குறிப்பிடுக.

17

18


19 இஸ்லாமியச் சமயத் தலைவராகவும் மலாய்க்காரர்களின் சடங்குகளுக்கும் மரபுகளுக்கும் தலைவராகவும் நியமிக்கப்பட்டவர் யார்?
தவறு-5ஆவது கட்டத்திற்குச் செல்

20 வாழ்த்துகள், நீங்கள் வெற்றியாளர்!

**ஆசிரியர் குறிப்பு**

- இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.
- தாயக் கட்டையையும் குறியீட்டையும் தயார் செய்க.

## மீட்டுணர்வோம்




### மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பு

மலாக்கா மலாய் மன்னராட்சியின் சமூகக் கட்டமைப்பானது ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள் என இரு பிரிவுகளைக் கொண்டது.




### இணையற்ற தலைவரை அறிவோம்

இணையற்ற தலைவர் என்பவர் சமுதாயத்தினரால் போற்றப்படும் ஒருவராவார்.




### இணையற்ற தலைவரின் பங்கு

சுல்தான், பெண்டாஹாரா, லக்சமணா ஆகியோர் மலாக்கா மலாய் மன்னராட்சியின் பொற்காலத்திற்குப் பங்காற்றினர்.

இந்த அலகு மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பை விவரிக்கின்றது. அத்தோடு, இணையற்ற தலைவர் என்பதன் பொருளையும் அவர்களின் பங்களிப்பையும் அறிந்தோம். இவை அடுத்த அலகில் மலாக்கா மன்னராட்சியின் தோற்றுநர் குறித்துப் பயில்வதற்கு உந்துதலாக அமையும்.

## சிந்தித்துப் பதிலளி

**1** மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலச் சமூகக் கட்டமைப்பை நிறைவு செய்க.




**2** பெருந்தலைவருக்கேற்ற பொறுப்புகளைச் சரியாக இணைத்திடுக.

- நிர்வாகத்தில் சுல்தானின் ஆலோசகர்
- வெளிநாட்டு அதிகாரப்பூர்வத் தூதுவக் குழுவிற்குத் தலைமையேற்றல்.
- தலைமை அரசதந்திரியாக இருத்தல்.
- மலாக்கா கடற்படைக்குத் தலைமையேற்றல்.
- சுல்தானின் அந்தரங்க மெய்க்காவலர்.

- பெண்டாஹாரா
- லக்சமணா

**3** சரியான தகவலைக் கொண்டு அட்டவணையை நிறைவு செய்க.

| தலைவர் பெயர் | பங்களிப்பு |
|---|---|
| சுல்தான் முசபர் ஷா | |
| பெண்டாஹாரா துன் பேராக் | |
| லக்சமணா ஹங் துவா | |

**ஆசிரியர் குறிப்பு**
- இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.
- பதிலளிக்கத் துணைபுரிதல்.


# நாட்டை நேசிப்போம்



மன்னராட்சி அமைப்புமுறை நம் நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பெற்று சிறப்புடன் விளங்குவதை உறுதிபடுத்துகிறது.

(மூலம்: BERNAMA)

சமுதாயத்தினர் ஒவ்வொருவரும் நாட்டை மேம்படுத்த தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும்.





# அலகு 9
# மலாக்கா மலாய் மன்னராட்சியின் தோற்றுநர்




## சாரம்

பரமேஸ்வரா மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தோற்றுவித்தார். இந்த அலகு அவருடைய பின்னணியையும் அவர்தம் பயணத்தின்போது ஏற்பட்ட நிகழ்வுகளையும் விவரிக்கின்றது. பல்வேறு மூலங்களின் அடிப்படையில் மலாக்காவின் தோற்றத்தையும் அதன் பெயர் பூர்வீகத்தையும் இந்த அலகு விளக்குகிறது.

மலாக்கா மலாய் மன்னராட்சி அருங்காட்சியகம், பண்டா ஹிலிர், மலாக்கா.

(மூலம்: Perbadanan Muzium Negeri Melaka)

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. மலாக்கா மலாய் மன்னராட்சித் தோற்றுநரின் பின்னணியைக் குறிப்பிடுதல்.
2. மலாக்கா மலாய் மன்னராட்சித் தோற்றுநரின் பயணத் தொடர்நிகழ்வை விளக்குதல்.
3. மலாக்கா தோற்றுவிக்கப்பட்ட நிகழ்வை விளக்குதல்.
4. பல்வேறு மூலங்களிலிருந்து மலாக்காவின் பெயர் பூர்வீகத்தை விவரித்தல்.




**குடியியல் நெறி**

மகிழ்ச்சி

## அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

AKPS

1. மலாக்கா தோற்றுவிக்கப்பட்ட நிகழ்வைக் குறிப்பிடுதல்.
2. பரமேஸ்வரா மலாக்காவைத் தோற்றுவித்த நிகழ்வை விளக்குதல்.
3. மலாக்காவின் பெயர் தொடர்பான பல்வேறு மூலங்களை அடையாளங்காணல்.




# மலாக்கா மலாய் மன்னராட்சித் தோற்றுநரை அறிதல்


மலாக்கா மலாய் மன்னராட்சியின் தோற்றுநர் குறித்து சுலாலாத்தூஸ் சாலாத்தின், சுமா ஓரியண்டல் ஆகிய இரு நூல்கள் பதிவு செய்துள்ளன. அவ்விரு மூலங்களின்வழி பரமேஸ்வரா அல்லது இஷ்கந்தர் ஷாதான் மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தோற்றுவித்தவர் என அறியப்படுகிறது.

## மூலம்

***சுலாலாதூஸ் சாலாத்தின்***

- மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தோற்றுவித்தவர் சுல்தான் இஷ்கந்தர் ஷா என்கிறது.




***சுமா ஓரியண்டல்***

- மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தோற்றுவித்தவர் பரமேஸ்வரா என்கிறது.

(மூலம்: *Suma Oriental Karya Tome Pires: Perjalanan dari Laut Merah ke Cina dan Buku Francisco Rodrigues,* 2014. Jogjakarta: Penerbit Ombak)

### உங்களுக்குத் தெரியுமா?

- சுலாலாதூஸ் சாலாத்தின் நூல் 'செஜாரா மெலாயு' எனவும் அழைக்கப்படுகிறது. இதன் மூலநூலை எழுதியவர் துன் ஸ்ரீ லானாங் ஆவார்.
- போர்த்துகீசிய மூலமான 'சுமா ஓரியண்டல்' நூலை எழுதியவர் தோம் பைரஸ்.

### அறிவுக்கு வேலை

சுமா ஓரியண்டல் நூலின்படி மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தோற்றுவித்தவர் யார்?

# பரமேஸ்வராவின் பின்னணி

1

பரமேஸ்வரா, பலேம்பாங் மலாய் அரசின் இளவரசர் ஆவார்.





2

தமது ஆதிக்கத்திலிருந்த பலம்பாங்கை பரமேஸ்வரா விடுவிக்க முயன்றதால், மஜாபாஹிட் பலேம்பாங்கைத் தாக்கத் திட்டமிட்டது.

3

மஜாபாஹிட் தாக்குதலால் பரமேஸ்வரா தமது ஆதரவாளர்களுடன் பலேம்பாங்கை விட்டுத் தெமாசிக் நோக்கிச் சென்றார்.





4

அறிவாற்றல்மிக்க தலைவரான பரமேஸ்வராவின் அனுபவமே விசுவாசமிக்க ஆதரவாளர்கள், பெருந்தலைவர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றுத் தந்தது.

நாம் ஏன் தலைவர்களின் தலைமைத்துவப் பண்புகளை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்?

**உங்களுக்குத் தெரியுமா?**

தெமாசிக் என்பது சிங்கப்பூரின் பழைய பெயராகும்.

5.2.1
K 5.2.5

**ஆசிரியர் குறிப்பு**

தலைமைத்துவப் பண்புகளை விளங்கிக் கொள்ள வழிகாட்டுதல்.



# அரசமைப்பதில் பரமேஸ்வராவின் பயணம்

பலேம்பாங்கை விட்டு வெளியேறிய பரமேஸ்வராவும் அவரது ஆதரவாளர்களும் தெமாசிக் சென்றடையும் பயணத்தில் பல்வேறு சவால்களைச் சந்தித்தனர்.






**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **Role-Play**

குழுவில், மேற்கண்ட உரையாடலை ஆக்கத்திறனுடன் நடித்துக் காட்டுக.

5.2.2

**ஆசிரியர் குறிப்பு**

- மேற்கண்ட சித்திரங்களின்வழி பரமேஸ்வராவின் பயணத்தை விளங்கிக்கொள்ள வழிகாட்டுதல்.
- பாகமேற்றல் நடவடிக்கையை மேற்கொள்ளத் துணைபுரிதல்.



# மலாக்காவின் தோற்றம்

புதிய அரசை உருவாக்கப் பரமேஸ்வரா வெற்றிகரமாக ஓர் இடத்தைத் தெரிவு செய்தார். இஃது அவர் இணையற்ற தலைவர் என்பதை உறுதிசெய்கிறது.

I பரமேஸ்வரா தமது ஆதரவாளர்களுடன் செனிங் உஜோங்கிலிருந்து பெர்தாம் நதியின் முகத்துவாரத்தை அடைந்தார். அங்கு மீனவக் கிராமம் ஒன்றைக் கண்ட அவர் சில காலம் தங்கினார்.



பெர்தாம் நதி முகத்துவாரத்தில் தமது ஆதரவாளர்களுடன் பரமேஸ்வரா




பரமேஸ்வராவின் மலாக்கா பயணம்

## அறிவுக்கு வேலை

பரமேஸ்வரா தங்கிய மீனவக் கிராமம் எங்கு அமைந்துள்ளது?

2 பரமேஸ்வராவும் அவர்தம் ஆதரவாளர்களும் வேட்டையாடச் சென்றனர். வழியில் வெள்ளைச் சருகுமான் ஒன்று தமது வேட்டை நாயை உதைத்துத் தள்ளி ஆற்றில் விழச் செய்ததைக் கண்டார். சிறிய விலங்கு ஒன்று பெரிய விலங்கைத் தோற்கடித்ததைக் கண்ட பரமேஸ்வரா, அவ்விடத்தை அதிர்ஷ்டம் நிறைந்த இடமாகவும் ஆட்சியமைக்கப் பொருத்தமான இடமாகவும் கருதினார்.

தாம் சாய்ந்திருந்த மரத்தின் பெயரிலேயே ஒரு புதிய அரசை நிறுவ முடிவும் செய்தார்.



தங்கள் நாயை வெள்ளைச் சருகுமான் உதைப்பதைக் காணும் பரமேஸ்வராவும் அவர்தம் ஆதரவாளர்களும்

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** **Kafe**

வகுப்பில் உணவகம் அல்லது காப்பிக் கடை போன்ற சூழலை உருவாக்குக. அரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்த வேண்டியதன் அவசியத்தைக் கலந்துரையாடுக.

5.2.3
K 5.2.7

**ஆசிரியர் குறிப்பு**

மலாக்கா தோற்றுவிக்கப்பட்ட நிகழ்வை விளங்கிக் கொள்ள வழிகாட்டுதல்.

# பல்வேறு மூலங்களிலிருந்து மலாக்காவின் பெயர் பூர்வீகம்

மலாக்கா பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டது. அப்பெயர்கள் பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். உள்ளூர் மூலங்களோடு இந்திய, அரேபிய, மேற்கத்திய மூலங்களும் மலாக்காவின் பெயர் பூர்வீகத்தைப் பதிவு செய்துள்ளன.


1

**சுலாலாதுாஸ் சாலாதின் (Sulalatus Salatin)**

மலாக்கா எனும் பெயர் மலாக்கா மரத்தின் பெயரிலிருந்து தோன்றியதாக சுலாலாதுாஸ் சாலாதின் விவரிக்கின்றது. அது வேட்டை நாயை வெள்ளைச் சருகுமான் ஆற்றில் உதைத்துத் தள்ளியபோது பரமேஸ்வரா சாய்ந்திருந்த மரத்தின் பெயராகும்.



மலாக்கா மரம்




"Apa nama kayu tempat kita berdiri ini?" Maka sembah orang, "Kayu Melaka namanya tuanku, kayu ini". Maka titah baginda, "Jika demikian, Melakalah namanya negeri ini." (*Sulalatus Salatin* hlm. 71)

**அறிவுக்கு வேலை**

*சுலாலாதுாஸ் சாலாதின்* கூற்றின்படி பரமேஸ்வராவின் வேட்டை நாயை ஆற்றில் உதைத்துத் தள்ளிய விலங்கு யாது?

## 2 அரேபிய மூலம்

அரேபிய மூலம் மலாக்காவை 'மலாக்காட்' (Malakat) என்கிறது. அனைத்து வாணிபங்களும் ஒருங்கே நடைபெறும் இடம் என்பது இதன் பொருளாகும்.

(மூலம்: Muhammad Yusoff Hashim, 2015. *Kesultanan Melayu Melaka. Edisi Kedua.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka, hlm.13)



(மூலம்: Muzium Istana Kesultanan Melayu Melaka)

## 3 இந்திய மூலம்

இந்து புராணத்தின்படி மலாக்கா எனும் பெயர் 'அமலாக்கா' எனும் சொல்லிலிருந்து உருவானதாகக் கருதப்படுகின்றது. அமலாக்கா எனப்படுவது உலகில் முதன்முதலில் தோன்றிய மரம் எனப் பொருளாகும்.

(மூலம்: Muhammad Yusoff Hashim, 2015. *Kesultanan Melayu Melaka. Edisi Kedua.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka, hlm.13)



(மூலம்: Muzium Istana Kesultanan Melayu Melaka)

## 4 சுமா ஓரியண்டல்

மலாக்ஹா (Malaqa) எனும் சொல்லிலிருந்து மலாக்கா தோன்றியதாகக் கூறுகின்றது. மலாக்ஹா என்பது பாதுகாப்பிடம் என்ற பொருளைக் குறிக்கிறது.

(மூலம்: A. Cartesao (peny.), *The Suma Oriental of Tome Pires.* Jilid 2, London: Hakluyt Society, hlm. 234)

**அறிவுக்கு வேலை**

அரேபிய மூலத்தின்படி மலாக்கா என்பதன் பொருள் யாது?

பல்வேறு மூலங்களில் மலாக்காவின் பெயர் பூர்வீகம் குறித்த பதிவுகள் உள்ளன. இவை மலாக்கா உலகின் பல்லின மக்கள் சந்திக்கும் மையமாகத் திகழ்ந்துள்ளதை உறுதிசெய்கின்றன. மலாக்காவின் தோற்றம் பிற்காலத்தில் தோன்றிய ஏனைய அரசுகளின் ஆட்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

நாம் நாட்டின் பாரம்பரியத்தை நன்றி உணர்வோடு போற்ற வேண்டும். அத்தோடு, நாட்டின் சுபிட்சத்திற்கும் மேம்பாட்டிற்கும் ஒத்துழைத்துப் பங்காற்ற வேண்டும்.

5.2.4

**ஆசிரியர் குறிப்பு**


மலாக்காவின் பெயரைப் பதிவு செய்த மூலங்களை விளக்குதல்.

# பரமேஸ்வராவின் ஆட்சியில் மலாக்காவின் சிறப்பு

மலாக்கா அரசின் நிர்வாக மையமாகத் திகழப் பல்வேறு சிறப்புகளைக் கொண்டிருந்தது.

**பருவக் காற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டது**

- பருவக் காற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதால் மலாக்கா நீரிணையில் கப்பல்கள் பாதுகாப்பாகப் பயணிக்க முடிந்தது.





பருவக் காற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ள மலாக்காவின் அமைவிடத்தைக் காட்டும் கரைவரைபடம்

**பொருத்தமான அமைவிடம்**

- மலாக்கா கிழக்கு மேற்குக் கடல்வழிப் பாதையின் மத்தியில் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. இது வாணிபம் செய்யவரும் வணிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

**ஆட்சியாளரின் மதிநுட்பம்**

- மலாக்கா மலாய் மன்னராட்சித் திறம் வாய்ந்த வெளிப்படையான நிர்வாகத்தைக் கொண்டிருந்தது. இந்த அணுகுமுறை அந்நிய அரசுகள் மலாக்காவுடன் அரசதந்திர உறவு கொள்ளும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.



பரமேஸ்வராவின் மதிநுட்பம் மலாக்காவில் புதிய அரசு உருவாக வழிவகுத்தது.

மலாக்கா மலாய் மன்னராட்சியின் தோற்றுநரான பரமேஸ்வராவின் பங்கு யாது?

K 5.2.6

21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை

Three Stray, One Stay

# நாட்டை உருவாக்குதல்

## விதிமுறை

1. நால்வர் கொண்ட குழுவில் அமர்தல்.
2. ஒவ்வொரு குழுவிற்கும் மணிலா அட்டையில் காலி இடங்களை நிறைவு செய்ய நேரம் வழங்குதல்.
3. குழு உறுப்பினர்களில் மூவர் பிற நிலையங்களுக்குச் சென்று காணுதல்; ஒருவர் மட்டும் குழுவின் படைப்பை மற்ற குழுவினருக்குப் படைத்தல்.



(மூலம்: Noryatty binti Kiling)

## நீங்கள் ஒரு புதிய நாட்டை உருவாக்கப் போவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

காலி இடங்களைப் பொருத்தமான தகவல்களைக் கொண்டு நிறைவு செய்க.

1. உன் புதிய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக.

______________________________________________________________________

______________________________________________________________________.

2. உன் நாட்டின் கொடியை வரைந்திடுக.

3. உனது நாட்டின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

அ. ____________________________________________.

ஆ. ____________________________________________.

இ. ____________________________________________.

4. ஆட்சியாளர் எனும் வகையில், நான் ...

அ. ______________________________________________________________.

ஆ. ______________________________________________________________.

இ. ______________________________________________________________.

**ஆசிரியர் குறிப்பு**

இப்பக்கத்தை படியெடுத்து வழங்கிடுக.


# உருவாக்குவோம் வாரீர்


## துறைமுக உருமாதிரி

### கருவியும் பொருளும்


பசை


புட்டி மூடி


காலணிப் பெட்டி



பனிக்கூழ் குச்சி



சீனக் களிமண்



கத்தரிக்கோல்


வண்ணத்தாள்


வெட்டப்பட்ட பச்சை, நீல வண்ணத்தாள்களை காலணிப் பெட்டியின்மீது ஒட்டுதல்.


பனிக்கூழ் குச்சியையும் புட்டி மூடியையும் கொண்டு துறைமுக அணைகரையைக் கட்டுதல்.


வண்ணத்தாள்களை மடித்துப் பல்வகைப் படகுகளைத் தயார் செய்தல்.


பச்சை வண்ணத்தாள்களை வெட்டி மரங்களாக உருவாக்குதல்.


சீனக் களிமண்ணைக் கொண்டு மரத்தைக் காலணிப் பெட்டியில் ஒட்டுதல்.


துறைமுக உருமாதிரி தயார்.

**ஆசிரியர் குறிப்பு**

பல்வேறு துறைமுக உருமாதிரிப் படங்களைக் காண்பித்துக் குழுவில் துறைமுக உருமாதிரிகளை உருவாக்க வழிகாட்டுதல்.

## மீட்டுணர்வோம்



**மலாக்கா மலாய் மன்னராட்சித் தோற்றுநரை அறிவோம்**

பலேம்பாங்கைச் சேர்ந்த பரமேஸ்வரா மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தோற்றுவித்தார்.




**பரமேஸ்வராவின் பயணம்**

பலேம்பாங்கிலிருந்து புறப்பட்டு பரமேஸ்வரா தெமாசிக், மூவார், செனிங் உஜோங் வழியாக மலாக்காவை அடைந்தார்.



**மலாக்காவின் தோற்றம்**

வெள்ளைச் சருகுமான் தமது வேட்டை நாயை உதைத்துத் தள்ளிய சம்பவத்தைக் கண்ட பிறகு பரமேஸ்வரா மலாக்காவைத் தோற்றுவித்தார்.




**பல்வேறு மூலங்களிலிருந்து மலாக்காவின் பெயர் பூர்வீகம்**

மலாக்காவின் பெயர் பூர்வீகத்தை உள்ளூர் மூலங்களோடு இந்திய, அரேபிய, மேற்கத்திய மூலங்களும் பதிவு செய்துள்ளன.

இந்த அலகு மலாக்கா மலாய் மன்னராட்சித் தோற்றுநரான பரமேஸ்வராவை நமக்கு அறிமுகம் செய்தது. இனி வரும் அலகு, மலாக்கா மலாய் மன்னராட்சியை ஒரு வலிமை பொருந்திய பேரரசாக உருவாக்கிய பெண்டாஹாரா துன் பேராக்கைக் குறித்து விவரிக்கும்.

## சிந்தித்துப் பதிலளி

1. பரமேஸ்வராவின் மலாக்கா பயணத்தைச் சிந்தனை வரைபடத்தில் நிறைவு செய்க.




2. கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.

(அ) பரமேஸ்வராவின் ஆட்சிக் காலத்தில் மலாக்காவின் மூன்று சிறப்புகளைக் கூறுக.

i. ________________________________

ii. ________________________________

iii. ________________________________

(ஆ) பரமேஸ்வராவின் தலைமைத்துவப் பண்புகளில் மூன்றினைக் குறிப்பிடுக.

i. ________________________________

ii. ________________________________

iii. ________________________________

**ஆசிரியர் குறிப்பு**

இப்பக்கத்தை படியெடுத்து வழங்கிடுக.

# நாட்டை நேசிப்போம்



இஸ்தானா நெகாரா அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்ட மன்னராட்சியின் அடையாளம்
(மூலம்: Koleksi Dewan Bahasa dan Pustaka)

மலாக்கா மலாய் மன்னராட்சி இன்றைய அரசுகளின் உருவாக்கத்திற்கு அடித்தளமாக விளங்குகிறது.





# அலகு 10
# இணையற்ற பெண்டாஹாரா துன் பேராக்



**சாரம்**

துன் பேராக்கை மலாக்கா மலாய் மன்னராட்சியின் இணையற்ற பெண்டாஹாரா எனலாம். இவர் மலாக்காவை மேம்பாடு அடைய செய்த முக்கியத் தலைவர் ஆவார். இந்த அலகு அவரின் வாழ்க்கை வரலாறு, பொறுப்பு, அறிவாற்றல் ஆகியவற்றை விவரிக்கின்றது.

சயாமின் அச்சுறுத்தலை எதிர்கொண்டவேளை மலாக்கா கடலோரப் பகுதியில் தீப்பந்தங்களை ஏற்றி வியூகம் வகுத்தார்.



## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. துன் பேராக்கின் வாழ்க்கை வரலாற்றை அறிதல்.
2. மலாக்காவின் பெண்டாஹாரா எனும் முறையில் துன் பேராக்கின் பங்கைப் பகுத்தாய்தல்.
3. துன் பேராக்கின் அறிவாற்றலை விவரித்தல்.

## குடியியல் நெறி

- கடமையுணர்ச்சி
- மகிழ்ச்சி

## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

1. துன் பேராக்கின் வாழ்க்கை வரலாற்றை அறிதல்.
2. துன் பேராக்கின் பொறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்த சம்பவங்களை விளக்குதல்.

# துன் பேராக்கின் வாழ்க்கை வரலாறு

பெண்டாஹாரா துன் பேராக் மலாக்கா மன்னராட்சியில் முக்கியத் தலைவராவார். அவர் பெருந்தலைவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

| துன் பேராக்கின் தன் விவரம் | |
|---|---|
| பெயர் | துன் பேராக் |
| அப்பாவின் பெயர் | பெண்டாஹாரா ஸ்ரீ வாக் ராஜா துன் பெர்பாத்தே செர்டாங் |
| உடன்பிறந்தோர் | 1. துன் குடு<br>2. துன் பெர்பாத்தே பூத்தே |
| பதவி | 1. கிள்ளான் பெங்குலு<br>2. மலாக்காவின் பெங்குலு பெண்டாஹாரி<br>3. மலாக்காவின் பெண்டாஹாரா |






**அறிவுக்கு வேலை**

துன் பேராக் பெண்டாஹாராவாக நியமிக்கப்படுவதற்குமுன் வகித்த பதவிகள் யாவை?

அருங்காட்சியகக் கண்காட்சிகளைத் தவிர்த்து எவ்வகையில் ஒரு தலைவரின் சேவைகளையும் பங்களிப்பையும் போற்றிட இயலும்?

5.3.1
K 5.3.4

**ஆசிரியர் குறிப்பு**

உரையாடலை விளங்கிக்கொள்ளத் துணைபுரிதல்.

# துன் பேராக்கின் பொறுப்புகள்

துன் பேராக் பெண்டாஹாராவாகப் பொறுப்பேற்றிருந்த காலத்தை மலாக்கா மலாய் மன்னராட்சியின் பொற்காலம் எனலாம். அவர் தலைமைப் பெருந்தலைவர், சுல்தானின் ஆலோசகர், தலைமைத் தூதர், படைத்தளபதி ஆகிய பொறுப்புகளையும் வகித்தார்.

**1. தலைமைப் பெருந்தலைவர்**


- சுல்தான் நோயுற்ற வேளையிலும் வெளிநாடு செல்லும் வேளையிலும் அவரின் பணியை மேற்கொள்ளுதல்.
- சுல்தானின் கட்டளைக்கேற்ப நிர்வாகப் பணியைச் செய்தல்.
- மலாக்காவில் சட்டதிட்டங்கள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்தல்.



மலாக்கா சுல்தானுக்குத் தலை வணங்கும் துன் பேராக்

## 2. சுல்தானின் ஆலோசகர்

- அரசாட்சியில் சுல்தானுக்கு ஆலோசனை கூறுதல்.
- இஸ்லாமிய நெறிப்படி அரசாட்சிப் புரிய சுல்தானுக்கு ஆலோசனை வழங்குதல்.



சுல்தானிடமிருந்து விருது பெறும் துன் பேராக்

### அறிவுக்கு வேலை

துன் பேராக்கின் பணியைக் கூறுக.

## 3. தலைமைத் தூதர்


- சீனா, சயாம் போன்ற பிற அரசுகளுடனான அரசதந்திர உறவைச் செயல்படுத்துதல்.
- பாசாய், சீனா ஆகிய நாடுகளிலிருந்து வரும் தூதர்களை வரவேற்றல்.
- சயாமிற்கு நட்புறவுப் பயணக் குழுவை அனுப்புதல்.



வெளிநாட்டுத் தூதர்களை வரவேற்கும் துன் பேராக்

## 4. படைத் தளபதி

- துன் பேராக் மலாக்கா மலாய் மன்னராட்சிப் பேரரசை விரிவாக்க சுல்தான் மன்சூர் ஷாவிற்கு உதவினார்.
- துன் பேராக் சயாமின் கட்டுப்பாட்டில் இருந்த பகாங்கைத் தோற்கடித்தார்.
- துன் பேராக், உள்நாட்டுப் போரை எதிர்நோக்கிய பாசாய் சுல்தானுக்கு உதவினார்.



போரை எதிர்கொள்ளத் தயாராகும் படைத் தளபதி துன் பேராக்

துன் பேராக் இணையற்ற பெண்டாஹாரா ஆவார். அவர் தலைமைப் பெருந்தலைவர், சுல்தானின் ஆலோசகர், தலைமைத் தூதர், படைத் தளபதி என மிகச் சிறந்த முறையில் பொறுப்பாற்றினார்.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** | **சுயப்படைப்பு**

முன்மாதிரியாக விளங்கும் துன் பேராக்கின் தலைமைத்துவப் பண்புகள் குறித்து தகவல் தொழில்நுட்பச் செயலியின் துணையுடன் வகுப்பில் படைத்திடுக.

5.3.2
K 5.3.5

**ஆசிரியர் குறிப்பு**

பல்வேறு முறைகளையும் உபகரணங்களையும் கொண்டு நடவடிக்கையை மேற்கொள்ள வழிகாட்டுதல்.

# துன் பேராக்கின் அறிவாற்றல்

துன் பேராக்கின் அறிவாற்றல் மலாக்கா மலாய் மன்னராட்சியைச் சிறப்படையச் செய்தது. அவரது அறிவாற்றலை நிர்வாகத்துறை, தற்காப்பு, அரசதந்திர உறவு, இஸ்லாமியச் சமயத்தின் விரிவாக்கம் ஆகியவற்றோடு மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தற்காப்பதிலும் காணமுடிகிறது.

## 1. நிர்வாகம்

துன் பேராக் மலாக்காவின் நிர்வாகத்தில் சுல்தானுக்கும் பெருந்தலைவர்களுக்கும் இடையில் அணுக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தினார். இதன்வழி மலாக்கா பேரரசு தன் ஆதிக்கத்தை மலாயாவிலும் சுமத்திராவின் கிழக்குக் கரையிலும் ரியாவ் லிங்கா தீவுக்கூட்டத்திலும் விரிவடையச் செய்தது.




மலாக்கா மலாய் மன்னராட்சிப் பேரரசு

## 2. தற்காப்பு

துன் பேராக் கடற்கரை நெடுகிலுமுள்ள காண்டா மரங்களில் தீப்பந்தங்களை ஏற்றி வைக்கப் பணித்தார். இது கடலோரப் பகுதியின் நெடுகிலும் ஏராளமான மலாக்கா படைவீரர்கள் தயார் நிலையில் இருப்பது போன்ற தோற்றத்தை அளித்தது. இதைக் கண்ட சயாமியப் படையினர் மலாக்காவைத் தாக்கும் எண்ணத்தைக் கைவிட்டனர்.



சயாமியப் படை மலாக்காவின்மீது தாக்குதல் நடத்துவதைக் கைவிட்டனர்

## 3. அரசதந்திர உறவு

துன் பேராக் அந்நிய அச்சுறுத்தலிலிருந்து மலாக்காவைப் பாதுகாத்து அமைதியை நிலைநிறுத்தினார். மேலும், சயாமிய அரசுடன் நட்புறவை வளர்க்கும் நோக்கில் கடிதம் ஒன்றையும் எழுதினார். சயாமிய அரசர் துன் பேராக்கின் விருப்பத்தை நன்முறையில் வரவேற்றார்.

## 4. இஸ்லாமியச் சமயம்

துன் பேராக் இஸ்லாமிய நெறிகளை உறுதியாகக் கடைப்பிடித்த பெருந்தலைவர் ஆவார். துன் பேராக் மலாக்காவிற்குச் சமயப் போதகர்களின் வருகையை ஊக்குவித்தார். இஸ்லாமிய நெறிகளுக்கேற்ப அரசை வழிநடத்த சுல்தானுக்கு ஆலோசனையும் கூறினார்.

**அருஞ்சொல்**

**தீப்பந்தம் (Jamung):** தென்னை ஓலையிலான தீவட்டி

## 5. மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தற்காத்தல்

துன் பேராக்கின் மகனான துன் பெசார், ராஜா முகமாட்டினால் கொல்லப்பட்டான். தகவல் அறிந்த துன் பேராக் மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தற்காத்தார். அந்தச் சம்பவத்திற்காகப் பழிதீர்க்க எண்ணிய தமது ஆதரவாளர்களையும் தடுத்தார்; சுல்தானுக்கு விசுவாசமாக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார். துன் பேராக்கின் அறிவாற்றலும் இச்சம்பவத்தில் வெளிப்பட்டது.



துன் பெசார் உதைத்த பிரம்புப்பந்து பட்டுக் கீழே விழுந்தது ராஜா முகமாட்டின் தலைப்பாகை

நிர்வாகம் செய்வதிலும் அரசைத் தற்காப்பதிலும் முடிவெடுப்பதிலும் துன் பேராக்கின் அறிவாற்றல் வெளிப்பட்டது. அதுவே, அவர் சுல்தானின் நம்பிக்கையைப் பெறக் காரணமானது.

**அருஞ்சொல்**

**தலைப்பாகை(Destar)**: துணியாலான தலைக்கவசம்

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **Team Word Web**

நால்வர் கொண்ட குழுக்களை உருவாக்குதல். குழுத்தலைவர் வெண்தாளில் 'தலைவர்களுக்கு விசுவாசம் செலுத்தும் பண்பை ஆராய்க' என எழுதுதல். ஒவ்வொரு குழு உறுப்பினரும் தங்கள் ஏடல்களை வெவ்வேறு வண்ணப் பேனாக்களைக் கொண்டு எழுதுதல்; படைத்தல்.

5.3.3
K 5.3.6

# விரைவில் விளையாடியவர் யார்?

**விளையாடும் முறை**

1. இவ்விளையாட்டு தனியாள் முறையில் நடத்தப்படும்.
2. எல்லாக் கேள்விகளுக்கும் முதலில் பதிலளிப்பவரே வெற்றியாளர்.

**1**
தொடக்கம்

**2**
துன் பேராக் சேவையாற்றிய சுல்தான்கள் யாவர்?
____________.

**3**
துன் பேராக் எங்குப் பெங்குலுவாக நியமிக்கப்பட்டார்?
________________.

**4**
மலாக்கா மலாய் மன்னராட்சிக் காலத்தில் வெளிப்பட்ட துன் பேராக்கின் அறிவாற்றலைக் குறிப்பிடுக.

**5**
துன் பேராக்கின் தந்தை பெயர் என்ன?
________________.

**6**
மலாக்கா மலாய் மன்னராட்சியில் துன் பேராக்கின் பொறுப்பு யாது?
________________.

**7**
சயாம் ஏன் மலாக்காவிற்கு எதிரான தாக்குதலைக் கைவிட்டது?
__________________.

**8**
துன் பேராக்கின் பொறுப்புகளிலிருந்து முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய நற்பண்புகள் யாவை?
____________.

**9**
முடிவு

**ஆசிரியர் குறிப்பு**

- ஆசிரியர்களின் ஆக்கச் சிந்தனைக்கேற்ப இந்நடவடிக்கையை மேற்கொள்ள வழிகாட்டுதல்.
- இப்பகுதியைப் படியெடுத்து வழங்கிடுக.

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை**

## பாடல் வரிகளின்வழி கற்றல்

ஜோங் ஜோங் ஈனாய் எனும் பாடலின் மெட்டுக்கேற்ப ஆக்கத்திறன் கொண்டு படைப்பு ஒன்றனைக் குழுவில் படைத்திடுக.

Jong Jong Inai
Mak Ipong Rajawali (2x)

Jong Jong Inai
Mak Ipong Rajawali
Sepak tunggul inai
Berdarah ibu kaki.

Salam saudari kami dendangkan
Kisah Tun Perak bijak bangsawan
Tokoh terbilang jadi teladan
Dihormati setiap lapisan.

Wahai Tun Perak yang dihormati
Menjadi pemimpin bijak bestari
Marilah semua kita contohi
Teladan beliau kita patuhi.



QR நோக்குக் குறியீட்டை நுணுக்குக.

ஜோங் ஜோங் ஈனாய் பாடல்

**ஆசிரியர் குறிப்பு**

பாடலைப் பாட வழிகாட்டுதல்.

## மீட்டுணர்வோம்



**துன் பேராக்கின் வாழ்க்கை வரலாறு**

துன் பேராக் மலாக்காவின் பெண்டாஹாராவாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் கிள்ளான் பெங்குலுவாகவும் மலாக்கா பெங்குலு பெண்டாஹாரியாகவும் இருந்துள்ளார்.



**துன் பேராக்கின் பொறுப்புகள்**

தலைமைப் பெருந்தலைவர், சுல்தானின் ஆலோசகர், தலைமைத் தூதுவர், படைத்தளபதி ஆகிய பொறுப்புகளைத் துன் பேராக் வகித்துள்ளார்.



**துன் பேராக்கின் அறிவாற்றல்**

துன் பேராக்கின் அறிவாற்றலை நிர்வாகம், தற்காப்பு, அரசதந்திர உறவு, இஸ்லாமியச் சமய விரிவாக்கம் ஆகிய துறைகளோடு மலாக்கா மலாய் மன்னராட்சியைத் தற்காத்தலிலும் காண முடிகிறது.

இந்த அலகு துன் பேராக்கின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் வகித்த பொறுப்புகளையும் விவரிப்பதோடு மலாக்கா மலாய் மன்னராட்சியைப் புகழின் உச்சத்திற்குக் கொண்டு சென்ற அவரின் அறிவாற்றலையும் குறித்து விளக்குகின்றது. இனி அடுத்த அலகு, மலாக்கா மலாய் மன்னராட்சியின் மற்றொரு இணையற்ற தலைவராக விளங்கிய லக்சமணா ஹங் துவாவைக் குறித்து விவரிக்கும்.

## சிந்தித்துப் பதிலளி

துன் பேராக் தொடர்பான தகவல்களை நிறைவு செய்க.

செய்தி

# வரலாறு



## துன் பேராக் என்பவர் யார்?

**தன் விவரம்:**

______________________________

______________________________

______________________________

______________________________

**பொறுப்புகள்:**

______________________________

______________________________

______________________________

______________________________

**நற்பண்புகள்:**

துன் பேராக் தலைமைத்துவத்தில் காணப்பட்ட நற்பண்புகள்

______________________________

______________________________

**வாழ்க்கை வரலாறு**

கிள்ளானின் பெங்குலுவாக நியமனம் செய்யப்பட்டார்.

______________________________

______________________________


சுல்தான் மாமுட் ஷாவின் ஆட்சிக்காலத்தில் காலமுற்றார்.

**ஆசிரியர் குறிப்பு**

- துன் பேராக் தொடர்பான தகவல்களை நிறைவு செய்யத் துணைபுரிதல்.
- இப்பக்கத்தைப் படியெடுத்து வழங்கிடுக.

# நாட்டை நேசிப்போம்

நாட்டின் நிலைத்தன்மையை உறுதிசெய்வதில் தலைவர்களின் ஆற்றலும் அறிவும் முக்கியக் கூறுகளாகத் திகழ்கின்றன.






நாட்டின் நிர்வாக மையமாகத் திகழும் புத்ரா ஜெயா


(மூலம்: Dewan Bahasa dan Pustaka)



# அலகு 11

# இணையற்ற லக்சமணா ஹங் துவா



## சாரம்

ஹங் துவா மலாக்கா மலாய் மன்னராட்சியின் இணையற்ற லக்சமணாவாகத் திகழ்ந்தார். இவரின் தலைமைத்துவத்தை அறிந்த மலாக்கா சுல்தான் இவரை லக்சமணாவாக நியமித்தார். இந்த அலகு லக்சமணா ஹங் துவாவின் வாழ்க்கை வரலாறு, சிறப்புத் தன்மைகள், பொறுப்புகள் ஆகியவற்றைக் குறித்து விவரிக்கின்றது.

(மூலம்: Muzium Negara)

## நீங்கள் கற்கப் போவது என்ன?

1. ஹங் துவாவின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுதல்.
2. லக்சமணா ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகளை விளக்குதல்.
3. மலாக்காவின் லக்சமணா என்னும் வகையில் ஹங் துவாவின் பொறுப்புகளைப் பகுத்தாய்தல்.

## AKPS அடிப்படை வரலாற்றுச் சிந்தனைத்திறன்

1. ஹங் துவாவின் வாழ்க்கை வரலாற்றை விளக்குதல்.
2. ஹங் துவாவிடம் காணப்படும் சிறப்புத் தன்மைகளை அடையாளங்காணல்.

## குடியியல் நெறி

- கடமையுணர்ச்சி
- மதித்தல்



ஹங் துவாவையும் அவரது நண்பர்களையும் காட்டும் சுவர் சிலை வேலைபாடுகள்
(மூலம்: Hang Tuah Center, Melaka)



# ஹங் துவாவின் வாழ்க்கை வரலாறு

ஹங் துவா மலாக்கா மலாய் மன்னராட்சியின் இணையற்ற தலைவராகத் திகழ்ந்தார். இவரது அறிவாற்றலைக் கண்ட மலாக்கா சுல்தான், இவரை லக்சமணாவாக நியமனம் செய்தார்.












ஹங் துவா துணிவும் சுறுசுறுப்பும் நிறைந்தவர். ஒரு சமயம் ஹங் துவா மதம் பிடித்த ஆடவன் ஒருவனிடமிருந்து பெண்டாஹாராவைக் காப்பாற்றினார். பெண்டாஹாரா, ஹங் துவாவை மலாக்காவின் லக்சமணாவாக நியமிக்கப் பரிந்துரை செய்தார். அவரது தோழர்கள் நால்வரும் தளபதிகளாக நியமிக்கப்பட்டனர்.




ஹங் துவா லக்சமணாவாகத் தமது பணியைப் பொறுப்புடன் செய்தார்.

**அறிவுக்கு வேலை**

ஹங் துவாவின் நண்பர்களைக் குறிப்பிடுக.




தூதுக் குழுவிற்குத் தலைமையேற்றுச் சீனாவிற்குச் சென்ற வேளையில் எவருக்கும் காணக்கிடைக்காத சீன மாமன்னரின் முகத்தை வெற்றிகரமாகக் கண்டார்.




ஹங் துவா தமது அறிவாற்றலால் மலாக்கா சுல்தானை மணமுடிக்க துன் தேஜாவைச் சம்மதிக்க வைத்தார். அவர் துன் தேஜாவை மலாக்காவிற்கு அழைத்தும் வந்தார்.




ஹங் துவாவின்மீது அவதூறு கூறப்பட்டது. சுல்தான் அவருக்கு மரண தண்டனை விதித்தார். ஆயினும், பெண்டாஹாரா, ஹங் துவாவைத் தலைமறைவாக இருக்கச் செய்து காப்பாற்றினார்.




ஹங் ஜெபாட் தமது நண்பரான ஹங் துவாவின் மரணத்திற்குப் பழிதீர்க்கப் போவதாகக் கூறி மதங்கொண்டு அலைந்தார்.




சுல்தான் தமது தவற்றை உணர்ந்து வருந்தினார். பெண்டாஹாரா, ஹங் துவா உயிரோடு இருப்பதைத் சுல்தானுக்குத் தெரிவித்தார். மலாக்காவின் அமைதியை நிலைநாட்ட சுல்தான் ஹங் துவாவிற்கு ஆணையிட்டார்.




ஹங் துவா, ஹங் ஜெபாட்டை வீழ்த்தினார். ஹங் துவா மலாக்காவின் லக்சமணாவாக மீண்டும் நியமிக்கப்பட்டார். அவருடைய பங்களிப்பு மலாக்கா மலாய் மன்னராட்சியைப் பொற்காலத்திற்கு இட்டுச் சென்றது.

(மூலம்: Kassim Ahmad,1992. *Hikayat Hang Tuah,* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka)

சுல்தானால் பதவி வழங்கப்படும் சாதாரண மனிதர் ஒருவரின் நிலை சமுதாயத்தில் உயர்கிறது என்பதை ஹங் துவாவின் வாழ்க்கை வரலாறு மெய்ப்பிக்கின்றது.

மலாக்காவின் லக்சமணா எனும் நிலையில் ஹங் துவாவின் விசுவாசத்தை விளக்குக.

5.4.1
K 5.4.4

**ஆசிரியர் குறிப்பு**

மலாக்காவின் லக்சமணாவாக ஹங் துவாவின் விசுவாசத்தை விளக்கத் துணைபுரிதல்.

# ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள்

ஹங் துவா சுல்தான் மன்சூர் ஷாவின் காலத்தில் மலாக்காவின் லக்சமணாவாக நியமிக்கப்பட்டார். ஹங் துவாவிடமிருந்த சிறப்புத் தன்மைகள் மலாக்கா மலாய் மன்னராட்சிக்குப் பங்காற்றுவதில் பெரிதும் துணைபுரிந்தன.

**அறிவாற்றல்**

- அறிவாற்றலைக் கொண்டு போர் புரிந்து தாமிங் சாரியை வீழ்த்தினார்.
- அதிகாரப்பூர்வப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள 12 மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார்.






**நேர்மையும் நம்பிக்கையும்**

- வளமான நாட்டை உருவாக்கிட தமது பணிகளை நேர்மையுடன் செய்தார்.


**கடமையுணர்வு**

- மலாக்காவின் கடற்பகுதியைப் பாதுகாத்தார்; உலகப் புகழ்பெற்ற வாணிப மையமாகத் திகழச் செய்தார்.
- சீனா, இந்தியா, துருக்கி ஆகிய நாடுகளுக்குத் தூதுவராகச் சென்றவேளையில் மலாக்காவின் நற்பெயரைக் காத்தார்.



**அறிவுக்கு வேலை**

ஹங் துவாவிடம் காணப்படும் சிறப்புத் தன்மைகளைக் கூறுக.



### விசுவாசம்

- விசுவாசத்துடன் சுல்தானின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தார்.

### துணிவு

- மதம் கொண்டு அலைந்த ஆடவன் ஒருவனிடமிருந்து பெண்டாஹாரா துன் பேராக்கைக் காப்பாற்றினார்.
- பாத்தே காஜா மாடா அனுப்பிய மஜாபாஹிட் கூலிப்படையை ஹங் துவா வீழ்த்தினார்.





### சீலாட் கலையில் ஆற்றல் கொண்டவர்

- சீலாட் கலையில் திறமை பெற்றிருந்தார்.
- தமது குருவான ஆரியாபுத்ராவிடமிருந்து சீலாட் கலையைக் கற்றுத் தேர்ந்தார்.

ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள் மலாக்கா மலாய் மன்னராட்சியின் நிலைத்தன்மைக்கும் வளப்பத்திற்கும் வழிவகுத்தன.

5.4.2
K 5.4.5

**ஆசிரியர் குறிப்பு**

ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகளை அறிந்து கொள்ளத் துணைபுரிதல்.




# ஹங் துவாவின் பொறுப்புகள்

லக்சமணா மலாக்கா எனும் முறையில் ஹங் துவாவிற்கு மலாக்கா மலாய் மன்னராட்சியில் முக்கியப் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. அவர் தலைமைத்துவப் பண்புகளையும் சிறப்புத் தன்மைகளையும் கொண்டிருந்தார். இவை கடமையை உணர்ந்து செயலாற்றுவதில் அவருக்குத் துணையாக இருந்தன.

மலாக்கா என்னும் மண்ணிலே
மாண்புடன் பிறந்த தலைவரிவர்
இணையற்ற எங்கள் மாவீரர்
இறையாண்மைக் காத்திட வந்தவர்




சுல்தானுக்கு விசுவாசம்



கடற்படைத் தலைவர்

பிறந்த மண்ணின் நலம்வேண்டி
பரந்த கடலைக் காத்திட்டவர்
எதிரிகள் கூட்டத்தை அழித்திட்டே
அமைதியை அங்கே விதைத்தவர்

ஆற்றல் மிகுந்த தலைவரிவர்
ஹங் துவா என்பதவரின் பெயர்
விரிந்த மலாக்கா பேரரசின்
வீரமிகு அரசக் காவலர்




சுல்தானின் காவலர்

அரசரின் ஆணைக்குத் தலைவணங்கி
அழகிய லெடாங் மலையதிலே
அரசியைத் தேடியே சென்றவர்
உடனவரையும் அழைத்து வந்தவர்



சுல்தானின் கட்டளையை நிறைவேற்றுதல்



வணிகர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துதல்

மலாக்கா வந்த வணிகர்களை
மறித்த திருடர் கூட்டத்தையே
வளைத்துப் பிடித்த வீரர் அவர்
வணிகர் மனதைக் குளிரச் செய்தார்

மலாக்கா நீரிணைப் பகுதியிலே
மலர்ந்தது மீண்டும் அமைதியுமே
வணிகர்க் கூட்டமும் நிறைந்ததுவே
வாணிபத் துறையும் வளர்ந்ததுவே




கடற்பரப்பின் அமைதியைக் காத்தல்



துன் தேஜா

துவாவின் பேச்சில் தனை மறந்து
துன் தேஜாவும் சம்மதம் சொன்னாரே
தேஜாவைக் கப்பலில் ஏற்றிவந்து
தம் ராஜாவிடமே சேர்த்தாரே

தாமிங் சாரியைத் தோற்கடிக்க
திறமுடன் சண்டையும் செய்தாரே
கிரிஸையும் வெற்றி கொண்டாரே
கீர்த்தியும் நிரம்பப் பெற்றாரே


ஹங் துவா தாமிங் சாரியுடன் சண்டையிடுகிறார்


சீனாவிற்குத் தலைமையேற்றுச் சென்றது

சீன அரசரின் முகம்பார்க்க
சிந்தித்தார் அவரும் ஒருவழியை
வெட்டாத கீரையை மேலெடுத்து
வேந்தரின் முகத்தையும் கண்டாரே

**21ஆம் நூற்றாண்டுக் கல்வி நடவடிக்கை** — **Think-Pair-Share**

1. நாட்டின் இறையாண்மையைக் காத்திட நம்மிடம் இருக்க வேண்டிய பண்புகள் பற்றியத் தகவல்களைத் திரட்டுதல்.
2. குழு உறுப்பினர்களுக்குச் சிந்திக்க நேரம் வழங்குதல். இணையாகக் கலந்துரையாடச் செய்தல்.
3. குழு உறுப்பினர் திறமுனைப் படைப்பு மூலம் விடையைப் பகிர்ந்து கொள்ளுதல்.

**ஆசிரியர் குறிப்பு**
மலாக்காவின் லக்சமணா என்னும் முறையில் ஹங் துவாவின் பங்கை அறியச் செய்தல்.

5.4.3
K 5.4.6

## விளையாட்டு நடவடிக்கை

அ. ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள்.

**விளையாடும் முறை**

1. மூன்று அல்லது நான்கு குழுக்களை அமைத்தல்.
2. குழுத்தலைவர் ஒருவரை நியமித்தல்.
3. குழுத்தலைவர் வகுப்பின்முன் வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிருந்து ஒரு கேள்வி அட்டையை எடுத்தல்.
4. அட்டையின் பின்புறம் உள்ள கூற்றுகளின் அடிப்படையில் குழு உறுப்பினர்கள் ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகளை அடையாளங்காணல்.
5. குழுத்தலைவர், ஹங் துவாவின் சிறப்புத் தன்மையை அட்டையின் முன்புறம் எழுதுதல்.
6. விடையளித்த பின்னர் கேள்வி அட்டையை மீண்டும் பெட்டியில் வைத்துவிட்டு வேறு அட்டையை எடுத்தல்.
7. குழுவினர், பெட்டியில் வைக்கப்பட்டுள்ள எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளித்தல்.
8. ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள் குறித்த கேள்விகளுக்கு விரைவாகவும் சரியாகவும் பதிலளிக்கும் குழுவே வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.

**அட்டையின் பின்புறம் உள்ள கூற்று**

**மதங்கொண்டு அலைந்த ஆடவன் ஒருவனிடமிருந்து பெண்டாஹாராவைக் காத்தார்.**

**அட்டையின் முன்புறம்**

**ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள்**



**ஆசிரியர் குறிப்பு**

- கேள்விகளுக்குப் பதிலளிக்கத் துணைபுரிதல்.
- விளையாட்டு நடவடிக்கையை ஆசிரியரின் ஆக்கத்திறனுக்கு ஏற்ப நடத்தலாம்.
- ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள் தொடர்பான வேறு கூற்றுகளையும் இணைக்கலாம்.

## விளையாட்டு நடவடிக்கை

ஆ. சொற்குவியலில் விடைகளைக் கண்டுபிடித்திடுக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஹ | ஹ | ச | ர் | ல | ஹ | வி | சு | வா | ச | ம் |
| ர் | ங் | கி | ந | க | வி | ம் | ணா | ர் | ச | து |
| ச | லெ | ஜெ | ணா | மு | ப | ட | பெ | ந | வி | ணி |
| க | க் | ச் | பா | ம் | ஜ | க | ங் | க | த் | வு |
| மு | கி | ர் | ல | ட் | ஹ | ங் | லெ | க் | யூ | து |
| ல | ர் | ந | வி | க | து | ப | வி | ர் | க | ப |
| க | கி | மு | க் | ச | ர் | டு | கி | கி | வி | ல |
| ம் | ல | ப | கி | ஹ | டி | ப | ர் | தி | ற | மை |
| து | ந | ம் | பி | க் | கை | ர் | டு | ந | ர் | ச |
| க | ப | மு | க | ச | ர் | க | ணா | நே | மு | கி |
| ஹ | ங் | க | ஸ் | தூ | ரி | ர் | ம் | ல | ணா | ந |

**ஹங் துவாவின் தோழர்கள்**

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________

**ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள்**

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________

## நடவடிக்கை

உன் குடும்ப உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து முன்மாதிரியாகக் கொள்ளக் கூடிய அவரின் சிறப்புத் தன்மைகளை ஆராய்ந்திடுக.

பெயர்:

வயது:

உறவுமுறை:

| எண் | குடும்ப உறுப்பினர் சிறப்புத் தன்மைகள் | சூழல் |
|---|---|---|
| 1 | சுறுசுறுப்பு | தந்தையின் மகிழுந்தைக் கழுவ உதவுதல் |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |



**ஆசிரியர் குறிப்பு**

தேர்ந்தெடுத்த குடும்ப உறுப்பினரின் சிறப்புத் தன்மைகளை விளங்கிடத் துணைபுரிதல்.

## மீட்டுணர்வோம்



**ஹங் துவாவின் வாழ்க்கை வரலாறு**

ஹங் துவா மலாக்கா மலாய் மன்னராட்சியில் பொறுப்புடன் சேவையாற்றிய ஒரு லக்சமணா ஆவார்.



**ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள்**

அறிவாற்றல், பொறுப்புணர்வு, துணிவு, விசுவாசம், நேர்மை போன்ற சிறப்புத் தன்மைகளை பெற்றிருந்ததோடு ஹங் துவா நம்பத்தகுந்தவராகவும் சீலாட் கலையில் கைதேர்ந்தவராகவும் விளங்கினார்.



**ஹங் துவாவின் பொறுப்புகள்**

ஹங் துவா கடற்படைத் தலைவராகவும் சுல்தானின் காவலராகவும் பொறுப்பு வகித்தார். அத்தோடு, அவர் அரசக் கட்டளையை நிறைவேற்றுதல், வணிகர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல், மலாக்கா கடற்பகுதியின் அமைதியை நிலைநாட்டுதல் போன்ற சீரிய பொறுப்புகளையும் ஏற்றிருந்தார்.

## சிந்தித்துப் பதிலளி

அ. ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகளை எழுதுக.

**ஹங் துவாவின் சிறப்புத் தன்மைகள்**

1. **துணிவு**
   பெண்டாஹாரா துன் பேராக்கை மதங்கொண்டு அலைந்த ஆடவன் ஒருவனிடமிருந்து காப்பாற்றினார்.
2. ______________________
   ______________________________________
   ______________________________________
3. ______________________
   ______________________________________
   ______________________________________
4. ______________________
   ______________________________________
   ______________________________________
5. ______________________
   ______________________________________
   ______________________________________
6. ______________________
   ______________________________________
   ______________________________________


ஆ. வட்ட வரைபடத்தை நிறைவு செய்க.

**ஹங் துவாவின் பொறுப்புகள்**

- சுல்தானின் காவலர்
- ______________
- ______________
- ______________
- ______________

# நாட்டை நேசிப்போம்

தலைவர்களின் பங்களிப்பை அறிவதும் உய்த்துணர்வதும் குடிமக்களிடையே மதிக்கத்தக்க பண்புகளை வித்திடும்.






தன்னாற்றல்மிக்க தலைவர்களின் தலைமைத்துவத்தைச் சார்ந்தே நாட்டின் சுபிட்சம் அமைகிறது.

(மூலம்: Tourism Malaysia)

# துணைநூல் பட்டியல்


A. Bakar Hamid, 1979. *Peristiwa-peristiwa dari Hikayat Hang Tuah*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

A. Samad Ahmad, 1983. *Sulalatus Salatin* (*Sejarah Melayu*). Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

A. Samad Ahmad, 2015. *Sulalatus Salatin* (Edisi Pelajar). Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Abd. Rahim Abd. Rashid, 1999. *Pendidikan Sejarah: Falsafah, Teori dan Amalan*. Kuala Lumpur: Utusan Publication and Distributors Sdn. Bhd.

Abdul Rahman Haji Abdullah, 1994. *Pengantar Ilmu Sejarah*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Abdullah Zakaria Ghazali, 2018. *Kesultanan Melayu Melaka Penelitian Semula 1262–1528*. Melaka: Institut Kajian Sejarah dan Patriotisme Malaysia.

Abu Hassan Sham, 1982. *Diskusi Peristiwa-peristiwa dari Hikayat Hang Tuah*. Kuala Lumpur: Penerbit Sarjana.

Ahmad Jelani Halimi, 2008. *Sejarah dan Tamadun Bangsa Melayu*. Kuala Lumpur: Utusan Publications and Distributors Sdn. Bhd.

Ahmad Jelani Halimi, 2006. *Perdagangan dan Perkapalan Melayu di Selat Melaka*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Andaya, Barbara, 2007. "*Malacca*" dlm. Clifford Edmund Bosworth. *Historic Cities of the Islamic World*. Netherland: Brill Academic Publishers.

Arba'iyah Mohd Noor, 2002. *Ilmu Sejarah dan Pensejarahan*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Baker, Stuart, 2012. *Perubahan Iklim di Artik*. Diterjemah oleh Nor Idatul Akmar Zulkipli. Kuala Lumpur: Institut Terjemahan Negara Malaysia Berhad

Bellwood, P., 1997. *Prehistory of the Indo-Malaysian Archipelago*. Honolulu: University of Hawaii Press.

Carr, E.H., 1998. *Apakah Sejarah*? Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Freeman, Michael dan Jacques, Claude, 2007. *Ancient Angkor*. Bangkok: Rivers Book Ltd.

Goh Cheng Leong, 2010. *Atlas Sumber dalam Geografi Fizikal*. Kuala Lumpur: Institut Terjemahan Negara Malaysia Berhad

Hall, D.G.E., 1987. *Sejarah Asia Tenggara*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Hasanuddin Yusof, 2017. *Teknologi Kesultanan Melaka*: *Membongkar Keagungannya Berdasarkan Catatan Portugis*. Negeri Sembilan: Cintai Publication.

Kamaludin Hassan, 1998. "*The Postglacial and Holocene Periods*" dlm. *Early History, The Malaysia Encyclopedia*, Jilid 4. Editions Didier Millet Pte. Ltd.

Kamaludin Hassan, 1998. "*The Pleistocene Age or Ice Age Period*" dlm. *Early History, The Malaysia Encyclopedia*, Jilid 4. Editions Didier Millet Pte. Ltd.

Kassim Ahmad, 1992. *Hikayat Hang Tuah*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Khoo Kay Kim (ed)., 1982. *Melaka dan Sejarahnya*. Melaka: Persatuan Sejarah Malaysia.

Kong Yuanzhi, 2000. *Cheng Ho Muslim Tionghoa: Misteri Perjalanan Muhibah di Nusantara*. Jakarta: Yayasan Pustaka Obor Indonesia.

Lorna, *et al*., 2003. *Great Civilizations of The East*. London: Annes Publishing.

Maspero, Georges, 2002. *The Champa Kingdom, The History of Extinct Vietnamese Culture*. Bangkok: White Lotus.

Muhammad Yusoff Hashim, 2015. *Kesultanan Melayu Melaka.* Edisi Kedua. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Muhd Yusof Ibrahim, 1986. *Ilmu Sejarah: Falsafah, Pengertian dan Kaedah*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Muhd Yusof Ibrahim, 1986. *Pengertian Sejarah*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Nik Hassan Shuhaimi Nik Abdul Rahman (ed)., 1998. *Encyclopedia of Malaysia: Early History*. Singapura: Editions Didier Millet Pte. Ltd.

Nik Hassan Shuhaimi Nik Abdul Rahman dan Zuliskandar Ramli (ed)., 2018. *Prasejarah dan Protosejarah Tanah Melayu*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Noraida Mat Saman, 2011. *Johor Darul Takzim*. Kuala Lumpur: Arus Intelek.

Noraida Mat Saman, 2011. *Sabah Negeri di Bawah Bayu*. Kuala Lumpur: Arus Intelek.

Noraida Mat Saman, 2011. *Sarawak Bumi Kenyalang*. Kuala Lumpur: Arus Intelek.

Roshen Dalal, 2010. *The Compact Timeline History of The World*: Cambridge: Worth Press.

Rozeman Abu Hassan, 2004. *Mengenali dan Mentafsir Sumber Sejarah*. Shah Alam: Karisma Publications Sdn. Bhd.

Saat Sulaiman, 2012. *Ibu Bapa Mithali*. Selangor: PTS Millennia.

Shellabear,W.G., 1982. *Sejarah Melayu*. Kuala Lumpur: Fajar Bakti Sdn. Bhd.

Sivarajan, P., Malar Arasi, S. dan Elangko, M., 2011. *Pengantar Sejarah*. Puchong: Penerbitan Multimedia Sdn. Bhd.

Skinner, Brian J., S.C. Porter dan J. Park, 2013. *Dynamic Earth*. Fifth Edition. London: John Willey & Sons.

Suntharalingam, R., 1985. *Pengenalan kepada Sejarah*. Kuala Lumpur: Merican and Sons (M) Sdn. Bhd.

Tunku Halim, 2016. *Sejarah Malaysia* (*Ensiklopedia Kanak-kanak*). Selangor: MPH Publishing.